# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2213/2 - 2021 පෙබරවාරි මස 01 වැනි සඳුදා - 2021.02.01

2213/2 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய அறிவித்தல்கள்

**லங்காசெட்டில்**
**முறைமை விதிகள்**

**01.02.2021 அன்று வெளியிடப்பட்டது**

**(31.12.2020 வரை உள்ளடக்கப்பட்ட திருத்தங்கள்)**

பதிப்பு 2.2

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

**லங்காசெட்டில் முறைமை விதிகள்**

**ஆவண வரலாறு:**

| இல. | பதிப்பு | இதுவரையிலான திருத்தங்கள் | நாணயச் சபையிலிருந் தான ஒப்புதல் திகதி | விடுக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| 1. | 1.0 | முதல் பதிப்பு- 29.08.2003 | 14.08.2003 | 29.08.2003 |
| 2. | 2.0 | 31.03.2009 | 17.08.2009 | 01.09.2009 |
| 3. | 2.1 | 31.03.2013 | 23.07.2013 | 01.08.2013 |
| 4. | 2.2 | 31.12.2020 | 06.01.2020 | 01.02.2021 |


1A - G 33623 - 26 (2021/02)



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## தொகுதி 1

## பொதுவான ஏற்பாடுகள்

### பொருளடக்கம்


**1. முறைமை பற்றிய பொதுநோக்கு ........ 4A**

1.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ........ 4A

1.1.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு ........ 4A

1.1.2 தேறிய அடிப்படையில் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு ........ 4A

1.2 லங்காசெகுயர் முறைமை - பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் மத்திய வைப்பக முறைமை ........ 4A

1.3 முறைமைக் கூறுகள் ........ 5A

**2. பொதுவான ஏற்பாடுகள் ........ 7A**

2.1 பொருள் விளக்கம் ........ 7A

2.2 ஆளுகின்ற சட்டவாக்கம் ........ 11A

2.3 முறைமை விதிகளின் நோக்கம் ........ 11A

2.4 முறைமை விதிகளுக்கான திருத்தங்கள் ........ 11A

2.5 மொழிப் பதிப்புகள் ........ 11A

2.6 முறைமையில் பங்கேற்பாளராவதற்கான தகைமைகள் ........ 11A

2.7 லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்றல் ........ 12A

2.8 பங்கேற்பாளராவதற்கான முற்தேவைப்பாடுகள் ........ 12A

2.9 கோரிக்கைகளை மதிப்பிடுதல் ........ 12A

2.10 தகவல்/ அறிவித்தல் பற்றிய கடமைகள் ........ 13A

2.10.1 பங்கேற்பாளர்களின் தொழிற்பாடுகளில் மாற்றங்கள் ........ 13A

2.10.2 கொடுப்பனவுப் பாய்ச்சலில் இடையூறுகள் ........ 13A

2.11 அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்கள் ........ 13A

2.12 கட்டணங்களும் விதிப்பனவுகளும் ........ 13A

2.12.1 கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் நிர்ணயம் பற்றிய அறிவித்தல் ........ 13A

2.12.2 கட்டண மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் ........ 13A

2.13 இடைநிறுத்தல், முடிவுறுத்துதல், புறக்கீடு செய்தல் அல்லது பங்கேற்பாளரொருவரை மற்றுமொரு பங்கேற்பாளர் கையேற்றல் ........ 14A

2.13.1 இடைநிறுத்தலுக்கான, முடிவுறுத்தலுக்கான, புறக்கீடு செய்தலுக்கான அல்லது பங்கேற்பாளரொருவரை மற்றுமொரு பங்கேற்பாளர் கையேற்பதற்கான அறிவித்தல் காலம் ........ 14A

2.13.2 இடைநிறுத்தல், முடிவுறுத்துதல், புறக்கீடு செய்தல் அல்லது பங்கேற்பாளரொருவரை மற்றுமொரு பங்கேற்பாளர் கையேற்றல் மீதான கடப்பாடுகள் ........ 14A

2.13.3 விளக்கம் கோரலும் சீரமைத்தலும் ........ 15A

2.14 முறைமைத் தொழிற்பாடுகளுக்கான அணுகுவழி ........ 15A

| | | |
|---|---|---|
| 2.15 | பொறுப்பாணை உடன்படிக்கையுடன் அல்லது சுவிப்ற்றுடன் இசைவின்மை …………………….. | 15A |
| 2.16 | பங்கேற்பாளர்களுக்கான சுவிப்ற் ஆவணமாக்கல் ………………………………………………… | 15A |
| 2.17 | முறைமை விதிகளை இடைநிறுத்தல் …………………………………………………………….. | 15A |
| 2.18 | மூன்றாந் தரப்பினர்களுக்கான ஒப்படைப்பு ………………………………………………………… | 16A |
| 2.19 | இரகசியத்தன்மை ………………………………………………………………………………… | 16A |
| **3.** | **உரிமைத்துறப்புகளும் பொறுப்புகளின் வரையறையும் ………………………………………………….** | 16A |
| 3.1 | வலுக்கட்டாய நிலைமை ………………………………………………………………………….. | 16A |
| 3.2 | பொறுப்பு வரையறை …………………………………………………………………………… | 17A |
| 3.3 | பின்விளைவு இழப்புக்கள் ………………………………………………………………………… | 17A |
| 3.4 | நட்டோத்தரவாதம் ……………………………………………………………………………… | 17A |
| 3.5 | கடன் தீர்க்க வகையற்ற நிலைமையின் மீது எதிரீடு செய்தல் ………………………………….. | 17A |

## 1. முறைமை பற்றிய பொதுநோக்கு

இலங்கை மத்திய வங்கிக்கு சொந்தமானதும் அதனால் தொழிற்படுத்தப்படுகின்றதுமான லங்காசெட்டில் முறைமை இரண்டு துணைத் துறைகளைக் கொண்டுள்ளது. அவையாவன:

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை;
மற்றும் லங்காசெக்குயர் முறைமை.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கோட்பாடுகளைப் பயன்படுத்தி பங்கேற்பாளர் கணக்குகளுக்கிடையில் நிதியங்களை மாற்றல் செய்கின்றது மற்றும் தீர்ப்பனவு செய்கின்றது. தீர்ப்பனவுகள் பங்கேற்பாளர்களின் வாடிக்கையாளர்களிடமிருந்தான கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகின்றன. லங்காசெகுயர் முறைமையானது பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினையும் பத்திரங்களற்ற வடிவில் விநியோகிக்கப்படும் அரசாங்கப் படுகடன் பிணையங்களினதும் மத்திய வங்கியின் பிணையங்களினதும் உரிமையாளரை இலத்திரனியல் ரீதியாகப் பதிவுசெய்கின்ற மத்திய வைப்பக முறைமையினையும் கொண்டுள்ளது. பிணையங்களின் கொடுக்கல்வாங்கலுக்காக, லங்காசெட்டில் முறைமை வழங்கல் எதிர் கொடுப்பனவுப் பொறிமுறைக்கு ஆதரவளிக்கின்றவிடத்து பிணையங்களின் சொத்துடமை மாற்றமுறும் நிதியங்களின் அடிப்படை மாற்றலும் அதேநேர அடிப்படையில் சமகாலத்தில் தேறல் செய்யப்படுகின்றன.

### 1.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை

#### 1.1.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் கொடுக்கல்வாங்கல்கள் வேண்டப்படுகின்றபோதும் வேண்டப்படுகின்றவாறும் அவை முறைமையில் பதியப்படுகின்றபோது தனிப்பட்ட அடிப்படையிலும் அதேநேரத்திலும் செயன்முறைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலிலும், முழுமையான கொடுக்கல்வாங்கல் பெறுமதியினையும் வழங்குவதற்கு கொடுப்பனவு நிறுவனத்தின் தீர்ப்பனவு கணக்கில் போதுமான நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்றபோது தொடர்புடைய பெறுமதியினை பணம் செலுத்துநரின் கணக்கிலிருந்து பணம் பெறுநர் இலங்கை மத்திய வங்கியுடன் பேணுகின்ற கணக்கிற்கு மாற்றல் செய்வதன் மூலம் உடனடியாகத் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. மாற்றலானது முறைமையில் பதிவு செய்யப்படுகின்றபோது, தீர்ப்பனவொன்று மாற்றமுடியாததும் இறுதியானதுமாகவுமிருக்கும். எவ்வாறாயினும், நிதி போதாதிருப்பின், கொடுப்பனவு செய்கின்ற நிறுவனத்தின் கணக்கில் போதிய நிதியங்கள் கிடைக்கப்பெறும்வரை கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் ஒழுங்குவரிசையில் சேமிக்கப்படும்.

#### 1.1.2 தேறிய அடிப்படையில் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் அனைத்து கொடுக்கல்வாங்கல்களையும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை கோட்பாடுகளுக்குட்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை. முறைமையின் மொத்தத் தீர்ப்பனவுகளானவை குறைந்த – பெறுமதியினைக் கொண்ட உயர்ந்த - அளவு கொடுப்பனவு வகையிலிருந்து (உதாரணம் - காசோலைகள் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை மற்றும் வேறு இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்களூடாக குறைந்த பெறுமதி இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள்) தோன்றுகின்ற கடப்பாடுகளின் பிற்போடப்பட்ட தேறியவற்றுடன் இணைந்திருக்கும். பங்கேற்பாளர் கடப்பாடுகளின் இப்பிந்திய கொடுத்துத்தீர்த்தல்கள், பல்புடை தேறிய தீர்ப்பனவு அடிப்படையில் லங்காசெட்டில் முறைமையில் காலாந்தர அடிப்படையில் தொகுதிகளாக செயன்முறைப் படுத்தப்படுகின்றன.

### 1.2 லங்காசெகுயர் முறைமை - பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் மத்திய வைப்பக முறைமை

பின்வரும் வசதிகளை லங்காசெகுயர் முறைமை வழங்குகின்றது

- பத்திரங்களற்ற வடிவில் வழங்கப்படுகின்ற அரசாங்கப் படுகடன் பிணையங்களையும் மத்திய வங்கி பிணையங்களையும் வைத்திருப்பதற்கான இலத்திரனியல் வைப்பக வசதி
- தனிப்பட்ட முதலீட்டாளர்களின் பிணையங்களின் உரித்துக்களையும் கணக்கு நிலுவைகளையும் பதிவு செய்வதற்கான மத்திய பதிவகம்
- அதேநேர வழங்கல் - எதிர் - கொடுப்பனவு அடிப்படையினூடக பத்திரங்களற்ற பிணையங்கள் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தற்கான பொறிமுறை
- தொடர்பான நிதிய மாற்றலின்றி கணக்குகளுக்கிடையில் பிணையங்களை மாற்றல் செய்வதற்கும் (இலவசமாக விநியோகித்தல் மற்றும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளல்) அத்துடன் ஒரு பங்கேற்பாளரின் கணக்குகளுக்கிடையில் (மீள்நிலைப்படுத்தல்) பிணையங்களின் அசைவுகள் என்பவற்றுக்கான பொறிமுறை அத்துடன்
- முறைமையில் திரவத்தன்மையினைப் பேணுவதற்கு ஒரு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக்கான பிணையுறுதியினை ஒதுக்கீடு செய்வதற்கான பொறிமுறை.

**1.3 முறைமைக் கூறுகள்**

பின்வரும் கூறுகளூடாக லங்காசெட்டில் முறை தொழிற்படுகிறது.

i. பங்கேற்பாளர் மேலோடி பணிநிலையம்

ii. இலங்கை மத்திய வங்கி மேலோடி பணி நிலையம்

iii. சுவிப்ற் பின் வை-பிரதிச் சேவை மற்றும் பின் நெற்வோர்க் உள்ளடங்கலாக சுவிப்ற்நெற்


iv. இலங்கை மத்திய வங்கியுடன் லங்காசெட்டில் பங்கேற்பாளர்களினை இணைக்கின்ற சீபிஎஸ்எல் நெற்

v. பல்புடை தேறிய தீர்ப்பனவு தொகுதிக் கோவை செயன்முறைப்படுத்தலுக்கான (சிலிப்ஸ், காசோலைத் தீர்ப்பனவு மற்றும் இலத்திரனியல் சில்லறை கொடுப்பனவுகள் என்பவற்றுக்கான) லங்காகிளியர் (பிறைவட்) லிமிட்டெட்டிற்கான இணைப்பு அத்துடன்

vi. அரசாங்க படுகடன் பிணையங்களுக்கான வாடிக்கையாளர் வெப்தள விசாரணை வசதி

கீழுள்ள வரைபடம் முறைமை பற்றிய பொதுநோக்கினை அதன் கூறுகளுடன் சேர்த்துக் காண்பிக்கின்றது. முறைமைக்கூறுகளின் தொழிற்பாடுகள் 2 மற்றும் 3 தொகுதிகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**வரைபடம் 1: லங்காசெட்டில் முறைமையின் பொதுநோக்கு**



2. பொதுவான ஏற்பாடுகள்

2.1 பொருள் விளக்கம்

இம்முறைமை விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையினால் தேவைப்படுத்தினாலன்றி

"உரிமை பெறல் ஒப்பந்தம்" என்பது, பங்கேற்பாளர் மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பவற்றுக்கிடையில் நிறைவேற்றப்பட வேண்டிய இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படும் ஒப்பந்தம் என்று பொருளாகும்.

"கணக்குகள்" என்பது, தீர்ப்பனவுக் கணக்கு மற்றும் பிணையங்கள் கணக்குகள் என்று பொருளாகும்.

"கணக்கு மாற்றல்கள்" என்பது, தீர்ப்பனவு கணக்கு மாற்றல்கள் அத்துடன்/ அல்லது பிணையங்கள் கணக்கு மாற்றல்கள் என்று பொருளாகும்.

"கணக்கு வகைகள்" என்பது, லங்காசெகுயர் முறைமையில் பங்கேற்பாளரொருவரின் மூலம், அல்லது பங்கேற்பாளர்கள் வகுப்புகள் மூலம் பேணப்படுவதற்கு ஒழுங்கு விதிகளினால் மற்றும் முறைமை விதிகளினால் தேவைப்படுத்தப் படும் பல்வேறு வகையான பிணையக் கணக்குகள் என்று பொருளாகும்.

"பின்னூட்டல் வசதிகள்" என்பது, மேலோடிக் இடைமுகத்தின் அல்லது சுவிப்ற் இடைமுகத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் செயலிழப்பொன்றினை அல்லது பழுதொன்றின் அல்லது வேறு பிரச்சினையினை கையாளுவதற்கு முறைமை விதிகளின் நியதிகளுக்கமைவாக பேணுவதற்கு பங்கேற்பாளரொருவர் தேவைப்படுத்தப்பட்டுள்ள முறைமை அல்லது நடைமுறைகள் என்று பொருளாகும்.

"வணிகர் நேரடி பங்கேற்பாளரொருவர் தொடர்பில் பயன்பெறும் உரிமையாளர் அல்லது வாடிக்கையாளர்" என்பது பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களை/ முறிகளை அல்லது அதனிலுள்ள நலனை அத்தகைய உண்டியல்/ முறி அல்லது நலனின் சாத்தியமான கையேற்பிற்கு அல்லது கையுதிர்ப்பிற்கு வணிகர் நேரடிப் பங்குபற்றுதலுடன் ஒப்பந்தம் பேசுகின்றவர்களூடாக பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களை/ முறிகளை அல்லது அதன் நகலொன்றை கொள்வனவு செய்கின்ற அல்லது விற்பனை செய்கின்ற அல்லது வேறுவகையில் கையேற்கின்ற கையுதிர்க்கின்ற எவரேனும் ஆள் என்று பொருளாவதுடன், சூழ்நிலை அவ்வாறு அனுமதிக்கின்ற அத்தகைய வாடிக்கையாளரின் பிரதிநிதியொருவரை அல்லது அத்தகைய வாடிக்கையாளரின் மரணச் சொத்தின் சட்ட ரீதியான பிரதிநிதியொருவரை உள்ளடக்குதல் வேண்டும்.

"வணிக நாள்" என்பது, லங்காசெட்டில் முறைமையூடாக கொடுக்கல்வாங்கலின் தீர்ப்பனவிற்காக இலங்கை மத்திய வங்கி திறந்துள்ள ஒருநாள் என்று பொருளாகும்.

"இலங்கை மத்திய வங்கி" என்பது, 1949இன் 58ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நாணயச் சபை என்று பொருளாகும்.

"மத்திய வங்கிப் பிணையங்கள்" என்பது, 1949இன் 58ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் பிணையங்கள் என்று பொருளாகும்.

"சீபிஎஸ்எல் நெற்" என்பது, இலங்கை மத்திய வங்கியினால் தாபிக்கப்பட்டுள்ள லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளரையும் இணைக்கின்ற தரவுத் தொடர்பூட்டல் வலையமைப்பு என்று பொருளாகும்.

"வாடிக்கையாளர்" என்பது, பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்திலும் உள்ளூர் திறைசேரி கட்டளைச்சட்டத்திலும் அவற்றுக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே சொற்பதம் என்று பொருளாகும்.

"வணிக நேரடிப் பங்கேற்பாளர்" என்பது, பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தினதும் உள்ளூர் திறைசேரி கட்டளைச்சட்டத்தினதும் நியதிகளுக்கமைவாக இலங்கை மத்திய வங்கியினால் வணிக நேரடிப் பங்கேற்பாளரொருவாக நியமிக்கப்பட்ட எவரேனும் நேரடிப் பங்கேற்பாளர் என்று பொருளாகும்.

"வழங்கல் - எதிர் - கொடுப்பனவு" என்பது, பத்திரங்களற்ற தீர்ப்பனவு முறைமைக்கும் (பிணையங்கள் மாற்றல் முறைமை) மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவிற்கும் (நிதிய மாற்றல் முறைமை) இடையிலான தொடர்பு என்று பொருளாகும். இது, ஒப்படைப்பு நிகழும்போது மாத்திரம் கொடுப்பனவு நிழுகின்றது என்பதை உறுதி செய்கின்றது.

"பெயர் குறிக்கப்பட்ட வணிகர் அல்லாத விலைக் குறிப்பீட்டாளர்" என்பது அதன் சொந்தக் கணக்குக்காக மாத்திரம் பிணையங்களை வைத்திருக்கின்ற மற்றும் வர்த்தகப்படுத்துகின்ற முதனிலை ஏலங்களில் பங்கேற்பதற்கு பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தினதும் உள்ளூர் திறைசேரி கட்டளைச்சட்டத்தினதும் நியதிகளுக்கமைவாக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்.

"நேரடி பங்கேற்பாளர்" என்பது, பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தினதும் உள்ளூர் திறைசேரி கட்டளைச்சட்டத்தினதும் நியதிகளுக்கமைவாக இலங்கை மத்திய வங்கியினால் நேரடி பங்கேற்பாளரொருவாக நியமிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று, முதனிலை வணிகரொருவர் அல்லது வேறு எவரேனும் ஆளொருவர் என்று பொருளாகும்.

"பிணக்கு" என்பது, இவ்விதிகளில் இருந்து தோன்றுகின்ற அல்லது ஏதேனும் வாயிலாக இணையப் பெற்ற இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்பாளரொருவருக்குமிடையிலான இணக்கமின்மை என்று பொருளாகும். ஆனால் பங்கேற்பாளரொருவரின் மேற்பார்வையாளராக அல்லது ஒழுங்குமுறைப்படுத்துனராக அதன் இயலளவில் ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களின், அதிகாரத்தின் அல்லது தொழிற்பாடுகளின் கீழ் அல்லது அதன் பயனாக இலங்கை மத்திய வங்கி மூலமான ஏதேனும் செயற்பாட்டுடன் அல்லது செய்யப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட அல்லது செய்யப்படுவதற்காகக் கருதப்பட்ட விடயத்திலிருந்து தோன்றுகின்ற அல்லது இணையப்பெற்ற ஏதேனும் பிணக்கு அல்லது கருமம் உள்ளடக்கப்படலாகாது.

"இறுதி வெட்டு நேரம்" என்பது, இலங்கை மத்திய வங்கியினால் வேறு வகையில் குறித்துரைக்கப்பட்டா லன்றி இவ்விதிகளின் தொகுதி 4 இன் 1.2ஆம் விதியிலுள்ள நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணையில் லங்காசெட்டில் முறைமையில் அலுவல்களை மூடுவதற்காக குறித்துரைக்கப்பட்ட நேரம் என்று பொருளாகும்.

"அரசாங்க பிணையங்கள்" என்பது, இலங்கை அரசாங்கம் சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படுகின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்று பொருளாகும்.

"கட்டமைப்பை நிறுத்துதல்" என்பது, பங்கேற்பாளரொருவரின் ஏதேனும் அறிவித்தலை நிறைவேற்றத் தவறுதலானது (தொடர்புடைய கணக்கில் போதிய நிதியங்கள் அல்லது பிணையங்கள் கிடைக்காமையின் காரணமாக) பங்கேற்பாளரொருவரின் அல்லது பங்கேற்பாளர்களின் அல்லது அதே பங்கேற்பாளரின் ஏதேனும் வேறு அறிவுறுத்தலை நிறைவேற்றுவதனைத் தடுக்கின்ற லங்காசெட்டில் முறைமையில் தோன்றக் கூடிய நிலைமை யொன்று என்று பொருளாகும்.

"அறிவுறுத்தல்" என்பது, கொடுப்பனவு அறிவித்தலொன்று அல்லது பிணையங்கள் மாற்றல் அறிவித்தலொன்று என்று பொருளாகும்.

"ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி" என்பது, நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி ஒப்பந்த நியதிகளுக்கமைய பங்கேற்பாளரொருவருக்கான இலங்கை மத்திய வங்கியினால் நிதியங்களை வழங்குதல் என்று பொருளாகும்.

"ஒரு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி ஒப்பந்தம்" என்பது, இலங்கை மத்திய வங்கியுடன் பங்கேற்பாள ரொருவர் செய்துகொள்ளுகின்ற இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட ஒப்பந்தமொன்று என்று பொருளாகும்.

"லங்காசெகுயர் முறைமை" என்பது, நாணய விதிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியினால் நிறுவப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் மத்திய வைப்பக முறைமையென்று பொருளாகும்.

"லங்காசெட்டில் முறைமை" என்பது, நாணய விதிச்சட்டத்திற்கமைய இலங்கை மத்திய வங்கியினால் நிறுவப்பட்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்காசெகுயர் முறைமை என்று பொருளாகும்.

"உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்" என்பது, வங்கித்தொழில் வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துவதற்கு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1988இன் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு கீழ் உரிமம் பெற்ற வங்கியொன்று என்று பொருளாகும்.

"உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கி" என்பது, வைப்புப் பணத்தினை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் அத்தகைய பணத்தினை முதலிடுதல் மற்றும் கடன் வழங்குதல் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1988இன் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் கம்பனி அல்லது கூட்டு நிறுவனமொன்று என்று பொருளாகும்.

"உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம்" என்பது, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1923இன் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி கட்டளைச் சட்டம் என்று பொருளாகும்.

"பொறுப்பாணை உடன்படிக்கை" என்பது, அத்தகைய பங்கேற்பாளர்களின் தீர்ப்பனவு கணக்கு மற்றும் பிணையங்கள் கணக்குகளை இலங்கை மத்திய வங்கியினால் பராமரித்து தொழிற்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியுடன் பங்கேற்பாளரொருவர் செய்துகொள்கின்ற இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படும் உடன்படிக்கை என்று பொருளாகும்.

"பொருந்தச்செய்தல்" என்பது, கொடுக்கல்வாங்கல் நியதிகள் தொடர்பில் தொடர்புடைய தரப்பினர் இணங்குகின்றனர் என்பதனை உறுதி செய்வதற்கு அவர்கள் மூலம் முறைமைக்கு பதிவுசெய்யப்படுகின்ற அறிவுறுத்தல்களின் வர்த்தக/ தீர்ப்பனவு விபரங்களை ஒப்பீடு செய்கின்ற செயன்முறை என்று பொருளாகும்.

“ஆகக் குறைந்த நிலுவைத் தேவைப்பாடு” என்பது, முறைமை விதிகளின் நியதிகளுக்கமைய அனைத்து நேரங்களிலும் பங்கேற்பாளலொருவரின் தீர்ப்பனவுக் கணக்கொன்றில் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆகக் குறைந்த நிலுவை என்று பொருளாகும்.

“நாணயச் சபை” என்பது, நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை என்று பொருளாகும்.

“நாணய விதிச் சட்டம்” என்பது, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1949இன் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம் என்று பொருளாகும்.

“பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி” அல்லது “தேறிய தீர்ப்பனவுத் தொகுதி” என்பது, முறைமை விதிகளில் விவரிக்கப்பட்டவாறு தேறிய கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு (கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமையொன்றை மேற்கொள்வதிலிருந்து தோன்றுகின்ற) இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட பல்வகை பற்றுகள் மற்றும் வரவுகள் தொடர்புபடுகின்ற தீர்ப்பனவுக் கணக்கு மாற்றலொன்று என்று பொருளாகும்.

“திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்” என்பது, நாணய விதிச்சட்டத்தின் அத்தியாயம் ஏ இன் பகுதி ஏ கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் என்று பொருளாகும்.

“உத்தியோகபூர்வ விலைகள்” என்பது, ஒரு நாளுக்கிடையிலான திரவத்தன்மை வசதிக்கான பிணைய உறுதியாக முன்வைக்கப்படுகின்ற பிணையங்களை மதிப்பிடும் நோக்கத்திற்காக அத்துடன் லங்காசெகுயர் முறைமையில் பதிவுசெய்யப்படுகின்ற இலங்கை மத்திய வங்கியினால் நாளாந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்ற விலைகள் என்று பொருளாகும்.

“கொடுப்பனவு அறிவுறுத்தல்” என்பது, முறைமை விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட படிவமொன்றிலும் விதத்திலும் லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்பாளர் ஒருவரின் தீர்ப்பனவு கணக்கில் பற்று வைத்து வேறொரு பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பங்கேற்பாளரொருவரினால் தோற்றுவிக்கப்படும் அறிவுறுத்தலொன்று என்று பொருளாகும்.

“பங்கேற்பாளர்” என்பது, இணக்க ஒப்பந்தமொன்றினை நிறைவேற்றி லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமென்று பொருளாகும்.

“இலங்கையில் வதிகின்ற ஆள்” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க செலாவணிச் சட்டத்தில் அல்லது அதனை நீக்குகின்ற ஏதேனும் வேறு சட்டத்தில் அதற்கு குறித்தொதுக்கப்பட்டவாறான பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

“இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆள்” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க செலாவணிச் சட்டத்தில் அல்லது அதனை நீக்குகின்ற ஏதேனும் வேறு சட்டத்தில் அதற்கு குறித்தொதுக்கப்பட்டவாறான பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

“வாக்குறுதி” என்பது, ஒழுங்குவிதிகளில் அதற்கு குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டது.

“முதலாந்தர ஏலம்” என்பது, இலங்கை அரசாங்கம் சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் கொடுப்பனவுக்கு எதிராக முதனிலை வணிகர்களுக்கும் பெயர் குறிக்கப்பட்ட வணிகர் அல்லாத விலைக் குறிப்பீட்டாளர் களுக்கும் பத்திரங்களற்ற பிணையங்களில் ஆரம்ப ஒதுக்கீடு வழங்கலும் என்று பொருளாகும்.

“முதனிலை வணிகர்” என்பது, ஆரம்ப ஏலங்களில் பங்கேற்பதற்கும் தமக்காகவும் ஏனையோருக்காகவும் பத்திரங்களற்ற பிணையங்களை வைத்திருப்பதற்கும் கொடுக்கல்வாங்கல் செய்வதற்கும் உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் முதனிலை வணிகரொருவராக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட நிறுவனமொன்று என்று பொருளாகும்.

“அதேநேர மொத்தத் தீர்ப்பனவு” என்பது, மொத்த அடிப்படையில் அதேநேரத்தில் கொடுப்பனவுக் கடப்பாடுகளை செயன்முறைப்படுத்தல் மற்றும் தீர்த்தல் என்று பொருளாகும்.

“பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம்” என்பது, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1937இன் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்று பொருளாகும்.

“ஒழுங்கு விதிகள்” என்பது, லங்காசெட்டில் முறைமைக்கும் அதன் தொழிற்பாடுகளுக்கும் ஏற்புடைய நாணய விதிச்சட்டம், உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் என்று பொருளாகும்.

"மீள்கொள்வனவு ஒப்பந்தம்" என்பது, இணங்கிய திகதியில் இணங்கிய நியதிகளில் அத்தகைய பிணையங்களை திரும்ப வாங்குவதற்கான பொறுப்பேற்றலொன்றின் அடிப்படையில் ஒரு தரப்பினர் மற்றொருவருக்கு பத்திரங்களற்ற பிணையங்களை விற்பனை செய்வதற்கு இணங்குதல் என்று பொருளாகும்.

"நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தம்" என்பது, உடன்பட்ட திகதியில் உடன்பட்ட நியதிகளில் அத்தகைய பிணையங்களை திரும்ப விற்பனை செய்வதற்கு அத்தகைய தரப்பினர் மூலமான பொறுப்பேற்றலொன்றின் அடிப்படையில் மற்றொருவரிடமிருந்து பத்திரங்களற்ற பிணையங்களை வாங்குவதற்கு ஒரு தரப்பினர் உடன்படுகின்ற ஒப்பந்தமொன்று என்று பொருளாகும்.

"பத்திரங்களற்ற பிணையங்கள்" என்பது, உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் முறையே வழங்கப்படுகின்ற பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் அத்துடன் நாணய விதிச் சட்டத்தின் கீழ் பத்திரங்களற்ற வடிவில் வழங்கப்படும் மத்திய வங்கி பிணைகள் என்று பொருளாகும்.

"பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள்" என்பது, உள்ளூர் திறைசேரி கட்டளைச் சட்டத்தின் கீழ் பத்திரமற்ற வடிவில் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள் என்று பொருளாகும்.

"பத்திரங்களற்ற திறைசேரி முறிகள்" என்பது, பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பத்திரங்களற்ற வடிவிலான முறிகள் என்று பொருளாகும்.

"பிணையங்கள் கணக்கு" என்பது, அல்லது ஒழுங்கு விதிகள் மற்றும் முறைமை விதிகளுக்கமைவாக அத்தகைய பங்கேற்பாளரின், அத்துடன் அத்தகைய பங்கேற்பாளர் வணிகர் நேரடி பங்கேற்பாளரொருவராக இருப்பின் அதன் வாடிக்கையாளர்களின் பத்திரங்களற்ற பிணைங்களின் உரித்தினையும் ஏனைய விவரங்களையும் பதிவுசெய்வதற்கு நேரடி பங்கேற்பாளரொருவர் மூலம் லங்காசெகுயர் முறைமையில் பேணப்படும் கணக்கொன்று என்று பொருளாகும்.

"பிணையங்கள் கணக்கு மாற்றல்" என்பது, இரண்டு பங்கேற்பாளர்களின் பிணையங்கள் கணக்குகளில் பற்று வைத்தல் மற்றும் வரவு வைத்தல் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட பங்கேற்பாளரொருவரின் இரண்டு பிணையங்கள் கணக்குகளுக்கிடையிலான பிணையங்களை மாற்றல் செய்தல் என்று பொருளாகும்.

"பிணையங்கள் மாற்றல் அறிவுறுத்தல்" என்பது, லங்காசெகுயர் முறைமையில் குறித்துரைத்த பிணையங்கள் கணக்கொன்றிலிருந்து வேறொரு குறித்துரைத்த பிணையங்கள் கணக்கிற்கு குறித்துரைத்த பத்திரங்களற்ற பிணையங்களை மாற்றல் செய்வதற்கு இரண்டு பங்கேற்பாளர்கள் மூலம் தொடங்கப்பட்ட, முறைமை விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட வடிவமொன்றில் மற்றும் விதமொன்றில் அறிவுறுத்தலொன்று அல்லது அத்தகைய பங்கேற்பாளரின் பிணையங்கள் கணக்குகளுக்கிடையில் குறித்துரைத்த பத்திரங்களற்ற பிணையங்களை வைப்பிடுவதற்காக பங்கேற்பாளரொருவர் மூலமான அறிவுறுத்தலொன்று என்று பொருளாகும்.

"தீர்ப்பனவு" என்பது, கொடுப்பனவு அறிவுறுத்தல், தீர்ப்பனவு கணக்கு மாற்றல், பிணையங்கள் மாற்றல் அறிவுறுத்தல் அல்லது பிணையங்கள் கணக்கு மாற்றல் என்பனவற்றில் அறிவிக்கப்பட்ட தொடர்புடைய கணக்குகளுக்கான பற்றுகளின் மற்றும் வரவுகளின் பெறுமதிக்கான வெற்றிகரமான மாற்றுப் பதிவுகளாகும்.

"தீர்ப்பனவுக் கணக்கு" என்பது, வைப்பு ஒதுக்குகளை பேணுதல், கொடுப்பனவுகளைத் தீர்த்தல் மற்றும் பங்கேற்பாளர் மத்தியில் நிலுவைகளைத் தீர்ப்பனவு செய்தல் என்பவற்றுக்காகவும் வாடிக்கையாளர்கள் மத்தியில் பத்திரங்களற்ற பிணையங்கள் கொடுப்பனவுக்காக கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்காகவும், அத்தகைய பங்கேற்பாளருக்கு ஏற்புடையவாறு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எவையேனும் நோக்கங்களுக்காக நாணய விதிச் சட்டங்களுக்கிணங்க இலங்கை மத்திய வங்கியுடன் பங்கேற்பாளர் ஒருவர் மூலம் பேணப்படுகின்ற கணக்கொன்று என்று பொருளாகும்.

"தீர்ப்பனவுக் கணக்கு மாற்றல்" என்பது இலங்கை மத்திய வங்கியினால் தொடங்கப்பட்ட இரண்டு பங்கேற்பாளர் களின் தீர்ப்பனவுக் கணக்குகளில் பற்று வைத்தல் அல்லது வரவு வைத்தல் என்று பொருளாகும்.

"முறைமை விதிகள்" என்பது, காலத்திற்குக் காலம் திருத்தப்படக் கூடியவாறான நாணய விதிச் சட்டத்தின் நியதி களுக்கு அமைவாக வெளியிடப்பட்ட இவ்விதிகள் என்று பொருளாகும்.

"சுவிப்ற்" என்பது, உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்பூட்டலுக்கான சங்கம் என்று பொருளாகும்.

"சுவிப்ற் இடைமுகம்" என்பது, பங்கேற்பாளர்கள் லங்காசெட்டில் முறைமைக்கு கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் மற்றும் பிணையங்கள் அறிவுறுத்தல்கள் என்பவற்றை அனுப்புகின்ற கணனி அடிப்படையிலான முனையம் என்று பொருளாகும்.

"பெறுமதித் திகதி" என்பது, கொடுக்கல் வாங்கலொன்றின் தீர்ப்பனவு மேற்கொள்ளப்படவேண்டிய திகதி என்று பொருளாகும்.

இம்முறைமை விதிகளில்:

அ. ஒருபாலினைக் குறித்துக்காட்டுகின்ற சொற்கள் அடுத்த பாலினையும் உள்ளடக்குகின்றன;

ஆ. பன்மை எண்ணிக்கை ஒருமையினையும் மறுதலையாகவும் உள்ளடக்குகின்றது;

இ. இலகுவான உசாவுகைக்காக தலைப்புகள் உட்சேர்க்கப்பட்டுள்ளதுடன் இவ்விதிகளின் பொருள் விளக்கத்தினை மாற்றியமைக்காது;

ஈ. ஏதேனும், சட்டவாக்கத்திற்கான தொடர்பொன்று அச்சட்டத்தினை மற்றும் அச்சட்டத்தின் திருத்தங்களை, மீள் சட்டவாக்கத்தை அல்லது அச்சட்டத்தின் நீக்கத்தினை தொடர்ந்து ஆக்கப்படும் அல்லது வெளியிடப்படும் ஏதேனும் நியதிச்சட்ட ஒழுங்கு விதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது சாதனங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

**2.2 ஆளுகின்ற சட்டவாக்கம்**

திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக இம்முறைமை விதிகள் வெளியிடப்படுகின்றன.

**2.3 முறைமை விதிகளின் நோக்கம்**

முறைமை விதிகளின் குறிக்கோள்கள் பின்வருவனவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதாகும்

(அ) லங்காசெட்டில் முறைமையில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி மற்றும் பங்கேற்பாளர் என்பவற்றிற்கிடையிலான சட்டரீதியான உறவுகள் அத்துடன்

(ஆ) கணக்கு வைத்திருப்பவர்களான பங்கேற்பாளர்களினதும் தீர்ப்பனவு முகவராக மற்றும் முறைமையின் தொழிற்படுத்துனரான இலங்கை மத்திய வங்கியினதும் அலுவல்சார் இடைத்தொடர்புகள்

**2.4 முறைமை விதிகளுக்கான திருத்தங்கள்**

இலங்கை மத்திய வங்கியானது காலத்துக்குக்காலம் முறைமை விதிகளின் உள்ளடக்கங்களை மாற்றலாம் அத்துடன் சேர்க்கலாம் அல்லது நீக்கலாம் என்பதுடன் திருத்தப்பட்ட விதிகள், பங்கேற்பாளர்களைப் பிணிக்கும்.

பங்கேற்பாளர்கள் முறைமை விதிகளுக்கான மாற்றங்களுக்காக முன்மொழிவுகளைப் இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அத்தகைய முன்மொழிவுகள், எழுத்திலும் அத்துடன் முன்மொழியப்படுகின்ற மாற்றத்தின் நோக்கத்தினையும் தன்மைகளையும் முழுமையாக விபரிப்பதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய முன்மொழிவுகளை இலங்கை மத்திய வங்கி பரிசீலிக்கும், ஆயினும், ஏதேனும் அத்தகைய நடைமுறைசார் அல்லது முறைமை மாற்றத்தினை நடைமுறைப்படுத்துவது பற்றிய ஏகபோக தற்றுணிவினை அதுவே கொண்டிருக்கும்.

இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ள முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மற்றும் சேர்த்தல்கள் பற்றி இலங்கை மத்திய வங்கியினால் பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்படும். திருத்தங்கள் இடம்பெறுவதற்கு குறைந்தது 30 நாட்களுக்கு முன்னர் அத்தகைய அறிவித்தல்கள் அனுப்பப்படும் எவ்வாறாயினும் அத்தகைய அறிவித்தல்:

- சட்டத் தொழிற்பாட்டினால் அல்லது நீதிமன்றத் தீர்மான தொழிற்பாட்டினால் அல்லது தீர்ப்புக்களினால் திருத்தம் செய்யப்பட்டிருப்பின் அல்லது சேர்க்கப்பட்டிருப்பின் அத்துடன்
- இலங்கை மத்திய வங்கியானது விசேட காரணங்கள் காணப்படுகின்றது என கருத்திற்கொள்ளுமாயின்

30 நாட்களை விடக் குறைந்த காலத்தில் அனுப்பப்படலாம்

**2.5 மொழிப் பதிப்புகள்**

முறைமை விதிகள் அனைத்து மூன்று மொழிகளிலும் கிடைக்கப்பெறுகின்றன.

**2.6 முறைமையில் பங்கேற்பாளராவதற்கான தகைமைகள்**

பின்வரும் நிறுவன வகைகள் பங்கேற்பாளராவதற்குத் தகைமைபெறுகின்றன:

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

(அ) உரிமம்பெற்ற சிறப்பியல்பு வங்கிகள்

(இ) முதனிலை வணிகர்கள்

(ஈ) பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் நேரடி பங்கேற்பாளர்களாக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட தரப்பினர்கள்

**2.7 லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்றல்**

லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்பதற்கு தகைமையுடைய நிறுவனமொன்று தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் தகவல்களுடன் சேர்த்து முறையான கோரிக்கையொன்றினை பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரியில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்பாளராக இருப்பதற்கு நிறுவனமொன்று இலங்கையில் அதன் வதிவிடத்தை அல்லது கிளையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். பங்கேற்பானது அதன் கொடுப்பனவுக் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்காக ஒவ்வொரு பங்கேற்பாளரும் லங்காசெட்டில் முறைமைக்கு கட்டாயமாக நேரடியாக இணைக்கப்பட்டுள்ள தனியொரு அடுக்கு உறுப்புரிமைக் கட்டமைப்பின் மீதானதாகவிருக்கின்றது.

கோரிக்கையினைப் பரிசீலித்த பின்னர், லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்பதற்காக கோரிக்கை விடுக்கின்ற நிறுவனத்தின் தகைமைகளை எடுத்துக்காட்டி பங்கேற்பதற்கு அனுமதிக்கப்பட்டதன் மீது நிறுவன மானது இத்தொகுதியில் 2.8 ஆம் விதியில் (ஊ) விடயத்தில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களை இலங்கை மத்திய வங்கியுடன் கைச்சாத்திடுவதன் மூலம் முறைமை விதிகளினால் பிணிக்கப்படுகின்றது.

**2.8 பங்கேற்பாளராவதற்கான முற்தேவைப்பாடுகள்**

லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்பாளரொருவராக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு பின்வரும் முற்தேவைப்பாடுகளை தகைமைபெற்ற நிறுவனமொன்று நிறைவு செய்தல் வேண்டும்

அ. முறைமை விதிகளிலிருந்து நிகழுகின்ற உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைப் பிணிக்கின்ற விதத்தில் பொறுப்பேற்பதற்குச் செல்லுபடியான சட்ட ரீதியான அந்தஸ்த்தும் இயலளவும் கிடைக்கப்பெறுதல்

ஆ. நிறுவனம் வதிகின்ற நாட்டில் முறைமை விதிகள் செல்லுபடியானதாகவும் நடைமுறைப்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் இணங்குதல்

இ. லங்காசெட்டில் முறைமைக்கான கொடுப்பனவுத் தகவல்களை அனுப்புவதற்கு சுவிப்ற் சேவைக்கான அணுகுவழி

ஈ. சீபிஎஸ்எல் நெற்றுக்கான அணுகுவழி

உ. பரீட்சார்த்த முறைமையில் பங்கேற்பதன் மூலம் தொழிற்பாட்டு அலுவலர்கள் லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்பதுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளில் அறிவினையும் தகுதியினையும் பெற்றிருப்பதை இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம், மற்றும் பொதுப்படுகடன் திணைக்களம் ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டுதல்

ஊ. நிறுவனமானது அனர்த்த மீட்பு மற்றும் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் என்பன உள்ளடங்க லாக இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கும் பாதுகாப்பளிக்கப்பட்ட தொழில்நுட்ப முறைமைகளுக்கும் அவசியமான முறைமைகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்டுள்ளதென எடுத்துக்காட்டுதல்

எ. லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்பதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் பொறுப்பாணை ஒப்பந்தம் மற்றும் அணுகுவழி ஒப்பந்தம் அத்துடன் ஏனைய தொடர்புடைய ஒப்பந்தங்களை (நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி ஒப்பந்தம் மற்றும் முதன்மை மீள்கொள்வனவு அத்துடன் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தம்) கைச்சாத்திடல்.

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள், மேலே (அ) முதல் (எ) இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட தகைமைபெறும் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக **இணைப்பு அ** இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை முதலில் பூர்த்திசெய்தல் வேண்டும்.

**2.9 கோரிக்கைகளை மதிப்பிடுதல்**

லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்பதற்கு பங்கேற்பாளராவதற்காக கோரிக்கை விடுக்கின்ற நிறுவனமொன்றின் செலவில் இலங்கை மத்திய வங்கி அவசியமானதெனக் கருதுகின்ற ஆவணங்களுக்கான அல்லது தகவல்களுக்கான ஏதேனும் முறைமை விதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை அத்தகைய நிறுவனம் பூர்த்திசெய்துள்ளதா என்பதை உறுதிசெய்யும்பொருட்டு பின்வருவன உள்ளடங்கலாக பரிசோதனையினை அல்லது கோரிக்கையினை மேற்கொள்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

- நிறுவனத்தின் சட்ட ரீதியான அந்தஸ்த்து மற்றும் முறைமை விதிகளிலிருந்து நிகழுகின்ற கடப்பாடுகளை பிணிக்கின்ற விதத்தில் பொறுப்பேற்பதற்கான கொள்ளளவு தொடர்பில் கூற்றொன்று;
- உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியொன்று தொடர்பில் இத்தொகுதியின் 2.8 ஆம் விதி மற்றும் **இணைப்பு அ** என்பவற்றுடன் நிறுவனம் இணங்கியொழுகுகின்றதா என்பதனையும் முறைமை விதிகளுடன் இணங்கி யொழுகுவதற்கான அதன் ஆற்றலையும் உறுதிசெய்வதற்கு அவசியமானதென இலங்கை மத்திய வங்கி கருதுகின்ற நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்;

- நிறுவனத்தின் சொந்த நாட்டில் (விண்ணப்பதார நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் வெளிநாட்டில் உள்ளதாயின்) முறைமை விதிகளின் செல்லுபடி மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு முக்கியத்துவமிக்க அந்நாட்டின் (நாட்டின் அபிப்பிராயம்) சட்ட விதிகள் தொடர்பான கூற்று.

## 2.10 தகவல்/ அறிவித்தல் பற்றிய கடமைகள்

### 2.10.1 பங்கேற்பாளர்களின் தொழிற்பாடுகளில் மாற்றங்கள்

அத்தகைய மாற்றங்களின் விளைவாக பங்கேற்பாளர்களின் தகைமை அந்தஸ்த்தில் அல்லது லங்காசெட்டில் முறைமையின் தொழிற்பாடுகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கமொன்றினைக் கொண்டுள்ள, தொழிற்பாடுகளின் எவையேனும் மாற்றங்கள் பற்றி பங்கேற்பாளர்கள் இலங்கை மத்திய வங்கிக்கு சுயாதீனமாக அறிவித்தல் வேண்டும்.

### 2.10.2 கொடுப்பனவுப் பாய்ச்சலில் இடையூறுகள்

லங்காசெட்டில் முறைமையில் கொடுப்பனவுப் பாய்ச்சல்களை தடங்கலுக்குள்ளாக்கக்கூடிய நிலைமைகள் பற்றிய தகவல்கள் பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கப்பெறுமாயின், அதுபற்றி இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிப்பது பங்கேற்பாளரொருவரின் கடமையாகும். அத்தகைய நிலைமைகள் பற்றி இலங்கை மத்திய வங்கி அறியுமாயின், அத்தகைய சூழ்நிலைகளை முடிந்தளவு விரைவாக பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

## 2.11 அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்கள்

ஒவ்வொரு பங்கேற்பாளரும், இம்முறைமை விதிகளுக்கமைவாக கையொப்பமிடுவதற்கு மற்றும் அறிவுறுத்தல்களை, தொடர்பூட்டல்களை மற்றும் உறுதிப்படுத்தலை அனுப்புவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆட்களின் பட்டிய லொன்றை அவர்களின் கையொப்பமொன்றுடன் சேர்த்து இலங்கை மத்திய வங்கியினை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்திற்கும் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கும் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் பட்டியலும் கையொப்பங்களும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதிசெய்தலும் வேண்டும்.

## 2.12 கட்டணங்களும் விதிப்பனவுகளும்

### 2.12.1 கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளின் நிர்ணயம் பற்றிய அறிவித்தல்

- கொடுக்கல்வாங்கலுக்கான கட்டணங்கள் காலத்திற்குக்காலம் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்படும்.
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் கட்டணப்பட்டியலிற்கேற்ப ஒவ்வொரு பங்கேற்பாளரும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.
- கட்டணத்தைத் தீர்மானித்தலானது செலவு உள்ளடக்க கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டதுடன் பாரியளவிலான கொடுப்பனவுகளின் தீர்ப்பனவிற்காக லங்காசெட்டில் முறைமையின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் விதத்தில் மேலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- விசேட கட்டளையொன்றின் மூலம் இலங்கை மத்திய வங்கியானது லங்காசெட்டில் முறைமையினை மேம்படுத்துவதற்காக அல்லது புதிய சேவைகளை அறிமுகப்படுத்துவதற்காக பங்கேற்பாளர்களிடம் விதிப்பனவுகளை விதிக்கலாம்.

### 2.12.2 கட்டண மாற்றங்கள் பற்றிய அறிவித்தல்

கட்டண மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் புதிய கட்டண நடைமுறைத் திகதிக்கு ஆகக் குறைந்தது 30 நாட்களுக்கு முன்னர் பங்கேற்பாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

எவ்வாறாயினும், கட்டண மாற்றங்கள் பற்றிய அறிவித்தல்,

(அ) புதிய சட்டமொன்றின் மூலம் அல்லது சட்டவாக்கத்திற்கான திருத்தமொன்றின் மூலம் அல்லது நீதி மன்றத் தீர்மானம் அல்லது தீர்ப்பொன்றின் விளைவாக அத்தகைய மாற்றம் நிகழுமாயின்; அத்துடன்

(ஆ) விசேட காரணமொன்றுள்ளதென இலங்கை மத்திய வங்கி கருதுமாயின்

30 நாட்களை விடக் குறைவான காலத்தில் அனுப்பிவைக்கப்படும்.

**2.13 இடைநிறுத்தல், முடிவுறுத்துதல், புறக்கீடு செய்தல் அல்லது பங்கேற்பாளரொருவரை மற்றுமொரு பங்கேற்பாளர் கையேற்றல்**

(அ) ஏதேனும் சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் விதந்துரைக்கப்படும் தகைமை பெறுகின்ற பிரமாணத்தினை பங்கேற்பாளர் நிறைவேற்ற தவறியுள்ளார் என்று அல்லது பங்கேற்பாளர் கடன் தீர்க்க வகையற்றவராக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பின் அல்லது இலங்கை மத்திய வங்யினால் வழங்கப்பட்ட அதன் வங்கித்தொழில்/ முதனிலை வணிக உரிமத்தின் அனுமதி இலங்கை மத்திய வங்கியினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது அல்லது இலங்கை மத்திய வங்கியினால் பொருத்தமானது எனக் கருதப்படுகின்ற ஏதேனும் வேறு காரணத்தினால், பங்கேற்பாளரை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி ஏகபோக தற்றுணிபினை கொண்டிருக்கும்.

(ஆ) பங்கேற்பாளரொருவர் லங்காசெட்டில் முறைமையிலிருந்து புறக்கீடு செய்வதை தெரிவுசெய்யலாம் அல்லது வேறு பங்கேற்பாளருடன் ஒன்றிணையலாம் அல்லது வேறு பங்கேற்பாளர் தொழிலை கையகப்படுத்துவது தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்ளலாம், எது எவ்வாறிருப்பினும் அத்தகைய ஏற்பாடுகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் முன்கூட்டிய அனுமதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) மேற்குறித்த எவையேனும் நிகழ்வுகளில், இலங்கை மத்திய வங்கியானது பொருத்தமானவாறு லங்காசெட்டில் முறைமை தொடர்பில் அதன் உரிமைகள், முறைமைகள், மென்பொருள் மற்றும் வேறேதேனும் பொருட்களை ஒப்படைப்பதற்கு தொடர்புடைய பங்கேற்பாளரை பணித்தல் வேண்டும் என்பதுடன் பங்கேற்பாளர் அத்தகைய பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**2.13.1 இடைநிறுத்தலுக்கான, முடிவுறுத்தலுக்கான, புறக்கீடு செய்தலுக்கான அல்லது பங்கேற்பாளரொருவரை மற்றுமொரு பங்கேற்பாளர் கையேற்பதற்கான அறிவித்தல் காலம்**

(அ) இலங்கை மத்திய வங்கியின் மூலம் பங்கேற்பாளரொருவர் தற்காலிக அல்லது நிரந்தர அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டுள்ள அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ள போது, இடைநிறுத்தப்பட்ட அல்லது முடிவுறுத்தப் பட்ட பங்கேற்பாளரொருவருக்கு, பங்கேற்பாளரின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அல்லது அதே பதவியிலுள்ள அலுவலரொருவருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றினைத் தொடர்ந்து இலத்திரனியல் ரீதியாக அல்லது தொலைநகல் மூலம் இது பற்றிய தொடர்பூட்டலொன்றை அனுப்புவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியினால் உடனடியாக அறிவிக்கப்படுவார். பங்கேற்பாளரின் தலைமைச் செயலகத்திற்கு இலத்திரனியல் செய்தி விடுக்கப்பட்டவுடன் அல்லது தொலைநகல் அனுப்பப்பட்டதுடன் உடனடியாக அறிவித்தல் ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படும். ஏனைய பங்கேற்பாளர்களுக்கும் தொடர் புடைய தரப்பினர்களுக்கும் அதையொத்த தொடர்பூட்டலூடாக இடைநிறுத்தல் அல்லது முடிவுறுத்தல் பற்றி இலங்கை மத்திய வங்கியினால் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்.

(ஆ) பங்கேற்பாளர்களின் புறக்கீடு அல்லது ஒன்றுசேர்த்தல் அல்லது ஒரு பங்கேற்பாளரது தொழிலினை மற்றொரு பங்கேற்பாளர் கையேற்றல் போன்ற நிகழ்வில் அத்தகைய புறக்கீடுடன், ஒன்றிணைத்தலுடன் அல்லது கையப்படுத்தலுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரும் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து முன்கூட்டிய அனுமதியினைப் பெற்றுகொள்ள வேண்டும். அத்தகைய புறக்கீட்டின், ஒன்றிணைப்பின் அல்லது கையகப்படுத்தலின் எதிர்பார்க்கப்படும் நடைமுறைப்படுத்தல் திகதியின் 45 கலண்டர் நாட்களுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் பணிப்பாளருக்கு அனுமதிக்கான கோரிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) புறக்கீடு, ஒன்றிணைத்தல், அல்லது கையேற்றல் பற்றி அத்தகைய பங்கேற்பாளர் மூலம் குறைந்தது 15 கலண்டர் நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் வழங்குவதன் மூலம் அனைத்து ஏனைய பங்கேற் பாளர்களுக்கு தொடர்புடைய தரப்பினர்களுக்கு இலங்கை மத்திய வங்கி தெரியப்படுத்தல் வேண்டும்.

(ஈ) இடைநிறுத்தலொன்று அல்லது தற்காலிக முடிவுறுத்தலொன்று நீக்கப்படுகின்ற போது இலங்கை மத்திய வங்கியானது ஏனைய பங்கேற்பாளர்களுக்கும் தொடர்புடைய தரப்பினர்களுக்கும் அத்தகைய நீக்குதல் பற்றி குறைந்தது 10 கலண்டர் நாட்களுக்குள் அறிவித்தல் வழங்கும்.

**2.13.2 இடைநிறுத்தல், முடிவுறுத்துதல், புறக்கீடு செய்தல் அல்லது பங்கேற்பாளரொருவரை மற்றுமொரு பங்கேற்பாளர் கையேற்றல் மீதான கடப்பாடுகள்**

(அ) பங்கேற்பாளரொருவர் லங்காசெட்டில் முறைமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள முடிவுறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தின்போது, அனைத்து அதன் முடிவுறாதுள்ள கொடுப்பனவுச் செய்திகளும் முறைமையினால் தானியக்கமாக இரத்துச் செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், தொடர்புடைய பங்கேற்பாளர் அத்தகைய கொடுப்பனவுகளை தொடர்புடைய தரப்பினர்களுக்கு மேற்கொள்வதற்காக தொடர்ந்தும் பொறுப்புடையவராதல் வேண்டும். லங்காசெட்டில் முறைமை தொடர்பில், பங்கேற்பாளர் அனைத்து அதன் திரண்ட மற்றும் திரளுகின்ற கடப்பாடுகளுக்காகவும் தொடர்ந்தும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) பங்கேற்பாளரொருவரின் தொழில் ஒன்றுசேர்க்கப்படுகின்ற போது அல்லது வேறோரு பங்கேற்பாளர் மூலம் கையேற்கப்படுகின்ற நிகழ்வின் போது, லங்காசெட்டில் கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய அதன் தொழிலை மாற்றுகின்ற பங்கேற்பாளரின் கடப்பாடுகளை தொழிலினை கையேற்கின்ற பங்கேற்பாளரின்

கணக்கிற்கு திசை மாற்றுவதற்கு லங்காசெட்டில் கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய அதன் தொழிலை மாற்றுகின்ற பங்கேற்பாளரின் எழுத்து மூல அனுமதியின் மீது இலங்கை மத்திய வங்கி நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(இ) லங்காசெட்டில் முறைமையுடனான அத்துடன் லங்காசெட்டில் முறைமையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட/ முடிவுறுத்தப்பட்ட பங்கேற்பாளருடனான உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய பிணிக்கின்ற ஆவணங்கள் அனைத்தும் மேலே பிரிவு (அ) இல் குறிப்பிடப்பட்ட அனைத்துக் கடப்பாடுகளும் நிறைவேற்றப்படுவதற்கு உட்பட்டு காலாவதியாகும்.

**2.13.3 விளக்கம் கோரலும் சீரமைத்தலும்**

இலங்கை மத்திய வங்கியானது, பங்கேற்பாளரொருவரை முடிவுறுத்துவதற்கு கருதுமாயின், நியாயமான காலப்பகுதியொன்றினுள் விளக்கமொன்றினை வழங்குவதற்கு மற்றும் மறுசீரமைப்பினை மேற்கொள்வதற்கு அத்தகைய பங்கேற்பாளருக்கு சந்தர்ப்பமொன்றினை வழங்குதல் வேண்டும். எனினும், இலங்கை மத்திய வங்கி அவசியமற்றது அல்லது விசேட காரணங்கள் எவையேனும் காணப்படுகின்றனதென கண்டறியுமிடத்து முடிவுறுத்தலுக்கு முன்னர் பங்கேற்பாளர் மூலமான விளக்கமொன்றுக்கு இலங்கை மத்திய வங்கி சந்தர்ப்ப மளிக்கத் தேவையில்லை.

**2.14 முறைமைத் தொழிற்பாடுகளுக்கான அணுகுவழி**

பங்கேற்பாளர்கள், அவர்களின் நிறுவனம்சார் அந்தஸ்த்தின் அடிப்படையில் லங்காசெட்டில் முறைமையில் வசதிகளையும் தொழிற்பாடுகளையும் அணுகுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். "வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்" ஆக நியமிக்கப்பட்ட பங்கேற்பாளர்கள் அதன் சொந்த கணக்குகள் மீதும் அதன் வாடிக்கையாளர்கள் சார்பாகவும் பத்திரங்களற்ற பிணையங்களை வைத்திருத்தல் மற்றும் மாற்றல் செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய வசதிகளுக்கும் தொழிற்பாடுகளுக்கும் அணுகுவழியினைக் கொண்டிருப்பர். "வணிகரல்லா விலைக்குறிப்பீட்டாளராக" பெயர்குறிக்கப்பட்ட பங்கேற்பாளர்கள் தமது சொந்தக் கணக்கின் மீது மாத்திரம் பத்திரங்களற்ற பிணையங்களை வைத்திருத்தல் மற்றும் மாற்றல் செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய வசதிகளுக்கும் தொழிற்பாடுகளுக்கும் அணுகுவழியினைக் கொண்டிருப்பர்.

**2.15 பொறுப்பாணை உடன்படிக்கையுடன் அல்லது சுவிப்ற்றுடன் இசைவின்மை**

இவ்விதிகளின் ஏற்பாடுகளுக்கும் பொறுப்பாணை உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது இசைவின்மை நிகழுகின்ற சந்தர்ப்பத்தில் இவ்விதிகளின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

முறைமை விதிகளின் ஏற்பாடொன்று சுவிப்றின் எவையேனும் கட்டாய தேவைப்பாடுகளுடன் இசைவின்றி காணப் படுகின்ற சந்தர்ப்பத்தின்போது அவ்விசைவின்மையின் அடிப்படையில் சுவிப்ற் தேவைப்படுத்தல் மேலோங்கி நிற்கும்.

**2.16 பங்கேற்பாளர்களுக்கான சுவிப்ற் ஆவணமாக்கல்**

தொழில் மட்டத்தில் பங்கேற்பாளர்கள் ஒருவர் மற்றவருடனும் அத்துடன் இலங்கை மத்திய வங்கியுடனும் எவ்வாறு இடைத்தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்பது பற்றி முறைமை விதிகள் விவரிக்கின்றன. எனினும், இம்முறைமை விதிகளுக்குப் புறம்பாக, தொழிற்பாட்டு மட்டத்தில் இரண்டு முறைமைகளுடனு மான இடைத்தொடர்புகளை விவரிக்கின்ற லங்காசெட்டில் முறைமை மற்றும் சுவிப்ற் முறைமையின் தேவைப்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புடைய வேறு ஆவணங்களையும் பங்கேற்பாளர்கள் உசாத்துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

**2.17 முறைமை விதிகளை இடைநிறுத்தல்**

(அ) முறைமை விதிகளின் தொடர்ச்சியான பிரயோகம் முறைமை தொழிற்பாட்டினையும் உறுதிப்பாட்டினையும் வலுக் குறையச் செய்கின்ற சூழ்நிலையில் முறைமை விதிகள் முழுவதையும் அல்லது ஒரு பகுதியின் செல்லுபடியாகும் தன்மையினை இலங்கை மத்திய வங்கி இடைநிறுத்தலாம்.

(ஆ) முறைமை விதிகளின் பாகமொன்றினை இடைநிறுத்தியுள்ளபோது இலங்கை மத்திய வங்கியும் பங்கேற் பாளர்களும் எஞ்சியிருக்கின்ற முறைமை விதிகளுக்கமைவாக முறைமைத் தொழிற்பாடுகளை சாத்தியமான விதத்தில் தொடர்வதற்கு முயற்சித்தல் வேண்டும்.

(இ) முறைமை விதிகளின் பாகமொன்று இடைநிறுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், முறைமைத் தொழிற்பாடுகளை பங்கேற்பாளர்களுடனான நியாயமான ஆலோசனையினைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடாத்துதல் வேண்டும்.

(ஈ) பங்கேற்பாளர்களுக்கான உடனடி அறிவித்தலின் கீழ் நடைமுறைக்கேற்றவாறு உடனடியாக முறைமை விதிகளின் செல்லுபடித் தன்மையினை இலங்கை மத்திய வங்கி மீளமைக்கும்.

**2.18 மூன்றாம் தரப்பினர்களுக்கான ஒப்படைப்பு**

நாணய விதிச் சட்டத்தின் 112ஆ ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, இலங்கை மத்திய வங்கியோ அன்றி பங்கேற்பாளரோ அடுத்த தரப்பினரின் முன்கூட்டிய எழுத்திலான சம்மதமின்றி இம்முறைமை விதிகளுக்கு கீழ் மூன்றாந் தரப்பினரொருவருக்கு தனது உரிமைகளை அல்லது கடப்பாடுகளை ஒப்படைக்கவோ அல்லது மாற்றவோ கூடாது.

**2.19 இரகசியத் தன்மை**

(அ) இலங்கை மத்திய வங்கியும் பங்கேற்பாளர்களும் ஏற்புடைய சட்டத்திற்கு அமைவாக அறிவுறுத்தல்கள், கணக்கு மாற்றல்கள், கணக்குகள், பங்கேற்பாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களின் வாடிக்கையாளர்கள் போன்றவற்றுடன் தொடர்புபட்ட அனைத்து தகவல்கள் தொடர்பிலும் இரகசியத் தன்மையினைப் பேணுதல் வேண்டும்.

(ஆ) இலங்கை மத்திய வங்கிக்கு பங்கேற்பாளர் அறிவிக்கப்படக் கூடிய அத்தகைய ஆட்களுக்கு கணக்காய்வு நோக்கங்களுக்காக முறைமையிலுள்ள பங்கேற்பாளரின் நடவடிக்கைகளுடன் தொடர்புபடுகின்ற தகவல்களை வெளியிடுவதற்கு பங்கேற்பாளர் இலங்கை மத்திய வங்கியினை கோரலாம் அத்துடன் அதிகாரமளிக்கலாம்.

(இ) மேலே விதி 2.19(அ) இற்குட்பட்டு இலங்கை மத்திய வங்கியும் ஒவ்வொரு பங்கேற்பாளரும்:

i. முறைமைத் தொழிற்பாட்டின் திரண்ட அல்லது சுருக்கத் தரவுகள்

ii. முறைமை பற்றிய அறிவுசார் மற்றும் விவரண தரவுகள் என்பவற்றை

வெளிப்படுத்தலாம் அல்லது வெளியிடலாம்.

(ஈ) இலங்கை மத்திய வங்கியின் கணக்காய்வாளர்களுக்கு முறைமையிலுள்ள எவரேனும் பங்கேற்பாளரின் நடவடிக்கைகளுடன் தொடர்புபடுகின்ற தகவல்களை வெளியிடுவதற்கான உரிமையினை இலங்கை மத்திய வங்கி கொண்டிருக்கும்.

(உ) ஏதேனும் ஏற்புடைத்தான சட்டத்திற்குட்பட்டு ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டளையொன்றினால் அல்லது ஏதேனும் சட்ட ஏற்பாட்டினால் வேண்டப்படுகின்றபோது அத்தகைய வெளியீட்டினை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை பங்கேற்பாளர்களும் இலங்கை மத்திய வங்கியும் ஏற்றுக்கொள்கின்றன.

(ஊ) முறைமையில் பங்கேற்பாளரின் பங்கேற்பு முடிவுறுத்தல் எது எவ்வாறிருப்பினும் இவ்விதிகளின் ஏற்பாடுகளில் எடுத்துரைக்கப்பட்ட கடப்பாடுகள் பங்கேற்பாளரொருவரை தொடர்ந்தும் பிணித்தல் வேண்டும்.

**3. உரிமைத்துறப்புகளும் பொறுப்புக்களின் வரையறையும்**

**3.1 வலுக்கட்டாய நிலைமை**

(அ) இவ்விதிகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியோ அன்றி பங்கேற்பாளரோ அதன் கடப்பாடுகளை செயலாற்றுவதனைத் தடுக்கின்ற அதன் நியாயமான கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட (“வலுக்கட்டாய நிலைமை நிகழ்வு” என அழைக்கப்படும்) ஏதேனும் காரணத்திலிருந்து தோன்றுகின்ற அத்தகைய செயற்பாடு, விடுபாடு அல்லது தவறுகைகளின் அடிப்படையில் முறைமை விதிகளின் கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஏதேனும் செயற்பாடு அல்லது விடுபாடு அல்லது தவறுகைகளுக்குப் பொறுப்புடையதாகாது.

இருப்பினும் கூட நிகழ்வொன்று:

i. விடயத்திற்கேற்றவாறு, முறைமை விதியின் கீழ் செயலாற்றப்படும் அதன் கடப்பாடு நிகழ்வின் விளைவுகள் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது பங்கேற்பாளரினால் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடியதாக இருப்பின்;

ii. நியாயமான கவனிப்பு தரநியமமொன்றினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிகழ்வினைத் தடுப்பதற்கு அல்லது தவிர்ப்பதற்கு சந்தர்ப்பம் இருந்திருப்பின்; அல்லது

iii. விடயத்திற்கேற்றவாறு, இலங்கை மத்திய வங்கி அல்லது பங்கேற்பாளர் அல்லது அதன் தொடர்புடைய ஊழியர் அல்லது முகவர் நேரடியாகப் பொறுப்புக்கூறத்தக்க நிகழ்வொன்றாக இது இருப்பின்;

அது வலுக்கட்டாய நிலைமையொன்றாகாது.

(ஆ) வலுக்கட்டாய நிலைமையின் காரணமாக இலங்கை மத்திய வங்கி அல்லது பங்கேற்பாளர் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இயலாவிடின், இலங்கை மத்திய வங்கி அல்லது அத்தகைய பங்கேற்பாளர் உடனடியாக:

i. அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தடையேற்படுத்துகின்ற வலுக்கட்டாய நிலைமை நிகழ்வு, அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதைத் தடுக்கின்ற வலுக்கட்டாய நிகழ்வின் பரிமாணம், அதற்கான காரணம் மற்றும் வலுக்கட்டாய நிலைமையின் எதிர்பார்க்கப்பட்ட காலம் ஆகியவற்றை எழுத்து மூலம் ஏனையவர் களுக்கு அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

ii. வலுக்கட்டாய நிலைமை நிகழ்வின் விளைவினை தவிர்ப்பதற்கும் அல்லது அகற்றுவதற்கும் அத்துடன் முடிந்தவரை விரைவாக அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் அதேவேளை அத்தகைய வலுக்கட்டாய நிகழ்வின் தாக்கத்தினைக் குறைப்பதற்கும் அனைத்து நியாயமான முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

### 3.2 பொறுப்பு வரையறை

இலங்கை மத்திய வங்கியானது முறைமை விதிகளின் கடப்பாடுகளின் கீழ் அதன் செயலாற்றத்தின் ஏதேனும் நடவடிக்கைக்கோ அல்லது நடவடிக்கையைச் செய்யத் தவறுவதற்கோ அன்றில் அத்தகைய செயற்பாடுகளின் அல்லது தவறுகைகளின் விளைவுகளுக்கோ பொறுப்புடையதாகவிராது என்பதுடன் இதன் காரணமாக அத்தகைய பொறுப்பானது இலங்கை மத்திய வங்கி அல்லது எவரேனும் அதன் ஊழியர்கள் அல்லது முகவர்கள் மூலமான எண்பிக்கப்பட்ட மொத்தப் புறக்கணிப்பு, வேண்டுமென்று புரியப்படும் தவறுகள், மோசடிகள் அல்லது திருட்டுக்கள் என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற அத்தகைய பொறுப்பு தவிர. [இவ்விடயத்தில் இலங்கை மத்திய வங்கியானது, விடயத்திற்கேற்ப அத்தகைய எண்பிக்கப்பட்ட முழுமையான கவனயீனம், பங்கேற்பாளர்களினால் நியாயமான அடிப்படையில் அறவிடப்பட முடியாத வேண்டுமென்று புரியப்படும் தவறுகள், மோசடிகள் அல்லது திருட்டுக்கள் என்பவற்றின் நேரடி விளைவொன்றாக (அவ்வாறு செய்வதற்கு நியாயமான நடவடிக்கைகளை தாமதமின்றி எடுத்தல்), பங்கேற்பாளரின் கணக்கிலிருந்து எவையேனும் நிதியங்களின் இழப்பு தொகைக்கு அல்லது பிணையங்களின் பெறுமதிக்கு மாத்திரம் பொறுப்புடையதாகவிருக்கும். ஆயினும், முறைமை விதிகளில் தோன்றுகின்ற, பங்கேற்பாளரைப் பாதித்த அல்லது பங்கேற்பாளர்களினால் உறப்பட்ட ஏதேனும் இழப்பு, வாய்ப்பிழப்பு, இலாபம், சந்தை, நல்லெண்ணம், வட்டி என்பவற்றின் கிரயங்கள், கோரிக்கைகள், கேள்விகள் அல்லது வேறு நேரடியான அல்லது நேரடியற்ற சேதங்களுக்கு பங்கேற்பாளர்களுக்கு பொறுப்புடையதாக விருக்காது என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்.]

### 3.3 பின்விளைவு இழப்புக்கள்

ஏற்படக்கூடிய சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, அத்தகைய நிகழ்வுகள் பற்றிய சாத்தியம் அறிவிக்கப்பட்டிருப்பினும் கூட, எவ்விதத்திலேனும் தோன்றுகின்ற ஏதேனும் நேரடி, விசேட, இடைநேர்விளைவான அல்லது பின் விளைவு இழப்பு, அல்லது ஏதேனும் விதத்தில் பங்கேற்பாளருக்கு ஏற்படும் சேதத்திற்காக (வருவாய் அல்லது இலாபங்களின் இழப்பு, தரவுகள் இழப்பு, தொழில் இடைத்தடங்கல்கள் அல்லது பங்கேற்பாளருக்கு உரித்தான முறைமையின் பிழைகளிலிருந்து தோன்றுகின்ற இழப்பு அல்லது பாதுகாப்பு மீறுகை உள்ளடங்கலாக) பங்கேற்பாளருக்கு இலங்கை மத்திய வங்கி பொறுப்புடையதாகாது என வெளிப்படையாக இணங்கப்பட்டுள்ளது.

### 3.4 நட்டோத்தரவாதம்

முறைமையின் தொழிற்படுத்துனராக அதன் இயலளவில் இலங்கை மத்திய வங்கியினைப் பாதிக்கின்ற நடவடிக்கைகள் அல்லது விடுகைகள் என்ற ரீதியில் பங்கேற்பாளரின் அல்லது ஊழியர்களின் அல்லது முகவர்களின் (பங்கேற்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படாத) நடவடிக்கைகள் அல்லது விடுகைகளிலிருந்து அத்துடன்/ அல்லது முறைமை விதிகளுடன் இணங்கியொழுகுவதற்கு பங்கேற்பாளர் தவறுவதிலிருந்து நேரடியாக அல்லது நேரடியற்று தோற்றுகின்ற அனைத்து செலவுகள், கோரிக்கைகள், சேதங்கள் அல்லது பொறுப்புகள் எதுவாயினும் அவற்றுக்கு எதிராக பங்கேற்பாளர் நாணயச் சபைக்கு, அதன் உறுப்பினர்களுக்கு, இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு அத்துடன் முகவர்களுக்கு நட்டோத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

### 3.5 கடன் தீர்க்க வகையற்ற நிலைமையின் மீது எதிரீடு செய்தல்

2002இன் 32ஆம் இலக்க நாணய விதிச் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான நாணயவிதிச் சட்டத்தின் 62அ ஆம் பிரிவின் துணை பிரிவு (8), வாசகம் (அ)இன் நோக்கத்திற்காக பங்கேற்பாளரொருவர் தொடர்பில் முடிவுக்கு கொண்டுவரும் நடவடிக்கை முறைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பின், முறைமையில் பதியப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்பில் அத்தகைய பங்கேற்பாளரினால் வேறு பங்கேற்பாளர்களுக்காக உறப்பட்ட கடப்பாடுகளானவை அத்தகைய கடப்பாடுகள் முதிர்வடைந்துள்ளன அல்லது முதிர்வடையவில்லையா என்பதனைப் பொருட்படுத்தாது முறைமையில் பதியப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்பில் அத்தகைய பங்கேற்பாளருக்கான வேறு பங்கேற்பாளர்களின் கடப்பாடுகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

## தொகுதி - 2

## அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை

### பொருளடக்கம்


**1. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள் ........ 20A**
- 1.1 பங்கேற்பாளர் கணக்குகள் ........ 20A
- 1.2 கொடுப்பனவுச் செய்தியை தொடர்பூட்டுதல் ........ 20A
- 1.3 கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல் ........ 20A
- 1.4 மாற்றமுடியாத தன்மையும் இறுதிநிலையும் ........ 20A
- 1.5 முறைமை பணியாற்றும் மணித்தியாலங்கள் ........ 20A
- 1.6 பங்கேற்பாளர்களை லங்காசெட்டில் முறைமையுடன் இணைத்தல் ........ 20A

**2. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் செய்தி அனுப்புதல் ........ 20A**
- 2.1 சுவிப்ற் வின் வை - கொப்பி சேர்விஸ் ........ 20A
- 2.2 சுவிப்ற் வின் ........ 21A
- 2.3 மூடப்பட்ட பயன்படுத்துநர் குழும நிருவாகம் ........ 21A
- 2.4 சுவிப்ற் அடையாளத்தில் திருத்தங்கள் ........ 21A
- 2.5 பங்கேற்பாளரின் அடையாளப்படுத்துநர் குறியீடு ........ 22A
- 2.6 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக்கான சுவிப்ற் வின் வை - கொப்பி சேர்விஸ் அடையாளப்படுத்துநர் ........ 22A
- 2.7 மூடப்பட்ட பயன்படுத்துநர் தொகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்தி வகைகள் ........ 22A
- 2.8 லங்காசெட்டில் முறைமையில் தீர்ப்பனவுச் செய்திகள் ........ 22A
- 2.9 நிறைவுபெறாத அறிவித்தல்கள் (MT019) மற்றும் நிறைவுபெறாத காரணக் குறியீடுகள் ........ 23A
- 2.10 அனுப்புநர் அறிவித்தல்கள் (MT012) ........ 23A
- 2.11 சுவிப்ற் கட்டணங்கள் மற்றும் நேர்மாற்று பட்டியற்படுத்தல் ........ 23A

**3. குறிப்பிட்ட செய்தி உள்ளடக்கத் தேவைப்பாடுகள் ........ 23A**
- 3.1 வாடிக்கையாளர் நன்மைபெறுநர்களை அடையாளப்படுத்தல் ........ 23A
- 3.2 கொடுக்கல்வாங்கல் தொடர்புகள் ........ 23A
- 3.3 செல்லுபடியாகும் திகதிகள் மற்றும் கொடுப்பனவுகளின் களஞ்சியப்படுத்தல்........ 23A
- 3.4 நாணயம் ........ 24A
- 3.5 கிளை அடையாளப்படுத்தல் ........ 24A

**4. தவறாகச் செயன்முறைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ........ 24A**
- 4.1 தவறுதலாக அனுப்பப்பட்ட தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுப்பனவுகளை திருப்பி அனுப்புதல் ....... 24A
- 4.2 பிரயோகிக்கப்பட முடியாமலிருக்கும் கொடுப்பனவுகள் ........ 24A

**5. தீர்ப்பனவுக் கணக்கு மாற்றல்கள் ........ 24A**

**6. காத்திருக்கும் பட்டியல் முகாமைத்துவம் ........ 25A**
- 6.1 நிதியத்தின் கிடைப்பனவினைச் சரிபார்த்தல் ........ 25A
- 6.2 காத்திருத்தல் ........ 25A
- 6.3 காத்திருக்கும் வரிசை ஒழுங்கில் முதலில் வந்தது முதலில் தீர்ப்பனவு செய்யப்படும் ........ 25A
- 6.4 கொடுக்கல்வாங்கல்களுக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமைகள் ........ 25A
- 6.5 ஏற்கனவே காத்திருப்புப் பட்டியலிலுள்ள கொடுப்பனவு ஒழுங்கினை மாற்றுதல் ........ 25A
- 6.6 காத்திருப்பு வரிசைப் பட்டியலிலிருந்து கொடுப்பனவுகளை இரத்துச் செய்தல் ........ 26A
- 6.7 தொகுதிப் பாதுகாப்புத் தீர்மானம் ........ 26A
- 6.8 நாளின் முடிவில் தீர்ப்பனவு செய்யப்படாத கொடுக்கல்வாங்கல் தொடர்பான நடவடிக்கைகள் ...... 26A

**7. ஒருநாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ........ 26A**
7.1 பொதுநோக்கு ........ 26A
7.2 தகைமைவாய்ந்த பிணையங்கள் ........ 26A
7.3 ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி உடன்படிக்கை ........ 27A

**8. குறைந்தபட்ச மீதித் தேவைப்பாடுகள் ........ 27A**

**9. பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிகள் ........** 27A
9.1 மூன்றாந்தரப்பு தீர்ப்பனவுக் கடப்பாடு மதியுரைகள் மீதான செயற்படுவதற்கான பொறுப்பாணை .... 27A
9.2 லங்கா செட்டில் தீர்ப்பனவுக் கணக்குகள் தொடர்பில் தேறிய தீர்ப்பனவுகளை மேற்கொள்ளுதல் ........ 27A
9.3 போதுமானதற்ற நிதியின் காரணமாக தீர்ப்பனவுத் தொகுதி இடைநிறுத்தப்படுதல் அல்லது நிறைவேற்றப்படாது போதல் ........ 27A
9.4 தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி காணப்படாமையினால் செலுத்தத்தவறியமைக்கான கட்டணங்கள் ........ 28A
9.5 செலுத்தத்தவறும் காலப்பகுதியைக் கணித்தல் ........ 28A
9.6 தீர்ப்பனவுக் கணக்குகளில் செலுத்தத்தவறிய கட்டணத்தினை பற்று வைத்தல் ........ 28A

**10. பங்கேற்பாளரிடையேயான முன்னோக்கிய பெறுமதி/ அதேநாள் பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்கள் 29A**
10.1 முன்னோக்கிய பெறுமதிக் கொடுக்கல்வாங்கல் ........ 29A
10.2 அதேநாளன்று பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்கள் ........ 29A

**11. தடங்கலற்ற வியாபாரம் மற்றும் பாதுகாப்பு ........ 29A**

## 1. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள்

### 1.1 பங்கேற்பாளர் கணக்குகள்

இலங்கை மத்திய வங்கி அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் தீர்ப்பனவுக் கணக்கொன்றினை வழங்குகின்றது. இக்கணக்கானது செலுத்துகின்ற பங்கேற்பாளர் தீர்ப்பனவுக் கணக்கிலுள்ள நிதியத்தின் கிடைப்பனவிற்குட்பட்டு பங்கேற்பாளர்களின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வசதிகளை வழங்குகின்றது.

### 1.2 கொடுப்பனவுச் செய்தியை தொடர்பூட்டுதல்

பங்கேற்பாளர்களுக்கும் லங்கா செட்டில் முறைமைக்குமிடையிலான தொடர்பூட்டல் சுவிப்ற் நெற் மற்றும் சிபிஎஸ்எல் நெற் என்பனவற்றினூடாக இடம்பெறுதல் வேண்டும். லங்காசெட்டில் முறைமையின் ஒவ்வொரு பங்கேற்பாளரும் இலங்கை மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் சுவிப்ற் மூடப்பட்ட பயன்படுத்துநர் குழும அங்கத்துவத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மூடப்பட்ட பயன்படுத்துநர் குழுமத்தின் அங்கத்தவர்கள் மட்டுமே லங்காசெட்டில் முறைமைக்கு கொடுப்பனவு செய்திகளை அனுப்ப முடியும். செய்திகளைக் கையாளு கின்ற தொழில்நுட்பம் சுவிப்ற் செய்திப் படிவத்தினையும் சுவிப்ற் கொப்பி சேர்விஸ்சையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் தொடர்பான அனைத்துச் செய்திகளும் சுவிப்ற் நெற் ஊடாக முறைமையில் பதிவு செய்யப்படல் வேண்டும். அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை செய்தியனுப்பல் முறைமையிலுள்ள விபரங்கள் மற்றும் பணிப்புரைகள் இத்தொகுதியின் விதி 2 இல் தரப்பட்டுள்ளன.

### 1.3 கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல்

கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் பங்கேற்பாளர்களினால் முறைமையில் பதிவு செய்யப்படுகின்ற பொழுது அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் தனித்தனியாகவும் அதேநேரத்தில் மொத்த அடிப்படையிலும் செயன்முறைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலிலும், கொடுக்கல்வாங்கல் பெறுமதியினை மேவத்தக்க விதத்தில் கொடுப்பனவு செய்யும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி இருக்கும்பொழுது, கொடுப்பனவு செய்பவரின் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து பெறுபவரின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பெறுமதியினை மாற்றல் செய்வதன் மூலம் தீர்ப்பனவு உடனடியாக மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் முறைமையிலுள்ள தொடர்பான கணக்குகளில் பற்றுக்களாகவும் வரவுகளாகவும் சமகாலத்தில் பதிவு செய்யப்படுகின்றன. எனினும், நிதியமானது போதுமானதாக இல்லாதிருக்குமாயின் தொடர்பான கொடுப்பனவு அறிவுறுத்தல், கொடுப்பனவு நிறுவனத்தின் கணக்கில் போதுமான நிதியம் கிடைக்கும்வரை காத்திருத்தல் பிரிவிற்கு அனுப்பப்படுகிறது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் காத்திருத்தல் முகாமைத்துவம் தொடர்பான விபரங்கள் இத்தொகுதியின் விதி 6இல் தரப்படுகிறது.

### 1.4 மாற்றமுடியாத தன்மையும் இறுதிநிலையும்

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுப்பனவானது, மாற்றல் முறைமை யில் பதிவுசெய்யப்படும் பொழுது மாற்ற முடியாததொன்றாகக் கருதப்படுகிறது. கொடுப்பனவு அறிவுறுத்தல்களுக்கிணங்க தொடர்பான கணக்குகள் பற்று வைக்கப்பட்ட அல்லது வரவு வைக்கப்பட்ட பின்னர் பங்கேற்பாளர்கள் கொடுக்கல்வாங்கல்களை மாற்ற முடியாது. முறைமையினூடாக தொடர்பான கணக்கிற்கு கொடுக்கல்வாங்கல்கள் வரவு வைக்கப்பட்டு மற்றும் பற்று வைக்கப்பட்ட பின்னர் பங்கேற்பாளர்கள் கொடுப்பனவு அறிவுறுத்தல்களை இரத்துச் செய்யவோ அல்லது மறுக்கவோ முடியாது.

### 1.5 முறைமை பணியாற்றும் மணித்தியாலங்கள்

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை அனைத்து வங்கித்தொழில் வியாபார நாட்களிலும் மு.ப 8.00 மணிக்கும் பி.ப 4.30 மணிக்குமிடையில் கொடுப்பனவுச் செய்திகளின் தீர்ப்பனவிற்காக திறந்திருக்கும். நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் சுற்றோட்டப்படுத்தப்படுகிறது. நாளாந்தம் திறந்து வைக்கப்படும் நேரத்தினை மாற்றுவதற்கு நியாயமான காரணம் இருக்குமாயின் மத்திய வங்கி அவ்வாறு செய்யலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளர்களுக்கு சாத்தியமானளவிற்கு முற்கூட்டி, அது பொருத்தமானது எனக் கருதும் வழியில் அறிவிக்கும்.

### 1.6 பங்கேற்பாளர்களை லங்காசெட்டில் முறைமையுடன் இணைத்தல்

ஒவ்வொரு பங்கேற்பாளரும் லங்கா செட்டில் முறைமையுடன் திறந்த நிலையில் அவர்களின் இணைப்பினைப் பேண வேண்டும் என்பதுடன் லங்கா செட்டில் முறைமை திறந்திருக்கும் நேரத்தில் அதன் தொழிற்பாடுகளுக்காக தேர்ச்சிபெற்ற அலுவலர்களையும் போதுமானளவில் கொண்டிருத்தல் வேண்டும்.


## 2. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் செய்தி அனுப்புதல்

### 2.1 சுவிப்ற் வின் வை - கொப்பி சேர்விஸ்

லங்கா செட்டில் முறைமை கொடுப்பனவுச் செய்திகளை அனுப்புவதற்கு சுவிப்ற் வலையமைப்பினைப் பயன்படுத்துகிறது.

கொடுப்பனவு அறிவுறுத்தல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக, சுவிப்ற் வின் வை கொப்பி சேர்விஸ்சஸ் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. பங்கேற்பாளர்களின் கொடுப்பனவு போக்குவரத்தான சுவிப்ற் கண்காணிப்பாளர்களும் ஏதேனும் நேரடிக் கொடுப்பனவு அறிவுறுத்தலும் சுவிப்ற் வின் வை - கொப்பி பணிக்கான லங்கா செட்டில் முறைமைக்கு குறித்துரைக்கப்படுகின்றன. தீர்ப்பனவிற்காக தேவைப்படுத்தப்படும் விபரங்கள் செயன்முறைப்படுத்தலுக்காக சுவிப்ற் செய்திகளூடாக லங்காசெட்டில் முறைமைக்கு வழிப்படுத்தப்படுகின்றன. சுவிப்ற் மூலத் தீர்ப்பனவு அறிவுறுத்தல் உறுதிப்படுத்தலின் நிலுவையிலுள்ள பெறுகைகள் அல்லது லங்காசெட்டில் முறைமையிலிருந்தான நிராகரிப்புச் செய்தி என்பனவற்றை தடுத்து வைத்திருக்கின்றது. கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்படும்பொழுது, அனுப்பும் பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்றினை வைப்பதன் மூலம் உடனடியாக பதிவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பெறும் பங்கேற்பாளரின் கணக்கில் உடனடியாக வரவு வைக்கப்படுகின்றது. உறுதிப்படுத்தப்பட்ட செய்தியொன்று சுவிப்ற்றிற்கு அனுப்பப்படுகிறது. இது லங்காசெட்டில் முறைமையிலிருந்து சுவிப்ற் வலையமைப்பிற்கு அனுப்பப்பட்ட தீர்ப்பனவு நிலையினை உள்ளடக்கியிருக்கும். கொடுப்பனவினைத் தீர்ப்பனவு செய்ய முடியாவிடின் அது அதேநேர தீர்ப்பனவு முறைமையிலுள்ள காத்திருப்புப் பிரிவில் சேமிக்கப்படும். சுவிப்ற்றும் கொடுப்பனவு செய்திகளை அது அங்கீகரிக்கும் வரை அல்லது இரத்துச் செய்யப்படும் வரை சேமித்து வைத்திருக்கும்.

**செயன்முறை அறிவுறுத்தல்களின் அடிப்படை செய்தி பாய்ச்சல் கீழே காட்டப்படுகிறது**




### 2.2 சுவிப்ற் வின்

லங்கா செட்டில் முறைமையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பெறுமதியல்லா செய்திகளின் பரிமாற்றத்திற்காக வின் வலையமைப்பினைப் பயன்படுத்தியது. உ-ம்: விசாரணைகள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பரிமாற்றப்படுகின்ற மற்றும் தீர்ப்பனவு செய்யப்படுகின்ற கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் சுவிப்ற் நெட்டினைப் பயன்படுத்தி அனுப்பி வைக்கப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கி முறைமையிலுள்ள கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு ஆதரவளிப்பதற்காக வின் வை கொப்பி சேர்விஸ்ஸின் ஏற்பாடுகளுக்காக சுவிப்ற் பணிகளுடன் ஒப்பந்தத்தினை மேற்கொண்டது.

சுவிப்ற் வின் வை - கொப்பி சேர்விஸ்ஸின் செய்தியனுப்பல் பணியின் வசதியினைப் பயன்படுத்துவதுடன் தீர்ப்பனவுகளின் உறுதிப்படுத்தல்களுக்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக்கு தெரிவு செய்யப்பட்ட தகவல்களை பிரதி செய்கிறது.

சுவிப்ற் வின் வை - கொப்பி மூடப்பட்ட பயன்படுத்துனர் குழுமம் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

- நிருவகிப்பவராக இலங்கை மத்திய வங்கி (மத்திய வங்கி நிறுவனம்) அத்துடன்
- பங்கேற்பாளர்கள்

### 2.3 மூடப்பட்ட பயன்படுத்துநர் குழும நிருவாகம்

இலங்கை மத்திய வங்கி, மூடப்பட்ட பயன்படுத்துநர் குழுமத்தின் உறுப்புரிமையை தீர்மானிப்பது, மூடப்பட்ட பயன்படுத்துநர் குழுமத்தினால் ஆதரவளிக்கப்படவுள்ள செய்திவகை/ உள்ளடக்கம் மற்றும் சுவிப்ற் வின் வை - கொப்பி சேர்விஸ் மற்றைய பல்வேறுபட்ட அம்சங்களையும் உள்ளடக்குகிறது.

### 2.4 சுவிப்ற் அடையாளத்தில் திருத்தங்கள்

பங்கேற்பாளரொருவர், அதன் சுவிப்ற் அடையாளத்தில் அல்லது லங்கா செட்டில் முறைமையில் அதன் பங்கேற்பாளர் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இயலாற்றலின் ஏதேனும் திருத்தங்களுக்காக சுவிப்ற் பணிக்கு ஏதேனும் கோரிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக மத்திய வங்கியின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

### 2.5 பங்கேற்பாளரின் அடையாளப்படுத்துநர் குறியீடு

லங்காசெட்டில் முறைமையில் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு பங்கேற்பாளரும் தனியொரு வங்கி அடையாளப்படுத்துகைக் குறியீட்டினைப் பேணுதல் வேண்டும். இது வங்கி அடையாளப் படுத்துநர் குறியீடு என அழைக்கப்படும். இதற்கு கொடுப்பனவுச் செய்திகள் முகவரியிடப்பட வேண்டும் என்பதுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் தீர்ப்பனவுகள் பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் அனைத்து லங்கா செட்டில் முறைமைக் கொடுப்பனவுச் செய்திகளும் இதற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

லங்கா செட்டில் முறைமையில் கொடுப்பனவு செய்திகளுக்கான சேரிடமாக பங்கேற்பாளரொருவர் ஒரு வங்கி அடையாளப்படுத்துநர் குறியீட்டினை மாத்திரம் குறித்துரைக்கலாம்.

லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் வங்கி அடையாளப்படுத்துநர் குறியீடுகள் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

### 2.6 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக்கான சுவிப்ற் வின் வை - கொப்பி சேர்விஸ் அடையாளப்படுத்துநர்

அனுப்புகின்ற பங்கேற்பாளரொருவர் வெளிச்செல்லும் சுவிப்ற் கொடுப்பனவு அறிவுறுத்தலொன்றில் அது இடையே தடுக்கப்பட்டு சுவிப்ற் வை - கொப்பி சேர்விஸ்ஸினால் பிரதி பண்ணப்படுவதற்காக மூன்று எழுத்திலான பணி அடையாளப்படுத்துநர் குறியீட்டினை உள்ளடக்குதல் வேண்டும்.

லங்கா செட்டில் முறைமையிலுள்ள அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான பணி அடையாளப்படுத்துநர் குறியீடு (பயன்படுத்துநர் முனைப்பியின் களம் 103 அல்லது புளொக் 3 இற்குப் பதிலாக) **எல்கேபீ** எனப்படும்.

### 2.7 மூடப்பட்ட பயன்படுத்துநர் தொகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்தி வகைகள்

பின்வரும் சுவிப்ற் செய்தி வகைகள் (கொடுப்பனவு அறிவுறுத்தல்கள்) மூடப்பட்ட பயன்படுத்துனர் தொகுதியின் பயன்பாட்டிற்கு கிடைக்கதக்கதாகவுள்ளன.

| | |
|---|---|
| MT102 | பல் வாடிக்கையாளர் கொடுகடன் மாற்றல் |
| MT103 | தனியொரு வாடிக்கையாளர் கொடுகடன் மாற்றல் |
| MT202 | பொது நிதியியல் நிறுவன மாற்றல் |
| MT205 | நிதியியல் நிறுவன மாற்றல்களின் நிறைவேற்றல் |

### 2.8 லங்காசெட்டில் முறைமையில் தீர்ப்பனவுச் செய்திகள்

சுவிப்ற் வின் வை - கொப்பி சேர்விஸ், தீர்ப்பனவு செயன்முறையினை மேற்கொள்வதற்கு பின்வரும் செய்தி வகைகளைப் பயன்படுத்துகிறது.

MT096 - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக்கான பின் பிரதிச் செய்தி
MT097 - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலிருந்தான உறுதிப்படுத்தல்/ நிராகரிப்பு அறிவித்தலின் பின் பிரதிச் செய்தி

பின்வரும் கொடுப்பனவு அறிவுறுத்தல் இடையில் தடுக்கப்பட்டு பிரதி செய்யப்பட்டு லங்கா செட்டில் முறைமை யிலிருந்தான நேர்க்கணிய அல்லது எதிர்க்கணிய பதிலிறுப்புகளின் நிலுவையிலுள்ள பெறுகையாக களஞ்சியப்படுத்தப்படுகிறது. சுவிப்ற் வின் வை கொப்பி சேர்விஸ் “பகுதியளவு” பிரதி மாதிரியில், அதாவது முன்செல்வது (அனுப்புநர் மற்றும் பெறுநர்) மற்றும் பின்செல்பவர் என்பவற்றுடன் சேர்த்து தீர்ப்பனவு செயன்முறைக்காக (களங்கள் 20 மற்றும் 32அ கொடுக்கல்வாங்கல் தொடர்பு, செல்லுபடியாகும் திகதி, நாணயக் குறியீடு மற்றும் தொகை) லங்கா செட்டில் முறைமைக்கு அனுப்பிவைக்கப்பட்ட MT096 இல் ஒரு சில தகவல்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன.

லங்கா செட்டில் முறைமை MT096 இனை செயன்முறைப்படுத்துவதுடன் MT 097 உடன் சுவிப்ற் வின் வை - கொப்பி இற்குப் பதிலிறுத்துகிறது.

சுவிப்ற் வின் வை - கொப்பியானது, செய்தியின் முன்செல்லும் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள தீர்ப்பனவு விபரங்களுடன் பெறுகின்ற பங்கேற்பாளருக்கு வெற்றிகரமாக தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுப்பனவு அறிவுறுத்தல் (உ-ம்: MT103) அனுப்பி வைக்கிறது. MT096 லங்கா செட்டில் முறைமையின் சரிபார்க்கும் செயன்முறையின் போது பிழையாகுமிடத்து, எதிர்மறையான MT097 (நிராகரிப்பு பதிலிறுப்பு) சுவிப்ற் வின் வை கொப்பிக்குத் திருப்பி அனுப்பப்படும்.

**2.9 நிறைவுபெறாத அறிவித்தல்கள் (MT019) மற்றும் நிறைவுபெறாத காரணக் குறியீடுகள்**

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை கொடுப்பனவு அறிவுறுத்தலொன்றின் தீர்ப்பனவினைப் பூரணப்படுத்த முடியாமையிருக்குமிடத்து அது சுவிப்ற் வின் வை - கொப்பி சேர்விஸ்ஸிற்கு எதிர்மறை MT097 (நிராகரிப்பு பதிலிறுப்பு) இனை அனுப்பி வைக்கிறது. அதன் பின்னர் சுவிப்ற் வின் வை - கொப்பி சேர்விஸ் அனுப்பும் பங்கேற்பாளரும் நிராகரிப்பிற்கான காரணங்களை விளங்குகின்ற நிறைவுபெறாத அறிவித்தலொன்றினை அனுப்பி வைக்கின்றது.

நிராகரிப்பிற்கான ஒவ்வொரு காரணத்திற்கும் இரண்டு இலக்க நிறைவுபெறாத அறிவித்தல் குறியீடு (இணைப்பு பீ) வழங்கப்படுகிறது. இது நிறைவுபெறாத அறிவித்தலின் களம் 432 இல் காணப்படுகிறது. (MT019) நிறைவுபெறாத அறிவித்தல் குறியீடு காரணம் மற்றும் நிராகரிப்பு அடையாளம் காணப்படுகின்ற செயன்முறை மையம் என்பனவற்றினைப் பொறுத்து சுவிப்ற்றினால் அல்லது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் வழங்கப்படுகிறது.

**2.10 அனுப்புநர் அறிவித்தல்கள் (MT012)**

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலிருந்து நேர்க்கணிய MT097 உறுதிப்படுத்தல் பதிலிறுப்பு கிடைக்கப் பெற்றதும் சுவிப்ற் வின் வை - கொப்பி அனுப்புகின்ற பங்கேற்பாளருக்கு அனுப்புகை அறிவித்தல் (MT012) அனுப்புகின்றது.

**2.11 சுவிப்ற் கட்டணங்கள் மற்றும் நேர்மாற்று பட்டியற்படுத்தல்**

ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஏற்புடைத்தான உடன்படிக்கைகளுக்கு அமைவாக, சுவிப்ற் சேர்விஸ்ஸினால் தீர்மானிக்கப்பட்டவாறான கட்டணத்தின்படி, அத்தகைய பங்கேற்பாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட கொடுப்பனவு அறிவுறுத்தல்களின் சுவிப்ற் வின் வை - கொப்பி நடவடிக்கைகளுடன் இணைந்த செய்தி அனுப்பல் தொடர்பான செலவுகளை சுவிப்ற்றிற்கு செலுத்துவதற்கு நேரடியாக பொறுப்புடையவர்களாவர்.

லங்கா செகுயர் முறைமையில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்காக அத்தகைய பங்கேற்பாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணைந்த செய்தியனுப்பல் தெரிவுகளை சுவிப்ற்றிற்கு செலுத்துவதற்கு ஒவ்வொரு பங்கேற்பாளரும் பொறுப்புடையவராவர்.

"நேர்மாற்று பட்டியற்படுத்தல்" ஒழுங்கின் கீழ், ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்காசெகுயர் முறைமை என்பனவற்றினால் அனுப்பப்பட்ட செய்திகளின் செலவினை அத்தகைய பங்கேற்பாளர்கள் சுவிப்ற்றிற்கு நேரடியாக செலுத்துவதற்குப் பொறுப்புடையவர்களாக இருப்பர். அதாவது சுவிப்ற் கட்டணங்கள் வழமையாக சுவிப்ற் செய்திகளை அனுப்புபவர்களுக்கு எதிராகவே விதிக்கப்படுகின்றன.

**3. குறிப்பிட்ட செய்தி தேவைப்பாடுகளை உள்ளடக்கியுள்ளன**

**3.1 வாடிக்கையாளர் நன்மைபெறுநர் அடையாளப்படுத்தல்**

கொடுப்பனவு அறிவுறுத்தல்களின் வாடிக்கையாளர் நன்மைபெறுநர்கள் கணக்கின் பெயர் மற்றும் இலக்கம் இரண்டினையும் பயன்படுத்தி பங்கேற்பாளர்களினால் அடையாளம் காணப்படவிருக்கின்றன.

**3.2 கொடுக்கல்வாங்கல் தொடர்புகள்**

அனைத்து கொடுப்பனவு அறிவுறுத்தல்களும் தொடர்பு இலக்கத்தினை கொண்டிருப்பதனை பங்கேற்பாளர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். இத்தொடர்பு இலக்கம் ஏதேனும் கலண்டர் ஆண்டிற்குள் ஒரே மாதிரியான தாக இருத்தல் வேண்டும்.

**3.3 செல்லுபடியாகும் திகதிகள் மற்றும் கொடுப்பனவுகளின் களஞ்சியப்படுத்தல்**

ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும், லங்கா செட்டில் முறைமையானது களஞ்சியப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கொடுப்பனவு அறிவுறுத்தலும் செல்லுபடியாகக்கூடிய திகதியினை கொண்டிருக்கின்றதா என்பதனைப் பரிசோதிக்கிறது. களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தலின் செல்லுபடியாகும் திகதி ஏற்கனவே காலம் கடந்திருப்பின் அது நிராகரிக்கப்படும்.

லங்கா செட்டில் முறைமையானது, எதிர்கால செல்லுபடியாகும் பெறுமதி திகதிகளில் தீர்ப்பனவு செய்வதற்காக கொடுப்பனவு அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்ளவும் களஞ்சியப்படுத்தவும் இயலக்கூடியதாக இருக்கிறது. முறைமையானது தற்போதைய செல்லுபடியாகும் திகதியிலிருந்து பத்து (10) கலண்டர் நாட்கள் வரையிலான தீர்ப்பனவுகளுக்கான கொடுப்பனவு அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்கிறது. எதிர்காலப் பெறுமதிகளைக் கொண்ட முன்கூட்டிய கொடுக்கல்வாங்கல்கள் பத்து (10) கலண்டர் நாட்களை விஞ்சும் பொழுது நிராகரிக்கப்படுகின்றன.

வியாபார நாளொன்று விடுமுறை நாளாக பிரகடனம் செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அதாவது விதிவிலக்கான தொரு சூழ்நிலையின் காரணமாக இலங்கை மத்திய வங்கி வியாபாரத்திற்கு திறக்கப்படாதிருக்கும் நாளன்று, களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பெறுமதிக்கான கொடுப்பனவு அறிவுறுத்தல்களை இரத்துச் செய்வது அல்லது பெறுமதித் திகதிகளை மீள அனுப்பிவைப்பது பங்கேற்பாளரின் பொறுப்பாகும்.

**3.4 நாணயம்**

அனைத்து லங்காசெட்டில் கொடுப்பனவு அறிவுறுத்தல்களும் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்படல் வேண்டும் என்பதுடன் இலங்கை ரூபாவில் தீர்ப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்.

**3.5 கிளையினை அடையாளப்படுத்தல்**

ஒவ்வொரு பங்கேற்பாளரும் சாத்தியமானளவிற்கு, நன்மைபெறுநர்களின் கணக்குகள் பேணப்படும் பங்கேற்பாளரின் கிளைகளை அடையாளம் காணும் பொறிமுறையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**4. தவறாகச் செயன்முறைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள்**

**4.1 தவறுதலாக அனுப்பப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுப்பனவுகளை திருப்பி அனுப்புதல்**

அனுப்புகின்ற பங்கேற்பாளர்கள், தீர்ப்பனவு செய்யப்படாத கொடுப்பனவு அறிவுறுத்தல்களை அவர்களது காத்திருக்கும் தீர்ப்பனவுகளிலிருந்து மீளப்பெறப்பட முடியுமெனினும் லங்கா செட்டில் தீர்ப்பனவுக் கணக்குகளினூடாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து அனுப்புகின்ற பங்கேற்பாளர்கள் அவற்றை மீளப்பெற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கமாட்டார்கள்.

அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், அனுப்புகின்ற பங்கேற்பாளர், பெறுகின்ற பங்கேற்பாளர்களிடமிருந்து தொலைநகல் அல்லது தொலைபேசி மூலம் (தொலைநகல் மூலமான உறுதிப்படுத்தலுடன்) கொடுப்பனவுகளை திருப்பி அனுப்புமாறு கேட்டுக்கொள்ள முடியும். பெறுகின்ற பங்கேற்பாளர் அத்தகைய கோரிக்கையுடன் இணங்கிக்கொள்ள முடியுமா என்பது பற்றி அவர் சொந்த மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**4.2 பிரயோகிக்கப்பட முடியாமலிருக்கும் கொடுப்பனவுகள்**

பெறுகின்ற பங்கேற்பாளரொருவர் அனுப்புகின்ற பங்கேற்பாளரொருவருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாமலிருக்கின்ற சந்தர்ப்பமொன்றில் அதாவது

- இறுதிப் பயன்பெறுநரின் கணக்கு விபரங்கள் போதுமானதாக அல்லது முரண்பாடானவையாக இருக்கு மிடத்து அல்லது
- கொடுப்பனவில் இறுதிப் பயன்பெறுநர் கணக்கு மூடப்பட்டுள்ளதாக குறித்துரைக்கப்படுமிடத்து

கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படும்.

ஒரு பங்கேற்பாளரிடமிருந்து மற்றொரு பங்கேற்பாளருக்குச் செய்யப்படும் கொடுப்பனவுகளைப் பொறுத்தவரை, (MT202 மற்றும் MT205) பங்கேற்பாளர்கள் அத்தகைய கொடுப்பனவுகளை அனுப்பும் பங்கேற்பாளர்களுக்கு வியாபார நாளன்றும் வாடிக்கையாளர் கொடுப்பனவுகளைப் பொறுத்தவரையில் (MT102 மற்றும் MT103) அடுத்த வியாபார நாளன்று இறுதியிலும் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

திரும்பல் கொடுப்பனவொன்று புதிய MT202 பங்கேற்பாளரிடமிருந்து பங்கேற்பாளருக்கான புதிய நடவடிக்கையொன்றாக இருத்தல் வேண்டும். திரும்பல் அறிவுறுத்தலும் மூல அறிவுறுத்தலின் தொடர்பு இலக்கத்தினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கொடுப்பனவு "திரும்பல் கொடுப்பனவு" என்பதனைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாகவும் இருத்தல் வேண்டும். திரும்பல் பங்கேற்பாளர் திரும்பல் கொடுப்பனவு தொடர்பில் உறப்பட்ட நியாயமான செலவுகளை, அனுப்புகின்ற பங்கேற்பாளர்களிடமிருந்து கோரலாம்.

**5. தீர்ப்பனவுக் கணக்கு மாற்றல்கள்**

தீர்ப்பனவுக் கணக்கு மாற்றல்கள் என்பது இலங்கை மத்திய வங்கியினால் நேரடியாக முன்னெடுக்கப்படும் பங்கேற் பாளர் தீர்ப்பினால் கணக்கொன்றிற்குச் செய்யப்படும் பற்று மற்றும் வரவுகளாகும். இந்நேரடி கணக்கு தொழிற் பாடுகள் என்பது பொறுப்பாணை உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற மையாகும்.

பங்கேற்பாளர்கள், இக்கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் சுவிப்ற் ஊடாக (MT900 மற்றும் MT910) பற்று மற்றும் வரவு அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்வர்.

## 6. காத்திருக்கும் பட்டியல் முகாமைத்துவம்

### 6.1 நிதியத்தின் கிடைப்பனவினைச் சரிபார்த்தல்

லங்கா செட்டில் முறைமையானது, பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பற்று வைப்பதற்கான கொடுப்பனவு அறிவுறுத்தலைப் பெற்றுக்கொள்ளும் பொழுது முறைமையானது நிதியத்தின் கிடைப்பனவு தொடர்பில் தொடர்பான தீர்ப்பனவுக் கணக்கினைச் சரிபார்த்துக் கொள்கிறது. சரிபார்க்கும் நேரத்தில் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி இருந்தாலொழிய கொடுக்கல்வாங்கல்கள் செயற்படுத்தப்படமாட்டாது. நிதியத்தின் கிடைப்பனவானது கணக்கிலுள்ள மீதி அதேபோன்று வேறு ஏதேனும் கணக்கில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகள் அதாவது குறைந்தபட்ச மீதித் தேவைப்பாடுகள் மற்றும் தீர்ப்பனவுக் கணக்கு வரையறை (ஏதுமிருப்பின்) என்பனவற்றைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும்.

கணக்கில் போதுமான நிதி இருக்குமாயின் மூலக் கொடுப்பனவு அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு அனுப்புகின்ற பங்கேற்பாளரின் கணக்கிற்குப் பற்று வைக்கப்பட்டு பெறுகின்ற பங்கேற்பாளரின் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் தொடர்பான வெளியீட்டுச் செய்தியும் விடுக்கப்படும்.

### 6.2 காத்திருத்தல்

கொடுப்பனவு அறிவுறுத்தலின் படி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தொடர்பான தீர்ப்பனவுகள் கணக்குகளில் போதுமான நிதி இல்லையாயின் முறைமையில் இது காத்திருக்கும். அத்தகைய தீர்ப்பனவுகள் கணக்குகளுக்கு நிதி வரவு வைக்கப்படும் பொழுது காத்திருந்த கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் நிதியின் கிடைக்கும் தன்மை முறைமையினால் மீண்டும் பரிசோதிக்கப்படும்.

### 6.3 காத்திருக்கும் வரிசை ஒழுங்கில் முதலில் வந்தது முதலில் தீர்ப்பனவு செய்யப்படும்

அனைத்துக் கொடுப்பனவு அறிவுறுத்தல்களும் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் அது கொண்டிருக்கும் முன்னுரிமையின் அடிப்படையில் காத்திருப்புப் பட்டியலில் சேகரிக்கப்பட்டு, வழங்கப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில், முதலில் வந்தது முதலில் என்ற அடிப்படையில் நிதியியலின் கிடைப்பனவுத் தன்மையினை சரிபார்ப்பதற்காக மீளச் சமர்ப்பிக்கப்படும். அதாவது, ஒரே மாதிரியான முன்னுரிமையினைக் கொண்ட அனைத்து கொடுப்பனவு அறிவுறுத்தல்களும் அவை பெறப்பட்ட ஒழுங்கில் காத்திருப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் ஒவ்வொரு பங்கேற்பாளரதும் காத்திருப்பு வரிசைப் பட்டியலிலுள்ள "மிகப் பழைய" கொடுக்கல்வாங்கல் நிதியின் கிடைப்பனவிற்காக முதலில் சரிபார்க்கப்படுகிறது. ஒவ்வொரு பங்கேற்பாளரதும் காத்திருப்பு வரிசைப் பட்டியலிலுள்ள தலைமைக் கொடுக்கல்வாங்கல் மாத்திரமே நிதியின் கிடைப்பனவிற்காக சரிபார்க்கப்படுகிறது.

காத்திருப்பு வரிசைப் பட்டியலிலுள்ள முதலில் வந்தது முதலில் தீர்ப்பனவு செய்யப்படும் என்ற ஒழுங்கு, இத்தொகுதியிலுள்ள 6.4 விதியில் விபரிக்கப்பட்டுள்ள காத்திருப்பு முகாமைத்துவ வசதிகளை பயன்படுத்துவதன் மூலம் மாத்திரமே மாற்றியமைக்கப்படும்.

### 6.4 கொடுக்கல்வாங்கல்களுக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமைகள்

கொடுப்பனவு அறிவுறுத்தல்களுக்கான முன்னுரிமைகள் 0 இலிருந்து 99 வரையிலான வீச்சிலுள்ள இலக்கங்களின் மூலம் வழங்கப்படுவதுடன் இதில் பூச்சியம் உயர்ந்த முன்னுரிமையினையும் 99 மிகக் குறைந்த முன்னுரிமையையும் கொண்டிருக்கிறது. 6 - 11 வரையான மற்றும் 99 முன்னுரிமைகள் முறைமைக்காக அல்லது இலங்கை மத்திய வங்கியின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. 12 - 98 வரையான வீச்சிலுள்ள முன்னுரிமைகள் பங்கேற்பாளர்களின் பயன்பாட்டிற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

எல்லாச் சூழ்நிலைகளிலும் இலங்கை மத்திய வங்கியின் கணக்கு மாற்றல்களுக்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி உரிய நேரத்தில் வழங்கப்படுவதனையும் திரும்பப் பெறப்படுவதனையும் உறுதிப்படுத்துவதில் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி கொடுக்கல்வாங்கல்கள் முன்னுரிமை ஒழுங்கில் 5ஆம் இலக்கத்திற்குள் உயர்ந்த முன்னுரிமையினைப் பெறுகின்றன.

பங்கேற்பாளரொருவர் முன்னுரிமை இலக்கம் இல்லாமல் கொடுப்பனவு அல்லது பிணையங்கள் அறிவுறுத்தலொன்றினை சமர்ப்பிக்குமிடத்து அதற்கு 98 என்ற முன்னுரிமை தவறிய இலக்கம் வழங்கப்படும். அதாவது அதற்கு மிகவும் அடிமட்ட நிலையொன்று / பங்கேற்பாளரின் கொடுப்பனவு அறிவுறுத்தல் காத்திருப்புப்பட்டியலில் இறுதிநிலை வழங்கப்படும்.

### 6.5 ஏற்கனவே காத்திருப்பு பட்டியலிலுள்ள கொடுப்பனவு ஒழுங்கினை மாற்றுதல்

அனுப்புகின்ற பங்கேற்பாளரொருவர் காத்திருக்கும் பட்டியலிலுள்ள கொடுப்பனவு அறிவுறுத்தல்களின் முன்னுரிமைகளை, பங்கேற்பாளரின் கணனித்திரை உலாவி இடைமுக வசதிகளைப் பயன்படுத்தி தனிப்பட்ட கொடுப்பனவு ஊக்குவிப்பினை மேற்கொள்வதன் மூலம் மாற்ற முடியும்.

இலங்கை மத்திய வங்கி காத்திருப்பு பட்டியலிலுள்ள கொடுப்பனவு அறிவுறுத்தலின் முன்னுரிமையினை மாற்றுவதில் தலையிட முடியும். இது காத்திருப்பு பட்டியலில் காணப்படும் தடங்கல்களை தீர்ப்பதற்கு தீர்ப்பனவு பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கென எடுக்கப்படுகின்ற விதிவிலக்கான வழிமுறையேயாகும்.

### 6.6 காத்திருப்பு வரிசைப் பட்டியலிருந்து கொடுப்பனவுகளை இரத்துச் செய்தல்

அனுப்புகின்ற பங்கேற்பாளரொருவர், பங்கேற்பாளர் கணனித்திரை உலாவி இடைமுக வசதியைப் பயன்படுத்தி அதன் காத்திருப்பு வரிசைப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள அதன் ஏதேனும் கொடுப்பனவு அறிவுறுத்தலினை இரத்துச் செய்ய முடியும்.

பங்கேற்பாளரொருவர் அதன் காத்திருப்பு வரிசைப் பட்டியலிலிருந்து தீர்ப்பனவுக் கணக்கு மாற்றலை இரத்துச் செய்ய முடியாது. இலங்கை மத்திய வங்கி மாத்திரம் தீர்ப்பனவுக் கணக்கு மாற்றலை இரத்துச் செய்ய முடியும்.

### 6.7 தொகுதிப் பாதுகாப்புத் தீர்மானம்

லங்காசெட்டில் முறைமையின் மென்பொருள் பிரயோகம் இலங்கை மத்திய வங்கிக்கு அதன் தொகுதிப் பாதுகாப்புத் தீர்மான மாதிரியிலுள்ள காத்திருப்புப் பட்டியல் கொடுப்பனவு அறிவுறுத்தல்களின் கணிசமான நிலுவைகளை தீர்ப்பதற்கான கருவிகளை வழங்குகின்றது.

போதுமான நிதி இல்லாமையின் காரணமாக காத்திருப்பு பட்டியலில் காணப்பட்ட கொடுப்பனவு அறிவுறுத்தல்களின் துணைத்தொகுதியை தெரிவு செய்வதற்கு இம்மாதிரியானது அல்கோறிதம் விதியினை பிரயோகிக்கிறது. இதனை குறைந்தபட்சக் கணக்கு நிலுவைகளுக்கான வரையறைகளை மீறாமல் தொகுதியொன்றாகச் செயற்படுத்த முடியும். கொடுப்பனவுகள் ஒவ்வொரு தீர்ப்பனவுக் கணக்கிற்குமெதிராக காத்திருப்பு வரிசைப் பட்டியலிலுள்ள ஒழுங்கில் ஒரு முக்கிய தொகுதிப் பாதுகாப்புத் தீர்மானத்திற்காக கொடுப்பனவுகள் தெரிவு செய்யப்படுகின்றன.

தொகுதிப் பாதுகாப்புத் தீர்மானமானது குறிப்பிட்ட நேரத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்டவாறான இடைவெளியில் தன்னியக்க நடவடிக்கைக்காக அட்டவணைப்படுத்தப்பட்டிருக் கிறது. தீர்ப்பனவு செய்யப்படாத கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் பெருமளவில் நிலுவையிலிருக்கும் பொழுது இதனை இலங்கை மத்திய வங்கிகளினாலும் மேற்கொள்ள முடியும்.

### 6.8 நாளின் முடிவில் தீர்ப்பனவு செய்யப்படாத கொடுக்கல்வாங்கல் தொடர்பான நடவடிக்கைகள்

தொழிற்பாட்டு நாளின் இறுதியில், தீப்பனவு செய்யப்படாத செல்லுபடியாகும் திகதியான நடைமுறை வியாபார நாளைக் கொண்ட கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படும். நிராகரிக்கப்பட்டமையினை அறிவிக்கின்ற சுவிப்ற் செய்தியினை அனுப்புநர் பெறுவார்.

## 7. ஒருநாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி

### 7.1 பொதுநோக்கு

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழ் பங்கேற்பாளர்கள் அவர்களது ஒருநாளுக்குள்ளேயான திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு உதவுவதற்காக இலங்கை மத்திய வங்கி தகைமை யுடைய பங்கேற்பாளர்களுக்கு ஒருநாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியை வழங்குகிறது. ஒருநாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி அனைத்து வணிகர் நேரடி பங்கேற்பாளர்களுக்கும் கிடைக்கத் தக்கதாகவிருக்கும் என்பதுடன் அத்தகைய பங்கேற்பாளர்கள் பல ஒருநாளுக்குள்ளேயான திரவவசதிக் கோரிக்கையினையும் மேற்கொள்ள முடியும் என்பதுடன் வியாபார நாளொன்றிற்குள் அவரின் சுயவிருப்பின் அடிப்படையில் பின்வாங்கிக் கொள்ளவும் முடியும். ஒருநாளுக்குள்ளேயான திரவவசதி குறித்துரைக்கப்பட்ட வணிகரல்லாத விலைக்குறிப்பீட்டாளர்களுக்கும் இலங்கை மத்திய வங்கி அதன் சொந்தத் தற்றுணிவின் அடிப்படையில் அவ்வாறு வழங்குவதற்கு தீர்மானிக்குமிடத்து மாத்திரம் கிடைக்கச் செய்யப்படும்.

ஒருநாளுக்குள்ளேயான திரவவசதியானது மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் மூலமாக வழங்கப்படு வதுடன் தகைமை வாய்ந்த பிணையங்கள் மூலமாக முழுமையாக பிணையிடவும்படுகின்றன. ஒருநாளுக் குள்ளேயான திரவவசதிக்கு தகைமையுடைய பங்கேற்பாளர்கள் இலங்கை மத்திய வங்கியுடன் ஒருநாளுக் குள்ளேயான திரவ வசதி உடன்படிக்கையொன்றினை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் விடுக்கப்படும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கிக் கொள்ளுதலும் வேண்டும்.

### 7.2 தகைமைவாய்ந்த பிணையங்கள்

அனைத்துப் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களும் பத்திரங்களற்ற திறைசேரி முறிகளும் ஒருநாளுக் குள்ளேயான திரவவசதி நோக்கத்திற்காக தகைமையுடைய பிணையங்களாகக் கருதப்படல் வேண்டும். எனினும், இலங்கை மத்திய வங்கி அதன் ஏக தற்றுணிவின் அடிப்படையில் பங்கேற்பாளர்களுக்கான ஏழு

(7) கலண்டர் நாள் முன்னறிவித்தலுடன் பிணையங்களின் தகைமைகளில் மாற்றங்களைச் செய்யலாம் பங்கேற்பாளர்கள் தகைமையற்ற பிணையங்கள் எதனையும் அவர்களது ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதிக்கான பிணையுறுதிகளாக உள்ளடக்கக்கூடாது.

வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் அவர்களது வாடிக்கையாளர்களுக்குச் சொந்தமான பிணையங்களை ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதிகளுக்கு பிணையுறுதிகளாக பயன்படுத்தக்கூடாது.

**7.3 ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி உடன்படிக்கை**

ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி உடன்படிக்கைக்கு ஏற்புடைத்தான நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான உடன்படிக்கையில் கூடுதலானளவிற்கு விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவ்விதிகளுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குமிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி உடன்படிக்கையின் ஏற்பாடுகளே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**8. குறைந்தபட்ச மீதித் தேவைப்பாடுகள்**

இலங்கை மத்திய வங்கி, பங்கேற்பாளர்களுக்கான நியாயமான அறிவித்தலுடன் எந்தவொரு நேரத்திலும் லங்கா செட்டில் முறைமையின் மீது குறைந்தபட்ச மீதித் தேவைப்பாடொன்றினை விதிக்க முடியும். அத்தகைய தேவைப்பாட்டினை விதிக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களது கொடுக்கல்வாங்கல்கள் அவர்களது தீர்ப்பனவுக் கணக்கிலுள்ள மீதியை குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மீதிக்கும் கீழே குறைந்திருக்குமாயின் அது தீர்ப்பனவு செய்யப்படமாட்டது என்பதுடன் அது அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையிலுள்ள காத்திருப்புப்பட்டியலுக்கு அனுப்பப்படும்.

**9. பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிகள்**

**9.1 மூன்றாந்தரப்பு தீர்ப்பனவுக் கடப்பாட்டு மதியுரைகள் மீது செயற்படுவதற்கான பொறுப்பாணை**

இலங்கை மத்திய வங்கிக்கு பற்று மற்றும் வரவு அறிவிப்புச் சீட்டுக்களை நேரடியாக அனுப்புகின்ற அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு கொடுத்துத் தீர்க்கின்ற தொழிற்பாட்டாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு கொடுத்துத் தீர்க்கின்ற ஒழுங்குகளின் கீழ் பங்கேற்பாளர்கள் தமது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக தமது தீர்ப்பனவுக் கணக்குகளைப் பற்று வைக்கின்றார்கள் அல்லது வரவு வைக்கின்றனர். இலங்கை மத்திய வங்கி அத்தகைய அறிவிப்புச் சீட்டுக்களின் அடிப்படையில் பங்கேற்பாளர்களின் தீர்ப்பனவுக் கணக்குகளில் பற்று மற்றும் வரவுப் பதிவுகளை மேற்கொள்கின்றதுடன் எந்தவொரு மூன்றாந்தரப்பு கொடுத்துத் தீர்த்தல் தொழிற்பாட்டாளரினாலும் புரியப்பட்ட ஏதேனும் தவறுகளுக்கு பொறுப்பாகவும் மாட்டாது.

**9.2 லங்கா செட்டில் தீர்ப்பனவுக் கணக்குகள் தொடர்பில் தேறிய தீர்ப்பனவுகளை மேற்கொள்ளுதல்**

தேறிய தீர்ப்பனவுத் தொகுதி என்பது கொடுப்பனவு அல்லது பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினை நடத்துவதிலிருந்து தோற்றுகின்ற தேறிய கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக இலங்கை மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்படும் பல்புடை பற்றுக்கள் மற்றும் வரவுகளுடன் தொடர்புபட்ட தீர்ப்பனவுக் கணக்கு மாற்றல் தொகுதியொன்றாகும்.

லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் பின்வரும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையின் தேறிய தீர்ப்பனவுகள் தொகுதி ஒழுங்குகள் தற்பொழுது தீர்ப்பனவிற்காக இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

- பிரதான காசோலை கொடுத்துத் தீர்த்தல்
- இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை கொடுத்துத் தீர்த்தல்
- சீராக்கக் கொடுத்துத் தீர்த்தல்
- தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல்

மேலும், இலங்கை மத்திய வங்கி அதன் சொந்த தற்றுணிவின்படி எந்தவொரு கொடுத்துத் தீர்த்தல் தீர்ப்பனவிற்கும் ஒப்புதல் வழங்கலாம். தேறிய தீர்ப்பனவுத் தொகுதிகள் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நேர முறைமைக்கு மாற்றல் செய்யப்படுகின்றன.

**9.3 போதுமானதற்ற நிதியின் காரணமாக தீர்ப்பனவுத் தொகுதி இடைநிறுத்தப்படுதல் அல்லது நிறைவேற்றப் படாது போதல்**

தேறிய தீர்ப்பனவுத் தொகுதியினை உடனடியாக செயன்முறைப்படுத்த அனுமதிப்பதற்கு அவர்களது தீர்ப்பனவுக் கணக்குகளில் போதுமான நிதி இருப்பதனை பங்கேற்பாளர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். எவரேனும் ஒருவர் அல்லது கூடுதலான பங்கேற்பாளர்கள் தேறிய கொடுத்துத் தீர்த்தல் பற்றிற்கு அவரின் /

அவர்களது தீர்ப்பனவுக் கணக்கில் / கணக்குகளில் போதுமான நிதியினைக் கொண்டிருக்காத சந்தர்ப்பத்தில் முழுத்தொகுதியும் இடை நிறுத்தப்படும். தேறிய பற்று கொடுத்துத் தீர்த்தல் தொகையினையுடைய அனைத்து பங்கேற்பாளர்களும் அவர்களது தீர்ப்பனவுக் கணக்குகளில் போதுமான நிதியினைக் கொண்டிருந்தாலொழிய தேறிய தீர்ப்பனவுத் தொகுதியில் ஏதேனும் பற்றுக்களோ அல்லது வரவுகளோ மேற்கொள்ளப்படமாட்டது. தேறிய தீர்ப்பனவுத்தொகுதி அறிவுறுத்தல் முறைமையில் பதிவு செய்யப்படுகின்ற வேளையில் இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளரின் தேறிய பற்று கொடுத்துத் தீர்த்தல் வரையான தொகையினை பங்கேற்பாளர் தீர்ப்பனவுக் கணக்கில் நிதியினை ஒதுக்கி வைப்பதற்கான உரிமையினையும் தொகுத்து தீர்ப்பனவு நிறைவு செயன்முறைப்படுத்துவதனை தடுத்து வைப்பதற்கான உரிமைகளையும் கொண்டிருக்கும் இலங்கை மத்திய வங்கி அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மீதான ஏனைய அட்டவணையிடப்பட்ட தேறிய தீர்ப்பனவு ஒழுங்குகளுக்கு உட்பட்டு, எந்தவொரு நேரத்திலும் இலங்கை மத்திய வங்கி மேற்கொள்ள முடியாமல்போன தேறிய தீர்ப்பனவுத் தொகுதியினை மீள முயற்சிப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளலாம்.

போதுமான நிதி இல்லாமையின் விளைவாக தேறிய தீர்ப்பனவுத் தொகுதி இடைநிறுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கி தொடர்பு கொள்ளக்கூடிய மூத்த அலுவலரொருவரை ஒவ்வொரு பங்கேற்பாளரும் நியமித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து பங்கேற்பாளர், தீர்ப்பனவுகள் நிறைவடைவதனை இயலச்செய்யும் விதத்தில் அதன் தீர்ப்பனவுகள் கணக்கிற்கு நிதியினை வழங்குவதற்கு உடனடியாக ஒழுங்குகளை செய்தல் வேண்டும். எவ்வாறெனினும், போதுமான நிதி இல்லாமை பற்றி பங்கேற்பாளருக்கு அறிவிப்பது மத்திய வங்கியின் கடப்பாடு அல்ல என்பதுடன் ஒவ்வொரு பங்கேற்பாளரும் அதன் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முழுப்பொறுப்புடையவர்களாவர்.

தேறிய தீர்ப்பனவுத் தொகுதி வியாபாரம் முடிவடையும் நேரத்திலும் இடைநிறுத்தப்பட்டிருக்குமாயின், தொகுதியிலுள்ள அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் நிராகரிக்கப்படும். பங்கேற்பாளர், ஒரு வருட காலப்பகுதிக்குள் ஒரு தடவைக்கு மேல் செலுத்தத் தவறியிருப்பின் இலங்கை மத்திய வங்கி, விடயம் எது எப்படியிருப்பினும் அத்தகைய தேவைப்பாடுகளை மற்றொரு பங்கேற்பாளர்கள் மீது விதிக்காது. அத்தகைய பங்கேற்பாளர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் கொடுத்துத் தீர்த்தல் மீதிகளின் நோக்கத்திற்காக அதன் அதேநேர மொத்தத்தீர்ப்பனவுக் கணக்கிலுள்ள தீர்ப்பனவுக் கணக்கின் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மீதிகளைப் பேண வேண்டுமென அத்தகைய பங்கேற்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுவர்.

### 9.4 தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி காணப்படாமையினால் செலுத்தத் தவறியமைக்கான கட்டணங்கள்

தேறிய தீர்ப்பனவுத் தொகுதியின் செயன்முறைப்படுத்தலுக்காக, அத்தகைய தீர்ப்பனவு நிறைவடையும் வரை இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணையில் குறிக்கப்பட்ட நேரத்தில் பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியம் கிடைக்கத்தக்க தாகவுள்ளமையினை ஒவ்வொரு பங்கேற்பாளர்களும் உறுதிப்படுத்துவது அவர்களின் பொறுப்பாகும். பற்றுக்கள் மேற்கொள்வதற்கு அனுமதிக்கின்ற தேறிய பற்றுக் கொடுத்துத் தீர்த்தல் தொகையுடன் பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்கின் போதுமான நிதி இல்லாமையானது பின்வரும் விதத்தில் செலுத்தத்தவறிய கட்டணங்களை பங்கேற்பாளர் செலுத்துவதற்கு பொறுப்புடையதாக்கும்.

ரூ.100,000 = முதலாவது மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஏதேனும் பகுதிக்கு

ரூ.200,000 = இரண்டாவது மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஏதேனும் பகுதிக்கு

மேலதிகமாக ரூ.500,000 கொண்ட தொகை : போதுமானதற்ற நிதி இரண்டு மணித்தியாலத்திற்கு மேல் நீடிக்கு மிடத்து.

### 9.5 செலுத்தத்தவறும் காலப்பகுதியைக் கணித்தல்

மேலே விதி 9.4இல் காட்டப்பட்டவாறு செலுத்தத் தவறியமைக்கான கட்டணத்தினைக் கணிக்கின்ற நோக்கத் திற்காக, செலுத்தத் தவறிய காலத்தினை, இலங்கை மத்திய வங்கியினால் லங்கா செட்டில் முறைமைக்கு தீர்ப்பனவிற்காக கொடுத்துத் தீர்த்தல் தொகுதி முதலில் சமர்ப்பிக்கப்பட்ட நேரத்திலிருந்து கணித்தல் வேண்டும். எனினும், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையில் மற்றைய கொடுப்பனவுக் கடப்பாடுகள் தவணைத் திகதியை அடைவதற்கு முன்னதாக அவற்றினை பூர்த்தி செய்வதற்குப் புறம்பாக, தவணை தவறிய பங்கேற்பாளர்கள், தொகுதியின் தீர்ப்பனவு நேரத்திற்கு முன்னதாக தவறிப்போன கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்யும் விதத்தில் அத்தகைய நிதிகளைப் பேணுகின்ற விதத்தில் அதன் தீர்ப்பனவுக் கணக்குகளுக்கு போதுமான நிதியினை உள்ளீடு செய்யுமாயின் செலுத்தத் தவறிய காலப்பகுதி செலுத்தத் தவறிய பங்கேற்பாளரினால் தீர்ப்பனவுக் கணக்கிற்கு அத்தகைய நிதி உள்ளீடு செய்யப்பட்ட காலப்பகுதிவரை மாத்திரம் கணிப்பிடப்படல் வேண்டும்.

### 9.6 தீர்ப்பனவுக் கணக்குகளில் செலுத்தத்தவறிய கட்டணத்தினை பற்று வைத்தல்

தேறிய தீர்ப்பனவுத் தொகுதியினை உரிய நேரத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு போதிய நிதியினை பேண இயலாமல்போன பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்கில் செலுத்தத் தவறிய கட்டணங்கள் செலுத்தத் தவறுதல் இடம்பெற்ற வியாபார நாளுக்குப் பின்னர்வரும் அடுத்த வேலை நாளன்று பற்றுவைக்கப் பட்டு இலங்கை மத்திய வங்கியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு வரவு வைக்கப்பட்ட ஒவ்வொரு செலுத்தத் தவறிய கட்டணத்திலும் பத்து சதவீதம் (10 சதவீதம்) நிருவாகக் கட்டணமாக இலங்கை மத்திய வங்கியினால் கழிக்கப்படுவதுடன் மீதி வங்கியாளர் பயிற்சிக்கு பயன்படுத்துவதற்காக வழங்கப்படுமென்பதுடன்

இலங்கை வங்கிகள் அசோசியேஷன் (காரண்டி) லிமிடெட்டினால் இலங்கை மத்திய வங்கிக்கு விபரமான முறையில் அத்தகைய நோக்கத்திற்காக விண்ணப்பமொன்று மேற்கொள்ளப்படுமிடத்து நாணயச் சபையின் ஒப்புதலுக்குட்பட்டு அது கிடைக்கச் செய்யப்படும்.

விதிக்கப்பட்ட ஏதேனும் செலுத்தத் தவறியமைக்கான கட்டணம் இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கை மூலம் பதிலீடான அல்லது குறைவான அல்லது விலக்கப்பட்ட அல்லது ஏதேனும் உரிமையின் எவரேனும் பங்கேற்பாளர்கள் அல்லது இலங்கை மத்திய வங்கி அல்லது பங்கேற்பாளர் கொண்டுள்ள கோரல் ஏதேனும் நடவடிக்கைக்கு தேறிய தீர்ப்பனவுத் தொகுதியிலுள்ள அடிப்படையொன்றின் தீர்ப்பனவு செய்வதற்கு எவரேனும் பங்காளர் தவறுவதனால் ஏற்படுகின்ற சட்ட ரீதியான நீதிமன்றத்தின் ஏதேனும் நடவடிக்கைக்கு, வழக்குத் தொடுத்தல் அல்லது வழக்காடலுக்கு பங்கேற்பாளர் ஆளாதல் வேண்டும்.

**10. பங்கேற்பாளரிடையேயான முன்னோக்கிய பெறுமதி/ அதேநாள் பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்கள்**

**10.1 முன்னோக்கிய பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்**

எதிர்காலப் பெறுமதித் திகதிகளுக்காக பங்கேற்பாளர்களிடையே மேற்கொள்ளப்படுகின்ற பணச் சந்தை மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் (ரூபாய் பிரிவு) லங்கா செட்டில் முறைமையில் தொடர்பான பெறுமதித் திகதியில் நேரகாலத்துடன் தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும். இதற்கமைய கொடுப்பனவுப் பங்கேற்பாளர்கள் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை பெறுமதித் திகதியன்று மு.ப 10.00 மணியளவில் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

**10.2 அதே நாளன்று பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்கள்**

கொடுப்பனவு செய்யும் பங்கேற்பாளர்கள், லங்காசெட்டில் முறைமையில் பணச் சந்தை மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான (ரூபாய் பிரிவு) அதே நாளன்று பெறுமதி கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் முறைமையில் பதியப்பட்ட இரண்டு மணித்தியாலயங்களுக்கிடையில் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**11. தடங்கலற்ற வியாபாரம் மற்றும் பாதுகாப்பு**

லங்கா செட்டில் முறைமையானது இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள பிரதான அமைவிடத்திலிருந்து புவியியல் ரீதியாக தனியான வேறோரிடத்தில் அனர்த்த மீட்பு அமைவிடத்தினைக் கொண்டிருக்கிறது. லங்கா செட்டில் முறைமையின் தடங்கலற்ற வியாபாரத் திட்டமானது இலங்கை மத்திய வங்கியிலுள்ள அனைத்து முக்கியமான தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான முறைமைகளுக்காக கிரமமான முறையில் பரீட்சிக்கப்படுகிறது. பிரதான அமைவிடத்தின் தொழிற்பாடுகள் பழுதடையும் சந்தர்ப்பத்தில், பழுதடைந்த விடயம் பங்கேற்பாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்ட பின்னர் இரண்டு மணித்தியாலங்களுக்குள் லங்கா செட்டில் முறைமையின் அனர்த்த மீட்பிற்கு மாற்றல்களை மேற்கொள்ள முடியும்.

ஒவ்வொரு பங்கேற்பாளரும் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் வழிகாட்டல்களைப் பின்பற்றும் விதத்தில், தடங்கலற்ற தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு தடங்கலற்ற விதத்தில் நடவடிக்கைகளை பின்பற்றுவதற்காக அனர்த்த மீட்பு அமைவிடமொன்றினை ஏற்படுத்துமாறும் அனைத்து நடைமுறைகளையும் விளக்கும் விதத்தில் தடங்கலற்ற வியாபாரத் திட்ட ஆவணமொன்றினைத் தயாரிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## தொகுதி 3

## த லங்காசெட்டில் முறைமை

## (பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் மத்திய வைப்பக முறைமை)

### பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | **பொதுநோக்கு** | **33A** |
| 1.1 | லங்காசெகுயர் முறைமையின் தொழிற்பாடுகளும் அமைப்பியலும் | 33A |
| 1.2 | இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம் | 33A |
| 2 | **பங்கேற்பாளர்கள் மற்றும் கட்டுக்காப்பு பொறுப்பாண்மைகள்** | **34A** |
| 2.1 | பங்கேற்பாளர்கள் | 34A |
| 2.2 | கட்டுக்காப்பு பொறுப்பாண்மைகள் | 34A |
| 3 | **பத்திரங்களற்ற பிணையங்கள்** | **36A** |
| 3.1 | பத்திரங்களற்ற வடிவத்தில் பிணையங்களை வழங்குவதற்கான சட்ட ரீதியான அதிகாரம் | 36A |
| 3.2 | லங்காசெகுயர் முறைமையில் வைத்திருக்கப்படும் பிணையங்கள் | 37A |
| 3.2.1 | திறைசேரி உண்டியல்கள் | 37A |
| 3.2.2 | திறைசேரி முறிகள் | 37A |
| 3.2.3 | மத்திய வங்கிப் பிணையங்கள் | 37A |
| 3.3 | பத்திர வடிவத்தில் ஒன்றுசேர்ந்திருக்கும் பிணையங்கள் | 37A |
| 3.4 | பன்னாட்டுப் பிணையங்களின் அடையாள இலக்கம் | 37A |
| 3.5 | அலகின் அளவும் குறைந்தபட்சம் சந்தைப்படுத்தத்தக்க பொதிகளும் | 38A |
| 4 | **பிணையங்கள் கணக்குகள்** | **38A** |
| 4.1 | கணக்கின் வரைவிலக்கணமும் அமைப்பியல்பும் | 38A |
| 4.2 | லங்காசெகுயர் முறைமையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள கணக்கு வகைகள் | 39A |
| 4.3 | மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்வது தொடர்பான சிறப்பு வழிகாட்டல்கள் | 42A |
| 4.3.1 | இரண்டு பங்கேற்பாளர்களுக்கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் | 42A |
| 4.3.2 | இரண்டு வாடிக்கையாளர்களுக்கிடையிலான இரு வேறுபட்ட பங்குடமையாளர்களுக்கு இடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் | 43A |
| 4.3.3 | பங்கேற்பாளருக்கும் அவரது வாடிக்கையாளருக்குமிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் | 44A |
| 4.3.4 | பங்கேற்பாளருக்கும் அவரது வாடிக்கையாளருக்குமிடையிலான நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் | 45A |
| 4.3.5 | பங்கேற்பாளரொருவரின் இரண்டு வாடிக்கையாளர்களுக்கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் | 46A |
| 5 | **வர்த்தகச் செயன்முறைப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு** | **47A** |
| 5.1 | லங்காசெகுயர் முறைமையின் வகிபாகம் | 47A |
| 5.2 | கொடுக்கல்வாங்கல்களின் வகைகள் | 47A |
| 5.3 | பங்கேற்பாளர் பிணையங்கள் கணக்கு மாற்றல்கள் | 47A |
| 5.4 | செய்திகளை அனுப்பும் நடைமுறை | 47A |
| 5.5 | பங்கேற்பாளர்களின் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடுகள் | 48A |
| 5.6 | சுவிப்ற் செய்தித் தரவுத் தேவைப்பாடுகள் | 48A |

5.7 வர்த்தக நியமங்களின் உடன்படிக்கையினைப் பின்பற்றுவதற்கான பிணையங்களின் அறிவுறுத்தல்கள் ………… 48A

5.8 முன்னோக்கித் திகதியிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் ………… 48A

5.9 வர்த்தகத்தினைப் பொருத்தம் செய்தல் ………… 48A

5.10 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் ………… 49A

5.11 அறிவுறுத்தல்களை இரத்துச் செய்தல் ………… 49A

5.12 வழங்கல் எதிர் கொடுப்பனவு தீர்ப்பனவுச் செயன்முறை ………… 49A

5.13 கொடுக்கல்வாங்கலைப் பதிவுசெய்வது தொடர்பான விசேட அறிவுறுத்தல்கள் ………… 51A

5.14 லங்காசெகுயர் முறைமையில் காத்திருத்தல் ………… 52A

5.15 லங்காசெகுயர் முறைமையிலுள்ள தொகுப்புக் காப்புத் தீர்மானம் ………… 52A

5.16 நாளின் முடிவில் தீர்ப்பனவு செய்யப்படாத லங்காசெகுயர் கொடுக்கல்வாங்கல்களைக் கையாளுதல் ………… 52A

**6 முதலாந்தர ஏலங்கள் ………… 52A**

6.1 முதலாந்தர ஏல முறைமையுடன் லங்காசெகுயர் முறைமையின் எதிர்வினை சார்ந்த நடவடிக்கைகள் ………… 52A

6.2 முதலாந்தர ஏலத் தீர்ப்பனவுகள் ………… 53A

6.3 முதலாந்தர ஏலத் தீர்ப்பனவுகளை மேற்கொள்ளத் தவறுதல் ………… 53A

**7 முதிர்ச்சிகள் ………… 53A**

7.1 முதிர்ச்சிக் கொடுப்பனவுச் செயன்முறை ………… 53A

7.2 வாங்கும் தெரிவுரிமையுடன் கூடிய பிணையங்கள் ………… 54A

7.3 முதிர்ச்சித் திகதிகள் விடுமுறை நாளன்று வருதல் ………… 54A

7.4 வாடிக்கையாளருக்கு முதிர்ச்சிப் பெறுகைகளை வழங்குவதற்கான கடமை ………… 54A

7.5 வாடிக்கையாளருக்கு முதிர்ச்சிப் பெறுகைகளை வழங்க முடியாமல் போதல் ………… 54A

**8 வட்டி ………… 54A**

8.1 வட்டிக் கொடுப்பனவுச் செயன்முறை ………… 54A

8.2 வட்டிக் கொடுப்பனவு விடுமுறை நாளன்று வருதல் ………… 54A

8.3 பதிவுசெய்யப்பட்ட சொத்துரிமைக்கமைய வட்டிக் கொடுப்பனவுகள் ………… 55A

8.4 வாடிக்கையாளர் சொந்தக்காரருக்கு வட்டிக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான கடமை ………… 55A

8.5 வாடிக்கையாளர்களுக்கு வட்டிக் கொடுப்பனவுகளை வழங்க இயலாமல் போதல் ………… 55A

**9 வாடிக்கையாளர் கூற்றுக்கள் ………… 56A**

9.1 வாடிக்கையாளர் விபரங்களைப் பதிவுசெய்தல் ………… 56A

9.2 உடமைகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான வாடிக்கையாளர் கூற்று ………… 57A

9.3 வட்டி மற்றும் முதிர்ச்சிக் கொடுப்பனவுகளின் வாடிக்கையாளர் கூற்று ………… 57A

9.4 பிணையங்களின் கொடுக்கல்வாங்கல் தொடர்பான குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் எச்சரிக்கைகள் ………… 57A

9.5 தவறான முகவரிப் பதிவேடுகள் ………… 57A

**10 பிணை வைத்தல் …………** 58A

10.1 பிணைகளைப் பதிவுசெய்தல் ………… 58A

10.2 பிணைகளின் கூற்றுக்களும் உறுதிப்படுத்தலும் ………… 60A

10.3 பிணைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பங்கேற்பாளர்களின் கடப்பாடு ………… 60A

**11 ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ........................................................................ 60A**

11.1 ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் தொழிற்பாடுகள் .................................................... 60A

11.2 தகைமையுடைய பிணையங்கள் ........................................................................ 60A

11.3 விதிகளை மீறுவதற்கான தண்டங்கள் ........................................................................ 60A

11.4 பங்கேற்பாளர் ஒரு நாளுக்குள்ளேயான மீள்கொள்வனவு உருவாக்கத்தினை முகாமைப்படுத்தல் ... 60A

11.4.1 ஒரு நாளுக்குள்ளேயான மீள்கொள்வனவு உருவாக்கத்திற்கான நேர நீடிப்பு ............... 60A

1. பொதுநோக்கு

1.1 லங்காசெகுயர் முறைமையின் தொழிற்பாடுகளும் அமைப்பியலும்

லங்காசெகுயர் முறைமை லங்காசெட்டில் முறைமையின் மிக இன்றியமையாததொரு பாகமாகும். லங்காசெகுயர் முறைமை நாணய விதிச் சட்டத்திற்கிணங்க, இலங்கை மத்திய வங்கியினால் நிறுவப்பட்டு தொழிற்படுத்தப்பட்டு வருகின்றது. லங்காசெகுயர் முறைமை பின்வரும் பணிகளைக் கையாள்வதற்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையுடன் இணைந்து தொழிற்படுகின்றது.

- இலத்திரனியல் வடிவில் (பத்திரங்களற்ற பிணையங்கள்) அரச பிணையங்களையும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களையும் வழங்குதல்.
- சொத்துரிமையின் மத்திய பதிவேடொன்றினைப் பேணுதல்.
- வட்டி மற்றும் முதிர்ச்சிப் பெறுகைகளை அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்பாளர்கள் தீர்ப்பனவுக் கணக்குகளுக்குக் கொடுப்பனவு செய்தல்.
- வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையின் மீது பிணைய வர்த்தகத்தினைத் தீர்ப்பனவு செய்தல். இங்கு, தொடர்பான பங்கேற்பாளர் கணக்குகளில் பிணையங்களின் மாற்றல்கள் மற்றும் நிதிகளின் தீர்ப்பனவு இரண்டும் கிடைக்குமிடத்து மாத்திரமே நிகழ்கிறது.
- கணக்குகளுக்கிடையே பிணையங்களை மாற்றல் செய்தல், இலவசமாக வழங்குதல்/ இலவசமாகப் பெறுதல் அடிப்படையொன்றில் நிகழ்கிறது. அத்துடன்,
- சொத்துரிமை மற்றும் உடமையில் வைத்திருக்கும் நோக்கம் என்பனவற்றிற்கிணங்க உடமைகளை வெவ்வேறாக்குவதனை அனுமதிப்பதற்காக பிணையங்களின் கணக்கு வசதிகளை வழங்குதல்.

லங்காசெட்டில் முறைமையின் பொதுவான அமைப்பியல் தொகுதி 1இல் விபரிக்கப்பட்டிருக்கிறது. லங்காசெகுயர் முறைமையின் முக்கியமான மூலக்கூறுகள் வருமாறு:

- பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையானது பத்திரங்களற்ற பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்கு வசதியளிக்கின்றது.
- மத்திய வைப்பக முறைமை, பத்திரங்களற்ற பிணையங்களின் சொத்துரிமையினை (உரித்து) பதிவுசெய்கிறது.
- ''சுவிப்ற்'' இன் பிணையங்களின் அறிவுறுத்தல்களைப் பரிமாறுவது தொடர்பில் தொடர்பூட்டல் வலையமைப் பினை வழங்குகின்றது.
- உலாவி இடைமுக வசதி பங்கேற்பாளர்களுக்கு விசாரணை மற்றும் காத்திருப்பு முகாமைத்துவ வசதிகளை வழங்குகின்றது.
- இலங்கை மத்திய வங்கி வலையமைப்பான பரந்த பிரதேச வலையமைப்பு உலாவி இடைமுகங்களை லங்காசெகுயர் முறைமையுடன் இணைக்கிறது. அத்துடன்,
- அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை பிரயோகத்திற்கான இடைமுகம் லங்காசெகுயரின் கொடுக்கல்வாங்கல்களின் கொடுப்பனவுப் பிரிவினைக் கையாள்கிறது.

1.2 இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம்

இலங்கை மத்திய வங்கி, லங்காசெகுயர் முறைமையில் பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது:

- லங்காசெகுயர் முறைமையின் தொழிற்படுத்துநராக இருத்தல்.
- புதிய பிணையங்களைப் பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்குவதனை நிருவகிக்கின்ற இலங்கை அரசாங்கத் தின் முகவராக இருத்தல், முதலாந்தர ஏலங்களை நடத்துதல் மற்றும் அரச பிணையங்கள் தொடர்பான வட்டி மற்றும் முதிர்ச்சிக் கடப்பாடுகளைக் கொடுப்பனவு செய்தல்.
- அதன் சொந்தப் பிணையங்களை (மத்திய வங்கிப் பிணையங்கள்) பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்குதல்.
- அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் வர்த்தகம் மற்றும் தீர்ப்பனவு தொடர்பில், குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துவது தொடர்பில் அதன் சொந்த உரிமைகளில் இணைத்தரப்பினராக இருத்தல்.
- ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியூடாகப் பங்கேற்பாளர்களுக்குத் திரவத்தன்மை வசதிகளை வழங்குதல். அத்துடன்,
- உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணை யங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றிற்கிணங்க வைப்பக வசதிகளை வழங்குமொருவராகவும் அரச பிணை யங்கள் சந்தையினையும் அதன் பங்கேற்பாளர்களையும் ஒழுங்குமுறைப்படுத்துநராகவும் இருத்தல். இவ்வகிபாகமானது லங்காசெகுயர் முறைமையிலுள்ள பங்கேற்பாளர்களின் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்தல் மற்றும் முதனிலை வணிகர்கள் மற்றும் வணிகர் நேரடி பங்கேற்பாளர்களின் மேற்பார்வை என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

## 2. பங்கேற்பாளர்கள் மற்றும் கட்டுக்காப்பு பொறுப்பாண்மைகள்

### 2.1 பங்கேற்பாளர்கள்

லங்காசெகுயர் முறைமையில் பங்கேற்பது, உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கை மத்திய வங்கியினால் ‘‘நேரடிப் பங்கேற்பாளர்கள்’’ ஆக நியமிக்கப்பட்ட நிறுவனங்களுக்குக் கிடைக்கத்தக்கதாக வுள்ளது. ஒவ்வொரு பங்கேற்பாளரும் தொகுதி 1 இன் விதி 2.8இல் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு பங்கேற்பாளரும் சுவிப்ற் வலை யமைப்பிற்குச் சந்தா செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவர்.

லங்காசெகுயர் முறைமையானது ஒற்றை அடுக்கு அங்கத்துவ அடிப்படையில் தொழிற்படும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது:

- முறைமையினை அணுகுவது பங்கேற்பாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது;
- ஒவ்வொரு பங்கேற்பாளரும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் தீர்ப்பனவுக் கணக்கொன்றினையும் அதேபோன்று லங்காசெகுயர் முறைமையில் பிணையங்கள் கணக்கினையும் வைத்திருக்கின்றனர்.

பொதுவாக, அனைத்துப் பங்கேற்பாளர்களும் ஒரே முறைமை வசதிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். இப்பொதுவான தன்மைக்கு விதிவிலக்காகவுள்ளவை வருமாறு:

- உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணை யங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்களுக்கு மாத்திரம் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணை யங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி நடத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு லங்காசெகுயர் முறைமை கிடைக்கத்தக்கதாக இருக்கும்.
- உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணை யங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் வணிகரல்லா விலைக்குறிப்பீட்டாளர் என இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள் மற்றும் நிறுவனங்கள் மாத்திரம் அரச பிணையங்களை வழங்குவதற்காக நடத்தப்படும் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்கலாம். அத்துடன்,
- உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணை யங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் வணிகர் நேரடிப் பங்கேற்பாளராக நியமிக்கப்பட்ட நிறுவனங்கள் மாத்திரம் மற்றையவர்களின் சார்பில் பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடலாம்.

இலங்கை மத்திய வங்கி, தனிப்பட்ட பங்கேற்பாளர்கள் அல்லது பங்கேற்பாளர் வகுப்பொன்றிற்கான முறைமைத் தொழிற்பாடுகளின் கிடைப்பனவினை தற்றுணிவின் அடிப்படையில் மட்டுப்படுத்த முடியும்.

### 2.2 கட்டுக்காப்பு பொறுப்பாண்மைகள்

வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள், வணிகர் நேரடி பங்கேற்பாளரொருவர் என்ற தமது வியாபாரத்தினை நடத்தும் பொழுது ஏற்புடைத்தான சட்டங்களுக்கும் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் லங்காசெகுயர் முறைமையில் அவர்களது வாடிக்கையாளர்களின் கட்டுக்காப் பாளர்களாக நடந்து கொள்ளுதல் வேண்டும். இக்கட்டுக்காப்பு வகிபாகம் பின்வரும் பொறுப்பாண்மைகளை உள்ளடக்குகிறது:

**2.2.1** பொறுப்பாண்மை அடிப்படையில், பிணையங்களின் சொத்துரிமையினை வாடிக்கையாளர் பெறும் பொழுது, லங்காசெகுயர் முறைமையிலுள்ள ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் பெயர், செல்லுபடியாகக்கூடிய அஞ்சல் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கம்பனி பதிவு இலக்கம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதேனும் அடையாள ஆவணங்களின் இலக்கம் என்பன வற்றைச் சரியான முறையிலும் துல்லியமாகவும் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும். செல்லுபடியாகக்கூடிய மின்னஞ்சல் முகவரி மற்றும் செல்லுபடியாகக்கூடிய செல்லிடத் தொலை பேசி இலக்கம் (பன்னாட்டு தொலைபேசி இலக்க படிவத்தில் ஏதாவது 94XXXXXXXXXXX) என்பனவற்றைக் கீழேயுள்ள 2.2.1.1 மற்றும் 2.2.1.2 என்பனவற்றில் குறிப்பிடப்பட்டவாறு பதிவுசெய்து கொள்ளுதல் வேண்டும்.

**2.2.1.1** ஒவ்வொரு வாடிக்கையாளரிடமிருந்தும் முன்னுரிமை வாய்ந்த அதேநேர அறிவித்தல் முறைமை தொடர்பில் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலொன்றினை லங்காசெகுயர் முறைமையிலுள்ள அனைத்து வணிகர் நேரடி பங்கேற்பாளர்களும் பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும். அதேநேர

அறிவித்தல் முறையானது, லங்காசெகுயர் முறைமையில் ''மின்னஞ்சல்'', ''குறுஞ்செய்தி'', ''மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி'' அல்லது ''ஒன்றுமில்லை'' எனப் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் (இங்கு ''ஒன்றுமில்லை'' என்பதன் பொருள் வாடிக்கையாளர்கள் ஒன்றில் மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி ஊடாகவோ அறிவித்தல்களைப் பெற விரும்பவில்லை என்பதேயாகும்). அதேநேர அறிவித்தல் முறை தொடர்பான மேலேயுள்ள வாடிக்கையாளரின் சம்மதம் எதிர்காலத் தொடர்புகளுக்காகப் பேணிப் பாதுகாக்கப்படும்.

2.2.1.2 அறிவித்தல் முறைமையொன்றாக செல்லுபடியாகக்கூடிய மின்னஞ்சல் முகவரியொன்று விருப்பிற்குரிய ''மின்னஞ்சல்'' எனப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். செல்லுபடியாகக்கூடிய செல்லிடத் தொலைபேசி இலக்கம் விருப்பிற்குரிய ''குறுஞ்செய்தி'' எனப் பதிவுசெய்யப்படல் வேண்டுமென்பதுடன் செல்லுபடியாகக்கூடிய மின்னஞ்சல் முகவரி மற்றும் செல்லுபடியாகக்கூடிய செல்லிடத் தொலைபேசி இலக்கம் ஆகிய இரண்டும் விருப்பிற்குரிய ''மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி'' ஆகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

2.2.1.3 அஞ்சல்/ மின்னஞ்சல் முகவரிகள் வாடிக்கையாளர்களுக்குக் கூற்றுக்களை அனுப்புவதற்காக மத்திய வைப்பக முறைமையினால் பயன்படுத்தப்படுவதுடன் மின்னஞ்சல் முகவரி/ செல்லிடத் தொலைபேசி இலக்கம் லங்காசெகுயர் முறைமையில் ஒவ்வொரு பிணையங்கள் கணக்குகளுக்குமாக மேற்கொள்ளப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் ஒவ்வொரு பற்று மற்றும் வரவுகளின் பதிவுகளின் மின்னஞ்சல்/ குறுஞ்செய்தி ஊடான அதேநேர அறிவித்தலுக்காக மத்திய வைப்பக முறைமையினால் பயன்படுத்தப்படும்.

2.2.2 முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கை, வாடிக்கையாளர்/ பங்கேற்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் வேறு ஏதேனும் தொடர்பான உடன்படிக்கைகள் என்பனவற்றின்படி, மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்க லொன்றின் காலப்பகுதியில் எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் பங்கேற்பாளர்:

2.2.2.1 வாடிக்கையாளர் மீள்கொள்வனவு (வர்த்தகப்படுத்தல்) கணக்கு அல்லது பங்கேற்பாளர் மீள்கொள்வனவு (வர்த்தகப்படுத்தல்) கணக்கினைப் பொறுத்தவரையில், நடைமுறையிலுள்ள மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீது விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், வழிகாட்டல்களின் நியதிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணை யங்களின் சந்தைப் பெறுமதியுடன் முதலீடு செய்யப்பட்ட தொகை பொருந்தத்தக்க விதத்தில் பிணையின் மீதிகளை (பதிலீட்டின் மூலம் அல்லது நிறைவு செய்வதன் மூலம்) போதுமானளவில் பேணுதல் வேண்டும்.

2.2.2.2 வாடிக்கையாளர் மீள்கொள்வனவு (வர்த்தகப்படுத்த முடியாதவை) கணக்கு அல்லது பங்கேற்பாளர் மீள்கொள்வனவு (வர்த்தகப்படுத்த முடியாதவை) கணக்கினைப் பொறுத்தவரை நடைமுறை யிலுள்ள மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீது விடுக்கப் பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், வழிகாட்டல்களின் நியதிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களின் சந்தைப் பெறுமதியுடன் முதலீடு செய்யப்பட்ட தொகையினைப் பொருத்தம் செய்வதற்கு,

(அ) அதே பிணையத்தின் போதுமான அளவிற்குப் பூரணப்படுத்தல் அல்லது,

(ஆ) அதே பிணையத்தின் மேலதிக அளவுகள் கிடைக்காதவிடத்து, அதையொத்த பிணையத்தின் போதுமான அளவிற்குப் பூரணப்படுத்தல்.

2.2.3 பிணையங்களின் சொத்துரிமை அல்லது சொத்துரிமையில் மாற்றம் அல்லது சொந்தக்காரரின் விபரங்களை லங்காசெகுயர் முறைமையில் உடனடியாகவும் துல்லியமாகவம் பதிவுசெய்வதற்கும் குறிப்பிட்ட விபரங்களைப் பதிவுசெய்யத் தவறும் சந்தர்ப்பத்திலும் இத்தொகுதியின் 2.2.4 இல் குறித்துரைக்கப் பட்டவாறு வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் மீது கட்டணத்தை விதிக்க/ ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி அதன் ஏக தற்றுணிபின்படி நடவடிக்கை களை மேற்கொள்ளலாம்.

2.2.4 தற்பொழுது நடைபெற்றுவரும் பொதுவான தன்மைகளுக்குப் பங்கமெதுவுமின்றி இலங்கை மத்திய வங்கி பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்:

| இணங்கியொழுகாமையின் எண்ணிக்கை | *இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கை* |
|---|---|
| 1ஆவது சந்தர்ப்பம் | எழுத்து மூலம் கடுமையான எச்சரிக்கை |
| 2ஆவது சந்தர்ப்பம் | கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.25,000 கொண்ட விதிப்பு அல்லது கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் (முகப்புப் பெறுமதி) 1.0 சதவீதம் இதில் எது உயர்வானதோ அத்தொகை. |
| 3ஆவது சந்தர்ப்பம் | கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50,000 கொண்ட விதிப்பு அல்லது கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் (முகப்புப் பெறுமதி) 2.0 சதவீதம் இதில் எது உயர்வானதோ அத்தொகை. |
| 3 இற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் என்ற அந்தஸ்தினை இடைநிறுவத்துவது உட்பட இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறு கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறான பொருத்தமானதொரு காலப்பகுதிக்கு முதனிலை வணிகரின் முதனிலை வணிகர் அந்தஸ்தினை இடைநிறுத்தல். |

**2.2.4.1** அவ்வாறு விதிக்கப்பட்ட தொகையானது, கட்டணத்தினை விதிப்பது என மத்திய வங்கியினால் தீர்மானம் எடுக்கப்பட்ட நாளுக்கு அடுத்துவரும் வியாபார நாளன்று தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து பற்று வைக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியம் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, பங்கேற்பாளர், இலங்கை மத்திய வங்கியின் தீர்மானம் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 வியாபார நாட்களுக்குள் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்யாமைக்கான கட்டணத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

**2.2.4.2** அவ்வாறு வரவு வைக்கப்பட்ட ஒவ்வொரு விதிப்பினதும் பத்து சதவீதம் (10 சதவீதம்) இலங்கை மத்திய வங்கியின் நிருவாகக் கட்டணமாகக் கழிக்கப்படல் வேண்டும். மீதி ஏற்புடைத்தானவாறு வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் சங்கம் (உத்தரவாதப்படுத்தப்பட்டது) அத்துடன்/ அல்லது முதனிலை வணிகர் சங்கம் என்பனவற்றினால் இலங்கை மத்திய வங்கிக்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்றினைத் தொடர்ந்து, நாணயச் சபையின் ஒப்புதலுக்குட்பட்டு, வங்கிகளின் ஆர்வலர்களுக்கும் முதனிலை வணிகர்களினது அலுவலர்களுக்கும் பயிற்சியளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.

**2.2.4.3** எவரேனும் பங்கேற்பாளர் பிணையங்களின் உடமைகளுக்குள்ளே சொத்துரிமையினைப் பதிவு செய்வதற்கு அல்லது சொத்துரிமையில் ஏற்படும் மாற்றங்களை அல்லது பிணையங்களின் சொந்தக்காரர்களின் விபரங்களைப் பதிவுசெய்வதற்கு தவறுமிடத்து அது தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்யாமைக்காக ஏதேனும் கட்டணங்களை விதிப்பதற்கு மத்திய வங்கி ஏதேனும் உரிமைகளை அல்லது கோரல்களை மேற்கொள்வதற்குப் பதிலீடுகளை அல்லது வலுக் குறைப்புக்களை அல்லது மேற்கொள்ளும் விதத்தில் மத்திய வங்கி ஏதேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கான, வழக்குத் தொடுப்பதற்கான அல்லது வழக்காடுவதற்கான உரித்தினை இலங்கை மத்திய வங்கி கொண்டிருப்பதனை அல்லது உரித்துடையதாக இருப்பதனை எதுவும் தடுக்கக்கூடாது.

**2.2.5** இது தொடர்பில் விடுக்கப்படக்கூடிய பணிப்புரைகளுக்கிணங்க வாடிக்கையாளர்களுக்குச் சேர வேண்டிய ஏதேனும் வட்டி அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளைக் கணக்கிடுவதற்கும் அவற்றைக் கொடுப்பனவு செய்வதற்கும்; அத்துடன்

**2.2.6** கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கிணங்க, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் சட்ட ரீதியானவையாகவும் வாடிக்கையாளர் இம்முறைமைகளின் விதிகளை மீறச் செய்யாததாகவும் இருக்குமிடத்து அவர்களது வாடிக்கையாளர்களின் சார்பில் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு

வாடிக்கையாளர்களின் பிணையங்களை மாற்றல் செய்வது தொடர்பில், வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் வாடிக்கையாளரொருவரின் அறிவுறுத்தல்களுக்குக் கடுமையாக இணங்கியொழுகுதல் வேண்டும்.

## 3. பத்திரங்களற்ற பிணையங்கள்

### 3.1 பத்திரங்களற்ற வடிவத்தில் பிணையங்களை வழங்குவதற்கான சட்ட ரீதியான அதிகாரம்

லங்காசெகுயர் முறைமையில் வைத்திருக்கப்படும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களும் பத்திரங்களற்ற திறைசேரி முறிகளும் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாட்டு நியதிகளில் வழங்கப்படுகின்றன. இதற்குப் புறம்பாக, இலங்கை மத்திய வங்கியும் நாணய விதிச் சட்டத்தின் நியதிகளில் அதன் சொந்தப் பத்திரங்களற்ற பிணையங்களை வழங்குகின்றது.

**3.2 லங்காசெகுயர் முறைமையில் வைத்திருக்கப்படும் பிணையங்கள்**

உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட பத்திரங்களற்ற வடிவத்திலுள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மற்றும் நாணய விதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மத்திய வங்கியின் பிணையங்கள் என்பன லங்காசெகுயர் முறைமையில் வைக்கப்பட்டுள்ளன.

**3.2.1 திறைசேரி உண்டியல்கள்**

திறைசேரி உண்டியல்கள் அரச பிணையங்களாகக் காணப்படுவதுடன் பொதுவாக 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் முதிர்ச்சிக் காலத்துடன் கூடிய கழிவிடலில் வழங்கப்படுவதுடன் வர்த்தகப்படுத்தத்தக்க சாதனங்களாகவுமுள்ளன. முதலீட்டு விளைவுகள் அல்லது வருவாய்கள் கொள்வனவு செய்யப்பட்ட விலைக்கும் முதிர்ச்சிப் பெறுகைகளுக்குமிடையிலான அளவின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றன.

**3.2.2 திறைசேரி முறிகள்**

அரச பிணையங்களாக விளங்கும் திறைசேரி முறிகள் ஆரம்பத்தில் 2 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலான ஆண்டு முதிர்ச்சியில் வழங்கப்படுவதுடன் இது வர்த்தகப்படுத்தத்தக்க சாதனமாகவும் காணப்படுகிறது.

திறைசேரி முறிகள் பொதுவாக அரையாண்டு வட்டிக் கொடுப்பனவுகளுக்காக வழங்கப்படுகின்றன. அரையாண்டு கொடுப்பனவுகளைப் பொறுத்தவரை, முதலாவது வட்டிக் கொடுப்பனவுத் திகதி (கூப்பன் திகதி) வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னாலுள்ள திகதியாக இருக்கும் (அதாவது குறிப்பிட்ட தொடர்கள் ஆரம்பத் திகதியாக இருப்பதுடன் இத்திகதியிலிருந்து வட்டி வீதங்கள் ஒன்றுசேரத் தொடங்கும்). இம்மாதிரியானது முதிர்ச்சி வரை தொடரும். எனவே, இறுதி வட்டிக் கொடுப்பனவுத் திகதி முதிர்ச்சித் திகதியாக இருக்கும். முதல் தொகையின் கொடுப்பனவு முதிர்ச்சித் திகதியன்று மேற்கொள்ளப்படும்.

**3.2.3 மத்திய வங்கிப் பிணையங்கள்**

மத்திய வங்கிப் பிணையங்கள் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படுகின்றன. மத்திய வங்கிப் பிணையங்களின் முதிர்ச்சிக் காலம் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தேவைப்பாடுகளில் தங்கியிருக்கும். இப்பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்க சாதனங்களாக விளங்குகின்ற போதும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒழுங்குகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் அடிப்படைப் பிணையங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

**3.3 பத்திர வடிவத்தில் ஒன்றுசேர்ந்திருக்கும் பிணையங்கள்**

லங்காசெகுயர் முறைமை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர், அரச பிணையங்கள் எழுதப்பட்ட சான்றிதழ்கள் வடிவத்திலேயே வழங்கப்பட்டன. பௌதீக வடிவிலான இப்பிணையங்களை, ஏற்புடைத்தான சட்டங்கள் மற்றும் இந்நோக்கத்திற்காக விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க சமர்ப்பித்து மாற்றிக் கொள்வதற்கான சுயவிருப்பு அடிப்படையிலான திட்டமொன்றினூடாகப் பத்திரங்களற்ற வடிவத்திற்கு மாற்றிக் கொள்ளமுடியும்.

மாற்றிக் கொள்ளப்பட்டதும், அப்பிணையங்கள் பத்திர வடிவில் வழங்கப்பட்டிருப்பினும் கூட அவற்றிற்கு முறைமை விதிகள் ஏற்புடைத்தானவையாக இருக்கும்.

வழங்கப்பட்ட பத்திர வடிவிலான பிணையங்கள் பத்திரங்களற்ற வடிவத்திற்கு மாற்றப்படாதிருப்பின் அவை முதிர்ச்சித் திகதியை அடையும் வரை எழுதப்பட்ட சான்றிதழ் வடிவிலேயே தொடர்ந்துமிருக்கும்.

**3.4 பன்னாட்டுப் பிணையங்களின் அடையாள இலக்கம்**

பத்திரங்களற்ற பிணையங்களின் ஒவ்வொரு வழங்கலும் பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கமிடல் முறைமைக்கிணங்க உருவாக்கப்பட்ட இலக்கமொன்றின் மூலம் தனித்துவமான முறையில் அடையாளப் படுத்தப்படும்.

பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம் 12 எழுத்துருக்களைக் கொண்டதாகும். நாட்டிற்கான குறியீடு, பிணையத்தின் வகை, காலம் மற்றும் முதிர்ச்சித் திகதி என்பன இலக்கத்திற்குள் குறிக்கப்படுகின்றன. பரீட்சிப்பிற்கான இலக்கம் ஐஎஸ்ஓ6166 நியமங்களுக்கேற்ப கணிக்கப்படுகின்றன.

| L | K | | | | | Y | Y | M | D | D | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்டிற்கான குறியீடு | | பிணையின் வகை | காலம் | | | முதிர்ச்சித் திகதி | | | | | பரிசோதிப்பு இலக்கம் |

குறியீடுகள் பிணையத்தின் வகையினையும் காலத்தினையும் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. முதிர்ச்சித் திகதி ஆண்டின் இறுதி இரண்டு இலக்கங்களை (YY) கொண்டிருப்பதுடன் மாதம் தொடர்ச்சியான ஆங்கில நெடுங்கணக்கின் மூலம் (அதாவது A=சனவரி, B=பெப்புருவரி என திசெம்பர் = L வரை குறிப்பிடப்படுகின்றதுடன் மாதத்தின் தொடர்பான திகதியும் குறிப்பிடப்படுகிறது.

பிணையத்தின் வகை

| | |
|---|---|
| A | திறைசேரி உண்டியல் |
| B | திறைசேரி முறிகள் - கூப்பனுடன் |
| C | திறைசேரி முறிகள் - கூப்பனில்லாமல் |
| D | மத்திய வங்கிப் பிணையங்கள் |
| E | பணவீக்கத்துடன் இணைக்கப்பட்ட முறிகள் |

காலம் (எடுத்துக்காட்டாக)

| | |
|---|---|
| 091 | 91 நாட்கள் |
| 182 | 182 நாட்கள் |
| 364 | 364 நாட்கள் |
| 002 | 2 ஆண்டுகள் |
| 003 | 3 ஆண்டுகள் |
| 010 | 10 ஆண்டுகள் |
| 030 | 30 ஆண்டுகள் |

### 3.5 அலகின் அளவும் குறைந்தபட்சம் சந்தைப்படுத்தத்தக்க பொதிகளும்

பத்திரங்களற்ற பிணையங்கள், முகப்புப் பெறுமதியில், இலங்கை ரூபாவின் பெருக்கத்தில் வழங்கப்படுகின்றன. லங்காசெகுயர் முறைமையின் வர்த்தகமானது மாற்றல் செய்யப்பட வேண்டிய பிணையங்களைக் குறிப்பிட்ட பன்னாட்டுப் பிணைய அடையாள இலக்கத்தின் மூலம் குறிப்பிடுகிறது.

வர்த்தகத்திற்கான பிணையங்களின் குறைந்தபட்ச சந்தைப்படுத்தத்தக்க பொதி என்பது ஒரு அலகாகும். அதாவது இலங்கை ரூபாவின் முகப்புப் பெறுமதியாகும்.

## 4. பிணையங்கள் கணக்குகள்

### 4.1 கணக்கின் வரைவிலக்கணமும் அமைப்பியல்பும்

லங்காசெகுயர் முறைமையானது, செல்லுபடியாகக்கூடிய கணக்குப் பிரமாணங்களைக் குறித்துரைக்கின்ற பிணையங்களின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளும் பொழுது பிணையங்கள் கணக்குகளை நிறுவுகின்றது. தனிப்பட்ட கணக்குகள் நான்கு பிரமாணங்களைப் பயன்படுத்தி லங்காசெகுயர் முறைமையில் வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

- பங்கேற்பாளர்
- கணக்கின் வகை
- பயன்பெறும் சொந்தக்காரர்
- பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

பிணையங்கள் கணக்குகள் ஒவ்வொரு பிணையங்கள் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், கேட்டுக் கொள்ளப்பட்டவாறு, மேலேயுள்ள பிரமாணங்களின்படி லங்காசெகுயரினால் தன்னியக்க ரீதியாக உருவாக்கப்படுகின்றன. பிரமாணத்தின் இணைந்த தன்மையின் தனித்துவமான சம்பவங்களுக்காக தனியானதொரு பிணையங்கள் கணக்கு உருவாக்கப்படுகிறது.

பங்கேற்பாளரொருவரினால் பேணப்படுகின்ற பிணையங்கள் கணக்கொன்றின் கீழ் பங்கேற்பாளரொருவர் இதன் கட்டுப்பாட்டின் கீழ் பல தனிப்பட்ட பிணையங்கள் கணக்கினை உருவாக்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. பதிவுசெய்யப்பட்ட பயன்பெறும் சொந்தக்காரரைக் கொண்ட பிணையங்கள் கணக்குகள் வாடிக்கையாளரின் சார்பில் கட்டுப்பாட்டில் வைக்கப்படுகின்றன. பயன்பெறும் சொந்தக்காரரின் பதிவினைக் கொண்டிராத பங்கேற்பாளர்களுக்குச் சொந்தமான பிணையங்கள் ‘‘சொந்த’’ கணக்குகளாகக் காணப்படுகின்றன.

### 4.2 லங்காசெகுயர் முறைமையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள கணக்கு வகைகள்

பின்வரும் கணக்கு வகைகள் லங்கா செகுயர் முறைமையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை மத்திய வங்கி அதன் தற்றுணிபிற்கிணங்க, எவரேனும் பங்கேற்பாளர்களுக்கு அல்லது பங்கேற்பாளர் வகையினருக்கு கிடைக்கத்தக்கதாக இருக்கக்கூடிய அதேபோன்று ஒவ்வொரு கணக்கு வகைக்கும் ஏற்புடைத்தான கொடுக்கல்வாங்கல் வகைகளின் கணக்கு வகைகளையும் கட்டுப்படுத்த முடியும்.

| கணக்கு வகை | குறியீடு | நோக்கம் |
|---|---|---|
| பங்கேற்பாளரின்/ இ.ம. வங்கியின் சொந்தக் கணக்கு | OWN | பங்கேற்பாளர்/இ.ம. வங்கிக்குச் சொந்தமான பத்திரங்களற்ற பிணையங்களின் உடமைகள் - (பங்கேற்பாளரின் ‘‘வர்த்தகப்படுத்தப்படுகின்ற’’ மற்றும் ‘‘முதலீட்டு’’ச் சொத்துப்பட்டியல்களை முறையே ‘‘வர்த்தகப்படுத்தப்படுகின்ற’’ மற்றும் ‘‘முதலீடு’’ என சுட்டுத்துண்டிடப்பட்ட சொத்துரிமையுடன் இக்கணக்கின் கீழ் வைத்திருக்கப்படுதல் வேண்டும்) |
| ஒரு நாளுக் குள்ளேயான திரவத்தன்மை வசதிக் கணக்கு | ILF | பங்கேற்பாளரைப் பொறுத்தவரை, அரச பிணையங்கள் உடமை பங்கேற்பாளரின் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிக்கான பிணையுறுதியாக இ.ம. வங்கிக்கு மாற்றல் செய்யப்படுமிடத்தும் அத்துடன், இ.ம. வங்கியைப் பொறுத்தவரை, பங்கேற்பாளர்களினால் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிக்கான பிணையுறுதியாக மாற்றல் செய்யப்படுகிறது. |
| பிணையம் வைக்கப்பட்ட கணக்குகள் | PLG | 2004ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் (கொடுக்கல் வாங்கல்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2004ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல் (கொடுக்கல்வாங்கல்கள்) ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கிணங்க பிணை வைக்கப்பட்டுள்ள பத்திரங்களற்ற பிணையங்கள் உடமைகள். |
| வாடிக்கையாளர் கணக்குகள் (வதிவோர்) | CSL | பங்கேற்பாளரொருவரின் வாடிக்கையாளராகவுள்ள ‘‘இலங்கையில் வதியும் ஆளொருவருக்குச்’’ சொந்தமான பத்திரங்களற்ற பிணையங்களின் உடமைகள் கணக்கு. பிணையங்கள் கொடுக்கல்வாங்கலிலுள்ள வதியும் சொந்தக்காரரென குறித்துரைக்கப்பட்டவரினால் உருவாக்கப்பட்ட கணக்கு. இக்கணக்கு வகை வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு மாத்திரமே கிடைக்கும். |
| வாடிக்கையாளர் கணக்குகள் (வதிவற்றோர்) | CSF | ‘‘இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்குச்’’ சொந்தமான பத்திரங்களற்ற பிணையங்கள் உடமைகள். பிணையங்கள் கொடுக்கல்வாங்கலிலுள்ள வதிவற்ற சொந்தக்காரரென குறித்துரைக்கப்பட்டவரினால் உருவாக்கப்பட்ட கணக்கு. இக்கணக்கு வகை வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு மாத்திரமே கிடைக்கும். |
| வெளிநாட்டில் வதியும் இலங்கையர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர் கணக்கு | CFD | சிறப்புத் திட்டமொன்றின் கீழ் இரட்டைப் பிரசா உரிமையினைக் கொண்டுள்ள வாடிக்கையாளர் உட்பட வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கும் புலம்பெயர் தொழிலாளருக்குமாக வழங்கப்பட்ட பத்திரங்களற்ற பிணைய உடமைகள். |

| கணக்கு வகை | குறியீடு | நோக்கம் |
|---|---|---|
| பங்கேற்பாளர் மீள்கொள்வனவு (வர்த்தகப் படுத்தத்தக்க) கணக்கு | PRT | மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பங்கேற்பாளரொருவரினால் மற்றொரு பங்கேற்பாளருக்கு மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் உடமை. இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ், எதிர்காலத் திகதி யொன்றில் திருப்பப்பட வேண்டியதாகும்.<br><br>இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கவை.<br><br>(இரு பங்கேற்பாளர்களுக்குமிடையிலான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் களின் பதிவுகள் தொடர்பான சிறப்பு வழிகாட்டல்களை இத்தொகுதியின் விதி 4.3இல் பார்க்கவும்) |
| பங்கேற்பாளர் மீள்கொள்வனவு (வர்த்தகப்படுத்த முடியாத) கணக்கு | PRN | மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பங்கேற்பாளரொருவரினால் மற்றொரு பங்கேற்பாளருக்கு மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் உடமை. இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ், எதிர்காலத் திகதியொன்றில் திருப்பப்பட வேண்டியதாகும்.<br><br>இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கவையல்ல.<br><br>(இரு பங்கேற்பாளர்களுக்குமிடையிலான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் பதிவுகள் தொடர்பான சிறப்பு வழிகாட்டல்களை இத்தொகுதியின் விதி 4.3இல் பார்க்கவும்) |
| வாடிக்கையாளர் மீள்கொள்வனவு (வர்த்தகப் படுத்தத்தக்க) கணக்கு | RET | மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ், வாடிக்கையாளரொருவருக்கு பங்கேற்பாளர் மாற்றல் செய்கின்ற அல்லது வாடிக்கையாளரொருவரினால் மற்றொரு வாடிக்கையாளருக்கு மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் உடமையாகும். இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் திருப்பப்பட வேண்டியதாகும்.<br><br>இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கவையல்ல.<br><br>(வாடிக்கையாளர் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் பதிவுகள் தொடர்பான சிறப்பு வழிகாட்டல்களை இத்தொகுதியின் 4.3 விதிகளைப் பார்க்கவும்) |
| வாடிக்கையாளர் மீள்கொள்வனவு (வர்த்தகப்படுத்த முடியாத) கணக்கு | REN | மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ், வாடிக்கையாளரொருவருக்கு பங்கேற்பாளர் மாற்றல் செய்கின்ற அல்லது வாடிக்கையாளரொருவரினால் மற்றொரு வாடிக்கையாளருக்கு மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் உடமையாகும். இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் திருப்பப்பட வேண்டியவையாகும்.<br><br>இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கவையல்ல.<br><br>இக்கணக்கிலுள்ள பிணையங்கள் பதிலீடு செய்ய முடியாதவையாகும்.<br><br>(வாடிக்கையாளர் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் பதிவுகள் தொடர் பான சிறப்பு வழிகாட்டல்களை இத்தொகுதியின் 4.3 விதிகளைப் பார்க்கவும்) |
| வாடிக்கையாளர் நேர்மாற்று மீள்கொள்வனவு (வர்த்தகப் படுத்தத்தக்க) கணக்கு | RRT | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ், பங்கேற்பாளரொருவருக்கு வாடிக்கையாளரொருவரினால் மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் உடமையாகும். இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர் காலத் திகதியொன்றில் திருப்பப்பட வேண்டியவையாகும்.<br><br>இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கவை.<br><br>(வாடிக்கையாளர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் பதிவுகள் தொடர்பான சிறப்பு வழிகாட்டல்களை இத்தொகுதியின் 4.3 விதிகளைப் பார்க்கவும்) |

| கணக்கு வகை | குறியீடு | நோக்கம் |
|---|---|---|
| வாடிக்கையாளர் நேர்மாற்று மீள்கொள்வனவு (வர்த்தகப்படுத்த முடியாத) கணக்கு | RRN | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ், பங்கேற்பாளரொருவருக்கு வாடிக்கையாளரொருவரினால் மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் உடமையாகும். இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் திருப்பப்பட வேண்டியவையாகும்.<br><br>இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கவையல்ல.<br><br>இக்கணக்கிலுள்ள பிணையங்கள் பதிலீடு செய்ய முடியாதவையாகும்.<br><br>(வாடிக்கையாளர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் பதிவுகள் தொடர்பான சிறப்பு வழிகாட்டல்களை இத்தொகுதியின் 4.3 விதிகளைப் பார்க்கவும்) |
| நியதிச்சட்ட முதலீட்டுக் கணக்கு | STI | பங்கேற்பாளர்கள் மீது விதிக்கப்பட்ட நியதிச்சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு பங்கேற்பாளர்கள் சொந்தமாகக் கொண்டுள்ள பத்திரங்களற்ற பிணையங்களின் உடமைகள். |
| முதலாந்தர ஏலங்கள் கொள்வனவுக் கணக்கு | PAP | பிணையங்கள் பகிர்ந்தளிக்கப்படும் வரை, முதலாந்தர ஏலங்கள்/ நேரடி ஏற்பாடுகளில் முதனிலை வணிகர்களினாலும் குறித்துரைக்கப்பட்ட வணிகரல்லா விலைக்குறிப்பீட்டாளர்களினாலும் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் உடமைகள். |
| பத்திர வடிவிலான பொறுப்பாண்மைக் கணக்கு | SCR | 2004 பெப்புருவரிக்கு முன்னர் பத்திரங்கள் வடிவில் வழங்கப்பட்ட வெளிநின்ற திறைசேரி முறிகளின் வெளிநின்ற பெறுமதியினைக் குறிக்கிறது. இது ஒரு பொறுப்பாண்மைக் கணக்கு மாத்திரமே. தீர்ப்பனவுகள் லங்காசெகுயர் முறைமைக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்றன. |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் ஓரிரவு மீள்கொள்வனவுக் கணக்கு | DOP | மீள்கொள்வனவு உடன்படிக்கையின் நியதிகளின் கீழ், இ.ம. வங்கியினால் பங்கேற்பாளர்களுக்கு மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் உடமைகள். இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் திருப்பப்பட வேண்டியவையாகும்.<br><br>இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கவையல்ல. |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் கால மீள்கொள்வனவுக் கணக்கு | DOT | கால மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ், இ.ம. வங்கியினால் பங்கேற்பாளர்களுக்கு மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் உடமைகள். இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் திருப்பப்பட வேண்டியவையாகும்.<br>அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளும் நிபந்தனைகளும் அனுமதிக்குமாயின் இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கவையாகும். |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கு | DRP | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ், பங்கேற்பாளரொருவரினால் இ.ம.வங்கிக்கு மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் உடமைகள். அவை, அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்காலத் திகதி யொன்றில் பங்கேற்பாளர்களுக்குத் திருப்பப்படும். |
| உள்நாட்டுத் தொழிற் பாடுகள் கால நேர் மாற்று மீள்கொள் வனவுக் கணக்கு | DRT | கால நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ், பங்கேற்பாளரொரு வரினால் இ.ம.வங்கிக்கு மாற்றல் செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் உடமைகள். அவை, அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பங்கேற்பாளர்களுக்குத் திருப்பப்படும். |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் கடன்பாடுகள் கணக்கு | DOB | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக பங்கேற்பாளர்களிடமிருந்து மத்திய வங்கியினால் கடன் பெறப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் உடமைகள் |
| ஊ.சே. நிதிய ஓய்வுபெற்ற தொழிலாளர் கணக்கு | EPF | ஊ.சே. நிதிய உறுப்பினர்களுக்காக அவர்களது ஓய்வில் அரச பிணையங்களை வழங்குவதற்காக சிறப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஊழியர் சேம நிதிய ஓய்வுபெற்ற உறுப்பினர்களுக்குச் சொந்தமான பத்திரங்களற்ற பிணையங்கள் உடமைகள். |

**4.3 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்வது தொடர்பான சிறப்பு வழிகாட்டல்கள்**

**4.3.1 இரண்டு பங்கேற்பாளர்களுக்கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்கின் வகை | வர்த்தகம் | வர்த்தகத்தின் விளக்கம் | கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்வது தொடர்பான வழிகாட்டல்கள் | |
|---|---|---|---|---|
| PRT | பங்கேற்பாளர் களுக்கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை) | பிணையங்கள்<br>பங்கேற்பாளர் A ⟶ பங்கேற்பாளர் B<br>⟵<br>நிதியங்கள் | பங்கேற்பாளர் B<br>↓<br>PRT<br>↓<br>பங்கேற்பாளர் A இன் "வங்கி அடை யாளக் குறியீடு<br>↓<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, (முகப்புப் பெறுமதி) | பிணையங்களைப் பெறுகின்ற பங்கேற்பாளர் (பங்கேற்பாளர் B) பிணையங்களின் விற்பனையாளரான (பங்கேற்பாளர் A) இன் வங்கி அடை யாளக் குறியீட்டுடன் "PRT" கணக்கின் கீழ் பயன்பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட அத்தகைய பிணையங் களை (பன்னாட்டு பிணையங்கள் அடை யாள இலக்கம் மற்றும் (முகப்புப் பெறுமதி) பதிவு செய்தல் வேண்டும். |
| PRN | பங்கேற்பாளர்களுக் கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை யல்லாதவை) | பிணையங்கள்<br>பங்கேற்பாளர் A ⟶ பங்கேற்பாளர் B<br>⟵<br>நிதியங்கள் | பங்கேற்பாளர் A<br>↓<br>PRN<br>↓<br>பங்கேற்பாளர் A இன் "வங்கி அடை யாளக் குறியீடு<br>↓<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, (முகப்புப் பெறுமதி) | பிணையங்களைப் பெறுகின்ற பங்கேற்பாளர் (பங்கேற்பாளர் B) பிணையங்களின் விற்பனையாளரான (பங்கேற்பாளர் A) இன் வங்கி அடையாளக் குறியீட்டுடன் "PRN" கணக்கின் கீழ் பயன் பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட அத்தகைய பிணையங் களை (பன்னாட்டு பிணையங்கள் அடை யாள இலக்கம் மற்றும் (முகப்புப் பெறுமதி) பதிவுசெய்தல் வேண்டும். இக்கணக் கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத் தக்கவையல்லாதவை |

* வ.அ. குறியீடு – சுவிப்ற் வலையமைப்பு வங்கி அடையாளக் குறியீடு

### 4.3.2 இரண்டு வாடிக்கையாளர்களுக்கிடையிலான இரு வேறுபட்ட பங்குடமையாளர்களுக்கு இடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்கின் வகை | வர்த்தகம் | வர்த்தகத்தின் விளக்கம் | கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்வது தொடர்பான வழிகாட்டல்கள் | |
|---|---|---|---|---|
| RET | பங்கேற்பாளர் களுக்கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை) | பிணையங்கள்<br>பங்கேற்பாளர் A ⟶ பங்கேற்பாளர் B<br>(வாடிக்கை ⟵ (வாடிக்கை<br>யாளர் X) யாளர் Y)<br>நிதியங்கள் | பங்கேற்பாளர் B<br>↓<br>RET<br>↓<br>பங்கேற்பாளர் Y குறியீடு<br>↓<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, முகப்புப் பெறுமதி) | பங்கேற்பாளர் B பிணையங்களின் விற்பனையாளரான (பங்கேற்பாளர் A) இன் வங்கி அடையாளக் குறியீட்டுடன் "RET" கணக்கின் கீழ் பயன்பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட அத்தகைய பிணையங்களை (பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம் மற்றும் முகப்புப் பெறுமதி) பதிவுசெய்தல் வேண்டும். |
| REN | பங்கேற்பாளர் களுக்கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை யல்லாதவை) | பிணையங்கள்<br>பங்கேற்பாளர் A ⟶ பங்கேற்பாளர் B<br>(வாடிக்கை ⟵ (வாடிக்கை<br>யாளர் X) யாளர் Y)<br>நிதியங்கள் | பங்கேற்பாளர் B<br>↓<br>REN<br>↓<br>பங்கேற்பாளர் Y குறியீடு<br>↓<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, முகப்புப் பெறுமதி) | பிணையங்களைப் பெறுகின்ற பங்கேற்பாளர் (பங்கேற்பாளர் B) பிணையங்களின் விற்பனையாளரான (பங்கேற்பாளர் A) இன் வங்கி அடையாளக் குறியீட்டுடன் "REN" கணக்கின் கீழ் பயன்பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட அத்தகைய பிணையங்களை (பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம் மற்றும் முகப்புப் பெறுமதி) பதிவுசெய்தல் வேண்டும். இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத் தக்கவை யல்லாதவை) |

### 4.3.3 பங்கேற்பாளருக்கும் அவரது வாடிக்கையாளருக்குமிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்கின் வகை | வர்த்தகம் | வர்த்தகத்தின் விளக்கம் | கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்வது தொடர்பான வழிகாட்டல்கள் | |
|---|---|---|---|---|
| RET | பங்கேற்பாளர் களுக்கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை) | பிணையங்கள்<br>பங்கேற்பாளர் ⇄ வாடிக்கையாளர்<br>நிதியங்கள் | பங்கேற்பாளர்<br>↓<br>RET<br>↓<br>வாடிக்கையாளர் குறியீடு<br>↓<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, முகப்புப் பெறுமதி) | பங்கேற்பாளர், பயன் பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட குறிப் பிட்ட வாடிக்கையாள ருக்கு ஒப்படைக் கப்பட்ட வாடிக்கை யாளர் குறியீட்டுடன் "RET" கணக்கின் கீழ் பிணையங்களை (பன்னாட்டுப் பிணை யங்கள் அடையாள இலக்கம் மற்றும் முகப்புப் பெறுமதி) பதிவுசெய்தல் வேண்டும். |
| REN | பங்கேற்பாளர் களுக்கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை யல்லாதவை) | பிணையங்கள்<br>பங்கேற்பாளர் ⇄ வாடிக்கையாளர்<br>நிதியங்கள் | பங்கேற்பாளர்<br>↓<br>REN<br>↓<br>வாடிக்கையாளர் குறியீடு<br>↓<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, முகப்புப் பெறுமதி) | பங்கேற்பாளர், பயன் பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட வாடிக்கை யாருக்கு ஒப்படைக் கப்பட்ட வாடிக்கை யாளர் குறியீட்டுடன் "REN" கணக்கின் கீழ் பிணையங்களை (பன்னாட்டுப் பிணை யங்கள் அடை யாள இலக்கம் மற்றும் முகப்புப் பெறுமதி) பதிவுசெய்தல் வேண்டும். இக்கணக் கிலுள்ள பிணை யங்கள் வர்த்தகப் படுத்தத் தக்கவை யல்லாதவை |

**4.3.4 பங்கேற்பாளருக்கும் அவரது வாடிக்கையாளருக்குமிடையிலான நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்கின் வகை | வர்த்தகம் | வர்த்தகத்தின் விளக்கம் | கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்வது தொடர்பான வழிகாட்டல்கள் | |
|---|---|---|---|---|
| RRT | பங்கேற்பாளர் - வாடிக்கையாளர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை) | பிணையங்கள்<br>பங்கேற்பாளர் ⟶ வாடிக்கையாளர்<br>⟵<br>நிதியங்கள் | பங்கேற்பாளர்<br>↓<br>RRT<br>↓<br>வாடிக்கையாளர் குறியீடு<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, முகப்புப் பெறுமதி) | பங்கேற்பாளர், பயன்பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட வாடிக்கை யாருக்கு ஒப்படைக் கப்பட்ட வாடிக்கை யாளர் குறியீட்டுடன் "RRT" கணக்கின் கீழ் பிணையங்களை (பன்னாட்டுப் பிணை யங்கள் அடையாள இலக்கம் மற்றும் முகப்புப் பெறுமதி) பதிவுசெய்தல் வேண்டும். |
| RRN | பங்கேற்பாளர் - வாடிக்கையாளர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை யல்லாதவை) | பிணையங்கள்<br>பங்கேற்பாளர் ⟶ வாடிக்கையாளர்<br>⟵<br>நிதியங்கள் | பங்கேற்பாளர்<br>↓<br>RRN<br>↓<br>வாடிக்கையாளர் குறியீடு<br>↓<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, முகப்புப் பெறுமதி) | பங்கேற்பாளர், பயன் பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட குறிப் பிட்ட வாடிக்கை யாளருக்கு ஒப்படைக் கப்பட்ட வாடிக்கை யாளர் குறியீட்டுடன் "RRN" கணக்கின் கீழ் பிணையங்களை (பன்னாட்டுப் பிணை யங்கள் அடை யாள இலக்கம் மற்றும் முகப்புப் பெறுமதி) பதிவுசெய்தல் வேண்டும். இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத் தக்கவையல்லாதவை |

### 4.3.5 பங்கேற்பாளரொருவரின் இரண்டு வாடிக்கையாளர்களுக்கிடையிலான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்கின் வகை | வர்த்தகம் | வர்த்தகத்தின் விளக்கம் | கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்வது தொடர்பான வழிகாட்டல்கள் | |
|---|---|---|---|---|
| RET | பங்கேற்பாளர் - வாடிக்கையாளர் களுக்குள்ளேயான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை) | பிணையங்கள்<br>வாடிக்கையாளர் X → வாடிக்கையாளர் Y<br>←<br>நிதியங்கள் | பங்கேற்பாளர்<br>↓<br>RET<br>↓<br>பங்கேற்பாளர் Y குறியீடு<br>↓<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, முகப்புப் பெறுமதி) | பங்கேற்பாளர், பயன்பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாருக்கு ஒப்படைக்கப்பட்ட வாடிக்கையாளர் Y இற்கு ஒப்படைக் கப்பட்ட வாடிக்கை யாளர் குறியீட்டுடன் "RET" கணக்கின் கீழ் பிணையங்களை (பன்னாட்டுப் பிணை யங்கள் அடையாள இலக்கம் மற்றும் முகப்புப் பெறுமதி) பதிவுசெய்தல் வேண்டும். |
| REN | பங்கேற்பாளர் - வாடிக்கையாளர் களுக்குள்ளேயான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் (வர்த்தகப்படுத்தத் தக்கவை யல்லாதவை) | பிணையங்கள்<br>வாடிக்கையாளர் X → வாடிக்கையாளர் Y<br>←<br>நிதியங்கள் | பங்கேற்பாளர்<br>↓<br>REN<br>↓<br>பங்கேற்பாளர் Y குறியீடு<br>↓<br>உடமை (பன்னாட்டுப் பிணையங்கள் அடையாளக் குறியீடு, முகப்புப் பெறுமதி) | பங்கேற்பாளர், பயன் பெறும் சொந்தக்காரர் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாருக்கு ஒப்படைக்கப்பட்ட வாடிக்கையாளர் Y இற்கு ஒப்படைக் கப்பட்ட வாடிக்கை யாளர் குறியீட்டுடன் "REN" கணக்கின் கீழ் பிணையங்களை (பன்னாட்டுப் பிணை யங்கள் அடையாள இலக்கம் மற்றும் முகப்புப் பெறுமதி) பதிவுசெய்தல் வேண்டும். இக்கணக் கிலுள்ள பிணை யங்கள் வர்த்தகப் படுத்தத் தக்கவை யல்லாதவை |

## 5. வர்த்தகச் செயன்முறைப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு

### 5.1 லங்காசெகுயர் முறைமையின் வகிபாகம்

லங்காசெகுயர் முறைமை அரச பிணையங்களுக்கான வைப்பகமாக விளங்குவதுடன் அத்தகைய பிணையங்களுக்கான தீர்ப்பனவு வசதிகளையும் வழங்குகின்றது. ஆகவே, வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள், முறைமைக்கு வெளியே காணப்படுவதுடன் இது ஏதேனும் விலை கண்டறிதலுக்கோ அல்லது வர்த்தகப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளுக்கோ உதவுவதில்லை. இதன் வகிபாகம் யாதெனில் பூர்த்தியடைந்த வணிகம் தொடர்பான அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்வதும் தொடர்பான நிதிப்பிரிவு தீர்ப்பனவு செய்யப்பட்டதும் அதில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்களின் மாற்றல்களை மேற்கொள்வதுமேயாகும்.

### 5.2 கொடுக்கல்வாங்கல்களின் வகைகள்

லங்காசெகுயர் முறைமை கொடுக்கல்வாங்கல்களின் மூன்று அடிப்படை வகைகளை வழங்குகின்றது. அதாவது

- வழங்குதல்/ பெறுதல் எதிர் கொடுப்பனவு
- கட்டுப்பாடற்ற வழங்கல்/ பெறுதல்
- மீள்நிலைப்படுத்தல்

வழங்குதல்/ பெறுதல் எதிர் கொடுப்பனவு கொடுக்கல்வாங்கலானது பிணையங்கள் மற்றும் நிதி இரண்டையும் இறுதியாகப் பெறுவதனைத் தேவைப்படுத்துகிறது. அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் இரண்டு பங்கேற்பாளர் களிடையே குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் நகர்வதுடன் தொடர்புபடுகிறது. இவ்வகையின் கீழ் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் இரண்டு பக்கங்களை அதாவது, வர்த்தகத்திற்கான இரண்டு தரப்பினரும் தீர்ப்பனவிற்கு முன்னதாக, பொருந்தக்கூடிய தீர்ப்பனவு அறிவுறுத்தல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கட்டுப்பாடற்ற வழங்கல்/ பெறுதல் கொடுக்கல்வாங்கல்கள் இறுதி நிலையை அடைவதற்கு பிணையங்கள் நகர்வதனை மாத்திரம் தேவைப்படுத்துகின்றது. இம்முறைமையில் நிதியத்தின் இணைந்த நகர்வுகள் எதுவுமில்லை. அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் இரண்டு பங்கேற்பாளர்களிடையே குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் நகர்வதுடன் தொடர்புபடுகிறது. இவ்வகையின் கீழ் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் இரண்டு பக்கங்களைக் கொண்டுள்ளன. அதாவது வர்த்தகத்திற்கான இரண்டு தரப்பினரும் தீர்ப்பனவிற்கு முன்னதாக, பொருந்தக்கூடிய தீர்ப்பனவு அறிவுறுத்தல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மீள்நிலைப்படுத்தல் என்பது ஒரே பங்கேற்பாளரின் கணக்கிற்கிடையே இலகுவாக நகர்கின்ற கட்டுப்பாடற்ற வழங்கல் கொடுக்கல்வாங்கலொன்றாகும். இங்கு நிதியங்களின் இணைந்த நகர்வு காணப்படாது. இவ்வகையின் கீழான ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் ஒரு பக்கத்தினைக் கொண்டதாக இருப்பதுடன் பொருத்தம் செய்வதனையும் தேவைப்படுத்துவதில்லை.

### 5.3 பங்கேற்பாளர் பிணையங்கள் கணக்கு மாற்றல்கள்

பொறுப்பாணை உடன்படிக்கையில் தரப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளர்களின் பிணையங்கள் கணக்குகளுக்கு பற்று வைக்கலாம் அத்துடன்/ அல்லது வரவு வைக்கலாம். இவை தொழிற்பாட்டுப் பிரச்சனையொன்றினை அல்லது தவறினை சரிசெய்வதுடன் இணைந்த பற்றுக்களை அத்துடன்/ அல்லது வரவினை உள்ளடக்கியிருக்கலாம்.

### 5.4 செய்திகளை அனுப்பும் நடைமுறை

லங்காசெகுயர் முறைமையானது பிணையங்களின் அறிவுறுத்தல்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு நியமப்படுத்தப்பட்ட சுவிப்ற் வலையமைப்பினைப் பயன்படுத்துகின்றது. இச்செய்திகள் நேரடியாக லங்காசெகுயர் முறைமைக்கு அனுப்பப்படுகின்றன. பங்கேற்பாளர்களின் வசதிக்காகப் பின்வரும் வரையறைகள் விதிக்கப்படுகின்றன. வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது வாடிக்கையாளர் உடமை மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல் செய்திகள் ரூ.5 மில்லியன் அல்லது அதற்கும் குறைவான அல்லது காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் பெறுமதிகள், முறைமை விதிகள் மற்றும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பிரதிபலிக்கப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியின் வலையமைப்பினைப் பயன்படுத்துவது தொடர்பிலான நடைமுறைகளுக்குட்பட்டு, இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கொடுகடன் நிரம்பல் அளவை வர்த்தகங்களின் வெப்தள அடிப்படையிலான பிரயோகங்களைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் வலையமைப்பினூடாக முறைமைக்குள் மாற்றப்படுதல் வேண்டும். ஏதேனும் ரூ.5 மில்லியனுக்கும் கூடுதலான வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களை அல்லது காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் பெறுமதிகளைக் கொண்ட வாடிக்கையாளர் உடன் மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல்வாங்கல்களை சுவிப்ற் செய்தியனுப்பல் முறைமையினைப் பயன்படுத்தி மாற்றல் செய்தல் வேண்டும்.

**5.5 பங்கேற்பாளர்களின் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடுகள்**

லங்காசெகுயர் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான சுவிப்ற் செய்திகள், லங்காசெகுயர் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கென விசேடமாக நிறுவப்பட்ட தனியான வங்கி அடையாளக் குறியீட்டிற்கு அனுப்பப்படுதல் வேண்டும். லங்காசெகுயரின் வங்கி அடையாளக் குறியீடுகள் லங்காசெகுயர் முறைமைக்கு அனுப்பப்படும் அனைத்து சுவிப்ற் செய்திகளிலும் ''தீர்ப்பனவு இடத்தில்'' பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

லங்காசெகுயர் முறைமையின் வங்கி அடையாளக் குறியீடு **CBCELKLS** ஆகும்.

பிணையங்கள் அறிவுறுத்தல்களை லங்காசெகுயர் முறைமைக்கு நேரடியாக அனுப்புகின்றவிடத்து கொடுப்பனவு அறிவுறுத்தல்களைப் பெறுகின்ற பங்கேற்பாளரின் வங்கி அடையாளக் குறியீட்டிற்கு அனுப்பப்படுதல் வேண்டும். இது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள ஒவ்வொரு பங்கேற்பாளரையும் அடையாளம் காணப் பயன்படுத்தப்படும் அதே வங்கி அடையாளக் குறியீடாகும் (பங்கேற்பாளர்களின் வங்கி அடையாளக் குறியீடுகளின் பட்டியலொன்று **இணைப்பு ஈ** இல் தரப்பட்டுள்ளது).

**5.6 சுவிப்ற் செய்தித் தரவுத் தேவைப்பாடுகள்**

லங்காசெகுயர் அறிவுறுத்தல்கள், சுவிப்ற் செய்திப் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்துக் கிடைக்கத் தக்க துறைகளையும் பயன்படுத்துவதில்லை. லங்காசெகுயர் செயன்முறைப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்ட துறைகள் மாத்திரம் வாசிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

**5.7 வர்த்தக நியமங்களின் உடன்படிக்கையினைப் பின்பற்றுவதற்கான பிணையங்களின் அறிவுறுத்தல்கள்**

வர்த்தகங்களைப் பொருத்தம் செய்வதற்கும் ஏதேனும் தவறுகளைச் சரிசெய்வதற்கும் போதுமான நேரம் இருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, இணைத்தரப்பினர்களுடனான வர்த்தக நியமங்களின் உடன்படிக்கையினைத் தொடர்ந்து பங்கேற்பாளர்கள் சாத்தியமானளவிற்கு விரைவாக பிணையங்களின் அறிவுறுத்தல்களை லங்காசெகுயர் முறைமைக்கு உள்ளீடு செய்தல் வேண்டும்.

**5.8 முன்னோக்கித் திகதியிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்**

லங்காசெகுயர் முறைமை, எதிர்கால செல்லுபடியாகும் திகதியில் தீர்ப்பனவினைச் செய்வதற்கான பிணையங்கள் அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்வதுடன் செல்லுபடியாகும் திகதி வரை அத்தகைய அறிவுறுத்தல்களைச் சேமித்து வைத்திருக்கிறது. முறைமையானது நடைமுறைத் திகதியின் முன்கூட்டியே 364 கலண்டர் நாட்கள் வரையில் பிணைய அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்வதுடன் 364 கலண்டர் நாட்களுக்குக் கூடுதலாக முன்கூட்டிய எதிர்கால செல்லுபடியாகும் திகதியைக் கொண்ட பிணைய அறிவுறுத்தல்கள் நிராகரிக்கப்படுகின்றன.

காலாவதியான செல்லுபடியாகும் திகதியைக் கொண்ட பிணைய அறிவுறுத்தல்கள் ஏற்கனவே, லங்காசெகுயரினால் பெறப்பட்டிருக்குமிடத்து இது முறைமையினால் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு வியாபார நாளும் ஆரம்பிக்கப்படுகையில், லங்காசெகுயர் முறைமை ஒவ்வொரு அறிவுறுத்தலும் செல்லுபடியாகக்கூடிய திகதியைக் கொண்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக முறைமையிலுள்ள சேமிப்புச் செய்யப்பட்ட பிணையங்கள் அறிவுறுத்தல்களைப் பரிசோதிக்கிறது. சேமிப்புச் செய்யப்பட்ட பிணையங்களின் அறிவுறுத்தல் ஏற்கனவே காலாவதியான செல்லுபடியாகும் திகதியைக் கொண்டிருக்குமிடத்து அவை நிராகரிக்கப்படும்.

வியாபார நாளொன்று ''இரத்துச் செய்யப்படும்'' சந்தர்ப்பத்தில், உதாரணமாக அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக வியாபாரத்திற்காக இலங்கை மத்திய வங்கி திறக்கப்படாத நாளன்று, செல்லுபடியாகும் திகதிக்கான சேமிக்கப்பட்ட அறிவுறுத்தல் சேமிப்பினை இரத்துச் செய்வது அல்லது இலங்கை மத்திய வங்கியிலிருந்து ஏதேனும் சிறப்பு அறிவுறுத்தல் கிடைக்காதவிடத்து செல்லுபடியாகக்கூடிய புதிய செல்லுபடியாகும் திகதியுடன் அவற்றை மீள அனுப்புவது பங்கேற்பாளர்களின் பொறுப்பாகும்.

**5.9 வர்த்தகத்தினைப் பொருத்தம் செய்தல்**

லங்காசெகுயர் முறைமை அனைத்து வழங்கல்/ பெறுதல் எதிர் கொடுப்பனவிற்கான உள்ளீடு மற்றும் வழங்கல்/ கட்டுப்பாடற்ற பெறுகை அறிவுறுத்தல்களைப் பொருத்தம் செய்வதனை மேற்கொண்டு வருகின்றது. விதிவிலக்கல் என்பது மீள்நிலைப்படுத்தல் அறிவுறுத்தலாகும். அதற்கு தனியொரு கட்டுப்பாடான வழங்கல் அறிவுறுத்தல் மாத்திரம் தேவைப்படுகிறது.

ஏதாவதொரு தரப்பினர் (வாங்குநர் அல்லது விற்பவர்) தமது அறிவுறுத்தலை முதலில் உள்ளீடு செய்யலாம்.

அறிவுறுத்தல்கள் பின்வருவனவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் பொருத்தம் செய்யப்படுகின்றன.

- வாங்குநர் மற்றும் விற்பவரின் விபரங்கள்
- தொடர்பு இலக்கம்
- பிணைய அடையாளங்கள்
- தீர்ப்பனவுத் திகதி (பெறுமதித் திகதி)
- அளவு
- மொத்த விலை

பொருத்தம் செய்யப்படாத ஒவ்வொரு அறிவுறுத்தலும் பொருத்தம் செய்கின்ற அறிவுறுத்தல் பெறப்படும் வரை அல்லது அறிவுறுத்தலிலுள்ள செல்லுபடியாகும் திகதி காலாவதியாகும் வரை லங்காசெகுயர் முறைமையில் வைத்திருக்கப்படுகின்றது.

**5.10 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்**

மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வர்த்தகங்கள் இத்தொகுதியின் விதி 5.2 இல் விபரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின் அடிப்படைத் தொகுதியினைப் பயன்படுத்தி லங்காசெகுயர் முறைமையில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. கொடுக்கல்வாங்கலின் ஒவ்வொரு பிரிவும் கொடுப்பனவிற்கெதிராக (வழங்கல் எதிர்கொடுப்பனவு/ பெறுதல் எதிர்கொடுப்பனவு) இரண்டு தனித்தனியான வழங்கல்/ பெறுதலாகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். கொடுக்கல்வாங்கல்களைப் பொருத்தம் செய்வதில் (மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவுத் திகதி மற்றும் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவுத் தொகையின் மொத்தக் கொடுப்பனவுப் பெறுமதி) மேலதிகத் தகவல்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாலொழிய, லங்காசெகுயர் முறைமை இத்தகவல்களை வேறுபட்ட முறையில் செயன்முறைப்படுத்தமாட்டாது. முறைமையானது விசாரணை மற்றும் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவுகளைத் தனியான தொரு கொடுக்கல்வாங்கல் வகையாக அங்கீகரிக்கிறது. மீள்கொள்வனவிற்குட்பட்டு பிணையங்களை உடமையில் வைத்திருப்பதற்குத் தனியான கணக்கு வகையொன்று பயன்படுத்தப்படுகிறது.

பங்கேற்பாளர்கள், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான சட்டங்களின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

**5.11 அறிவுத்தல்களை இரத்துச் செய்தல்**

பங்கேற்பாளர்கள் சுவிப்ற் இனை அல்லது உலாவி இடைமுகத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் நிலை களிலுள்ள பிணைய அறிவுறுத்தல்களை இரத்துச் செய்யமுடியும்.

- பொருத்தம் செய்யப்படாத வர்த்தக அறிவுறுத்தல்கள் மற்றும் மீள்நிலைப்படுத்தல் இதனை மூலகர்த்தா வினாலேயே இரத்துச் செய்யமுடியும்.

- பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக அறிவுறுத்தல்கள்: இதனை இரண்டு தரப்பினரினதும் சம்மதத்துடன் மட்டுமே இரத்துச் செய்யமுடியும் என்பதுடன் ஒவ்வொரு தரப்பினரும் இரத்துச் செய்வதற்கான இரத்துச் செய்தல் அறிவுறுத்தல்களைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.


எனினும், தீர்ப்பனவு செய்யப்பட்டு வருகின்ற வர்த்தகத்தினை அல்லது தீர்ப்பனவு செய்யப்பட்ட வர்த்தகத் தினை இரத்துச் செய்ய முடியாது.

**5.12 வழங்கல் எதிர் கொடுப்பனவு தீர்ப்பனவுச் செயன்முறை**

லங்காசெகுயர் கொடுக்கல்வாங்கலின் தீர்ப்பனவு அடுத்த பக்கத்தில் காட்டப்பட்டுள்ள வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள செயன்முறையினைப் பின்பற்றுகின்றது. வழங்கல்/ பெறுகை எதிர் கொடுப்பனவு அறிவுறுத்தல்கள், முறையே லங்காசெகுயர் முறைமையிலும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை யிலுமுள்ள தொடர்பான கணக்குகளில் பிணையங்களும் நிதிகளும் கிடைக்கத்தக்கதாக இருந்தால் மட்டுமே தீர்ப்பனவு செய்யப்படும்.

வழங்கல்/ கட்டுப்பாடற்ற பெறுகை கொடுக்கல்வாங்கல்களுக்கான செயன்முறை வழங்கல் எதிர்கட்டுப்பாடற்ற தன்மை/ பெறுதல் எதிர்கட்டுப்பாடற்ற தன்மை செயன்முறையில் நிதியமாற்றல் தொடர்புபடாதிருக்குமிடத்து வழங்கல் எதிர்கொடுப்பனவு/ பெறுகை எதிர்கொடுப்பனவுச் செயன்முறையினை ஒத்ததாக இருக்கும்.

**தீர்ப்பனவுச் செயன்முறையின் படிமுறைகள்**



**5.13 கொடுக்கல்வாங்கலைப் பதிவுசெய்வது தொடர்பான விசேட அறிவுறுத்தல்கள்**

அனைத்துப் பங்கேற்பாளர்களும் பங்கேற்பாளர்களுக்கிடையேயான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களையும் வாடிக்கையாளர் (கம்பனி மற்றும் தனிப்பட்டவர்) மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவுகளையும் மற்றும் நேரடிக் கொடுக்கல்வாங்கல்களையும் பதிவுசெய்யும் பொழுது கீழேயுள்ள விசேட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

| **மீள்கொள்வனவு விபரணங்கள்** | **கொண்டு செல்பவர் – பெறுமதி (பங்கேற்பாளர் களினால் பதியப்பட வேண்டியது) சுவிப்ற் (22F::SETR//xxxx)** | **கூற்றுத் திகதி (பங்கேற்பாளர் களினால் பதியப்பட வேண்டியது)** | **மீள்கொள்வனவு வகை 1ஆவது பிரிவு (லங்காசெகுயர் முறைமை யினால் தன்னியக்கமாக உருவாக்கப்பட்டது)** | **செய்தி வகை 1ஆவது பிரிவு (லங்காசெகுயர் முறைமையினால் தன்னியக்கமாக உருவாக்கப்பட்டது)** | **மீள்கொள்வனவு வகை 2ஆவது பிரிவு (லங்காசெகுயர் முறைமையி-னால் தன்னியக்கமாக உருவாக்கப்பட்டது)** | **செய்தி வகை (IMT) 2ஆவது பிரிவு (லங்காசெகுயர் முறைமை யினால் தன்னியக்கமாக உருவாக்கப்பட்டது)** |
|---|---|---|---|---|---|---|
| பங்கேற்பாளர் களிடையே **(1ஆவது பிரிவு)** – தன்னியக்கத் திரும்பலுடன் | MT543 - **REPU** MT541 - **RVPO** | எதிர்காலத் திகதி | REPO | REP, RRE | REPC | RRE, REP |
| பங்கேற்பாளர் களிடையே **(1ஆவது பிரிவு)** – கையினால் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் | MT543 - **REPU** MT541 - **RVPO** | 1ஆவது பிரிவு தீர்ப்பனவுத் திகதியைப் போன்று | REPO | REP, RRE | வி.கி. | வி.கி. |
| பங்கேற்பாளர் களிடையே **(2ஆவது பிரிவு)** – கையினால் செய்யப்படும் திரும்பல் | MT543 - **RVPO** MT541 - **REPU** | 1ஆவது பிரிவு தீர்ப்பனவுத் திகதியைப் போன்று | REPC | REP, RRE | வி.கி. | வி.கி. |
| வாடிக்கையாளர் **(1ஆவது பிரிவு)** - தன்னியக்கத் திரும்பலுடன் | MT542 - **REPU** | எதிர்காலத் திகதி | REPO | CRE | REPC | CRR |
| வாடிக்கையாளர் **(1ஆவது பிரிவு)** - கையினால் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் | MT542 - **REPU** | 1ஆவது பிரிவு தீர்ப்பனவுத் திகதியைப் போன்று | REPO | CRE | வி.கி. | வி.கி. |
| வாடிக்கையாளர் **(2ஆவது பிரிவு)** - கையினால் செய்யப்படும் திரும்பல் | MT542 - **RVPO** | 1ஆவது பிரிவு தீர்ப்பனவுத் திகதியைப் போன்று | REPC | CRR | வி.கி. | வி.கி. |
| வாடிக்கையாளர் **(1ஆவது பிரிவு)** - தன்னியக்கத் திரும்பலுடன் | CSSTrades (CBSL Net- MTF)- **REPO** | எதிர்காலத் திகதி | REPO | CRE | REPC | CRR |
| *வாடிக்கையாளர் **(1ஆவது பிரிவு)** - கையினால் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் | CSSTrades (CBSL Net- MTF)- **REPO** | 1ஆவது பிரிவு தீர்ப்பனவுத் திகதியைப் போன்று | REPO | CRE | வி.கி. | வி.கி. |
| வாடிக்கையாளர் **(2ஆவது பிரிவு)** - கையினால் செய்யப்படும் திரும்பல் | CSSTrades (CBSL Net- MTF)- **REPC** | 1ஆவது பிரிவு தீர்ப்பனவுத் திகதியைப் போன்று | REPC | CRR | வி.கி. | வி.கி. |

**குறிப்பு: நியம அளவான 22F::SETR// OWNI உடன் சுவிப்ற் MT542 செய்தி வகையினைப் பயன்படுத்திய மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல்வாங்கல்களை வாடிக்கையாளர் உடனடிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு மாத்திரம் பயன்படுத்தப்படல் வேண்டும் (விற்பனை அல்லது கொள்வனவு)**

### 5.14 லங்காசெகுயர் முறைமையில் காத்திருத்தல்

தீர்ப்பனவு செய்யப்படும் நேரத்தில், பிணையங்களின் கொண்டு செல்லும் அளவு லங்காசெகுயர் முறைமையிலுள்ள பிணையங்கள் கணக்கின் மீதியை விஞ்சுமிடத்து பங்கேற்பாளர்களின் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களைப் பதிவுசெய்யக்கூடாது. அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் குறித்துரைக்கப்பட்ட கணக்குகளில் கிடைக்காதிருக்குமிடத்து பிணையங்களின் அறிவுறுத்தல்கள் லங்காசெகுயர் முறைமையில் காத்திருக்கச் செய்யப்படும்.

காத்திருத்தலானது தீர்ப்பனவுத் திகதிக்குள் முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குமுறைப்படுத்தப்படும். முன்னுரிமை அடிப்படையில், காத்திருத்தல், பொருத்தப்பாட்டின் திகதி மற்றும் நேரம் அல்லது தனியொரு பக்க அறிவுறுத்தலுக்கான உள்ளீட்டின் திகதி மற்றும் நேரம் என்பனவற்றின் அடிப்படையில் ஒழுங்குமுறைப் படுத்தப்படும்.

இவ்வொழுங்குபடுத்தலானது தொகுப்புக் காப்புத் தீர்மானம், இலங்கை மத்திய வங்கியின் நேரடி தனிப்பட்டவர் களின் கொடுக்கல்வாங்கல்களை மீள்முன்னுரிமைப்படுத்தல் மற்றும் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு வழங்கப்பட்ட முறிவடைந்த முன்னுரிமைகள் போன்ற காத்திருப்பு தீர்ப்பனவு வசதிகளின் தொழிற்பாடுகள் மூலமாக மாற்றியமைக்கப்படுகின்றமை பற்றி பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அனைத்துப் பிணைய அறிவுறுத்தல்களும் பங்கேற்பாளர்களினால் வழங்கப்பட்ட முன்னுரிமைக்கிணங்க காத்திருப்பிற்கு உட்பட்டன வாக இருப்பதுடன் பிணைய அறிவுறுத்தல்களின் முன்னுரிமையினைப் பங்கேற்பாளர்கள் ஒன்றில் பெறுமதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சீராக்கம் செய்து கொள்ளலாம். சீராக்கங்கள், உலாவி இடைமுக வசதிகளைப் பயன்படுத்திச் செய்யப்படுகின்றன.

முன்னுரிமைகள் 0 இற்கும் 99 இற்குமிடையிலான வீச்சிலுள்ள இலக்கங்களின் மூலம் வழங்கப்படுகின்றது. இங்கு பூஜ்யம் உயர்ந்த முன்னுரிமையினைக் கொண்டதாகவும் 99 குறைந்த முன்னுரிமையினைக் கொண்டதாகவும் இருக்கும். 12 இலிருந்து 98 வரையிலான வீச்சிலுள்ள முன்னுரிமைகள் பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கும். 0-11 மற்றும் 99 முன்னுரிமைகள் முறைமையின் தொழிற்பாட்டாளர் என்ற முறையில் மத்திய வங்கிக்கு ஒதுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உரிய நேரத்தில் வழங்கப்படுகின்றமையினையும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி நிதியின் திரும்பலையும் உறுதிப்படுத்துவதற்காக ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கொடுக்கல்வாங்கல்களுக்காக முன்னுரிமை 5 வழங்கப்படுகிறது.

முன்னுரிமை இலக்கம் இல்லாமல் பங்கேற்பாளரொருவர் கொடுப்பனவு அறிவுறுத்தலொன்றினை அல்லது பிணை யங்கள் அறிவுறுத்தலைச் சமர்ப்பிப்பாராயின் அதற்கு முறைமைத் தவறிற்கான முன்னுரிமை இலக்கமான 98 வழங்கப்படும். அதாவது இது மீண்டும் பங்கேற்பாளரின் காத்திருத்தலுக்கு அனுப்பப்படும்.

### 5.15 லங்காசெகுயர் முறைமையிலுள்ள தொகுப்புக் காப்புத் தீர்மானம்

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் கிடைக்கத்தக்கதாயிருக்கும் கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் எதிர்பார்ப்பு நிதியத் தீர்ப்பனவுகளின் காத்திருப்புக்களுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காகத் தொழிற்படும் தொகுப்புக் காப்புத் தீர்மான வசதிகளுக்குப் புறம்பாக, லங்காசெகுயர் முறைமையும் தீர்ப்பனவு அறிவுறுத்தல் களின் காத்திருப்பிற்குத் தீர்வு காண்பதற்காக தொகுப்புக் காப்புத் தீர்மான வசதிகளைக் கொண்டிருக்கிறது.

லங்காசெகுயர் முறைமையில் தொகுப்புக் காப்புத் தீர்மானம் கிரமமான இடைவெளிகளில் தொழிற்படுத்தப்படு கிறது. தீர்ப்பனவிற்காக குழும அறிவுறுத்தல்கள் வரிசையாக ஒழுங்குபடுத்தப்படுவதன் காரணமாக அவற்றினை அடையாளம் காணும் செயன்முறை நிறுத்தப்படுகிறது. தொகுப்புக் காப்புத் தீர்மானமானது வழங்கப்பட்ட முன்னுரிமைகளிலுள்ள வரிசைகளை இரத்துச் செய்துவிடுவதுடன் தீர்ப்பனவுச் செயன்முறையினையும் விலக்குகிறது. இச்செயன்முறையில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை மற்றும் வழங்கல் எதிர் கொடுப்பனவு ஒழுங்குகள் முறைமையினால் பிரயோகிக்கப்படுவதுடன் அதன் காரணமாக இச்செயன்முறையில் ஒன்றில் பிணை யங்கள் கணக்குகளோ அல்லது தீர்ப்பனவுக் கணக்குகளோ மேலதிக எடுப்பனவுகளைக் கொண்டிருக்காது.

இச்செயன்முறையில், கொடுப்பனவுகளின் ஆரம்ப ஒழுங்குகள் இரத்துச் செய்யப்படக்கூடும் என்பது பற்றி பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

### 5.16 நாளின் முடிவில் தீர்ப்பனவு செய்யப்படாத லங்காசெகுயர் கொடுக்கல்வாங்கல்களைக் கையாளுதல்

தொடர்பான பெறுமதித் திகதிகளில் வியாபாரங்கள் மூடப்படும் பொழுது தீர்ப்பனவு செய்யப்படாத தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல்வாங்கலின் நிராகரிப்பின் போது நிராகரிப்பினை அறிவிக்கும் விதத்தில் சுவிப்ற் செய்திகள் விடுக்கப்படும்.

## 6. முதலாந்தர ஏலங்கள்

### 6.1 முதலாந்தர ஏல முறைமையுடன் லங்காசெகுயர் முறைமையின் எதிர்வினை சார்ந்த நடவடிக்கைகள்

இலங்கை மத்திய வங்கி முதலாந்தர ஏலங்களை நடத்துவதற்கான ஆளுகைக்கான வழிகாட்டல்களை விடுக்கும்.

லங்காசெகுயர் முறைமை விலைக்கோரல்களை ஏற்றுக்கொள்கின்ற மற்றும் முதலாந்தர ஏலங்களில் பிணையங்களை ஒதுக்குகின்ற செயன்முறைகளுக்கு உதவியளிக்காது. ஆகவே, இலங்கை மத்திய வங்கி இச்செயன்முறைக்கு உதவியளிப்பதற்காகத் தனியான ஏல முறைமையொன்றினைப் பேணுகிறது. எனினும், முதலாந்தர ஏலங்களிலிருந்து தோன்றுகின்ற அனைத்து நிதியியல் கடப்பாடுகளும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள தீர்ப்பனவுக் கணக்குகளினூடாகவே தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

லங்காசெகுயர் முறைமையானது, பத்திரங்களற்ற பிணையங்களை, வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளர்களுக்கு, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள அவர்களது தீர்ப்பனவுக் கணக்கில் கொடுப்பனவுகள் பற்று வைக்கப்பட்டதன் பின்னர் ''சொந்தக்'' கணக்கிற்கு மாற்றல் செய்யும்.

ஏலத் திகதிகளும் தொடர்பான தீர்ப்பனவுத் திகதிகளும் லங்காசெகுயர் முறைமைக்கு வெளியே இலங்கை மத்திய வங்கியினால் அறிவிக்கப்படுகின்றன.

### 6.2 முதலாந்தர ஏலத் தீர்ப்பனவுகள்

முதலாந்தர ஏலங்கள், தொகுதி 4இன் விதி 1.2 இலுள்ள நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணைக் கிணங்க இலங்கை மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட திகதியில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்பாளர் கணக்கு, தீர்ப்பனவு நேரத்தில், அதன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை உள்ளடக்கும் விதத்தில் போதுமான நிதியினைக் கொண்டிருக்காதவிடத்து பிணையங்கள் பங்கேற்பாளர்களின் சொத்துரிமைக்கு மாற்றல் செய்யப்படமாட்டாது. இத்தொகுதியின் விதி 6.3 முதலாந்தர ஏல தீர்ப்பனவில் நிதிப் பற்றாக்குறையாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் பிரயோகிக்கப்பட வேண்டிய நடைமுறையினை விபரிக்கிறது.

### 6.3 முதலாந்தர ஏலத் தீர்ப்பனவுகளை மேற்கொள்ளத் தவறுதல்

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள தீர்ப்பனவுக் கணக்கில் முதலாந்தர ஏலக் கொள்வனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு பங்கேற்பாளர்கள் போதுமான நிதியினைக் கொண்டிருக்காத சந்தர்ப்பத்தில் கொடுக்கல்வாங்கல்கள் காத்திருப்புச் செய்யப்படும். பங்கேற்பாளர்கள் அவர்களது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைத் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதியினை இடுவதற்கும் அவர்களது கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கும் தீர்ப்பனவுத் திகதியன்று 1300 மணித்தியாலங்கள் வரையில் நேரம் வழங்கப்படும்.

தொடர்பான நாளன்று 1300 மணிக்கு கொடுக்கல்வாங்கல்கள் தீர்க்கப்படாமல் இருக்குமாயின் பங்கேற்பாளர் முதலாந்தர ஏலக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டதாகக் கருதப்படும். கொடுக்கல்வாங்கல்கள் இரத்துச் செய்யப்பட்டு இலங்கை அரசாங்கத்திற்கு மறுக்கப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும்.

விலைக்கோரலை ஏற்றுக்கொண்ட விலைக்குறிப்பீட்டாளரினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதவிடத்து அத்தகைய தீர்ப்பனவுக் கடப்பாடுகள் அத்தகைய விலைக்குறிப்பீட்டாளரை ஏற்புடைத்தான சட்டத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய தடைகளுக்குப் பொறுப்பானவராக மாற்றக்கூடும்.

## 7. முதிர்ச்சிகள்

### 7.1 முதிர்ச்சிக் கொடுப்பனவுச் செயன்முறை

முதிர்ச்சிப் பெறுகைகள் முதிர்ச்சித் திகதியன்று கொடுபடத்தக்கவையாகும்.

முதிர்ச்சிக் கொடுப்பனவானது, இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் வியாபாரத்திற்காக முறைமை மூடப்பட்டதன் பின்னர் முதிர்ச்சித் திகதிக்கு உடனடியாக முற்போந்த நாளன்று தன்னியக்கமாகவே மேற்கொள்ளப்படுகின்றதுடன் கொடுப்பனவு முதிர்ச்சித் திகதியன்று அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள தொடர்பான தீர்ப்பனவுக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

முதிர்ச்சிப் பெறுகைகள் பங்கேற்பாளர்களூடாகவே வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தப்படுகிறது. முதிர்ச்சித் திகதியன்று அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள ஒவ்வொரு பங்கேற்பாளரினதும் தீர்ப்பனவு கணக்கிற்கு தனியொரு கொடுப்பனவாக மேற்கொள்ளப்படுகிறது. வணிகர் நேரடி பங்கேற்பாளர் விடயத்தினைப் பொறுத்தவரை இத்தனியொரு கொடுப்பனவு வாடிக்கையாளரின் சொந்தப் பிணையங்களின் முதிர்ச்சிப் பெறுகைகளையும் அதேபோன்று வாடிக்கையாளரின் பிணையங்களையும் உள்ளடக்கியுள்ளது.

உலாவி இடைமுக வசதி அத்தகைய தனியொரு கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்டுள்ள தனிப்பட்ட முதிர்ச்சிக் கொடுப்பனவினதும் விபரங்களைத் தருகிறது (தனிப்பட்ட முதிர்ச்சிக் கொடுப்பனவுகள் மீதான அறிக்கையினை உலாவி இடைமுகத்தினூடாக உருவாக்கிக் கொள்ளலாம்).

### 7.2 வாங்கும் தெரிவுரிமையுடன் கூடிய பிணையங்கள்

வழங்கும் நேரத்திலுள்ள ஏற்புடைத்தான சட்டங்களுக்கிணங்க, அரசாங்கம் பிணையங்களை உரிய காலத்திற்கு முன்னரே மீட்டுக் கொள்வதற்கான தேர்வுரிமையினைக் கொண்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி அத்தகைய உரிய காலத்திற்கு முன்னரான மீட்பு பற்றி முன்கூட்டியே உடமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கும்.

### 7.3 முதிர்ச்சித் திகதிகள் விடுமுறை நாளன்று வருதல்

முதிர்ச்சித் திகதி விடுமுறை நாளன்று வரும் பொழுது திறைசேரி உண்டியல்களுக்கும் திறைசேரி முறிகளுக்கும் வெவ்வேறு விதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

திறைசேரி உண்டியல்களைப் பொறுத்தவரையில், முதிர்ச்சித் திகதி விடுமுறை நாளன்று வருமாயின், கொடுப்பனவுத் தொகையில் எந்த விதமான சீராக்கங்களையும் மேற்கொள்ளாமல் முதிர்ச்சித் திகதிக்கு உடனடியாக முற்போந்த வியாபார நாளன்று கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

எவ்வாறாயினும் 2022.01.01 ஆம் திகதியில் அல்லது திகதியிலிருந்து திறைசேரி உண்டியல்களின் முதிர்ச்சியானது வங்கி விடுமுறை தினத்தில் வருமிடத்து, கொடுப்பனவு பெறுமதிக்கு எந்தவித சீர்திருத்தங்களு மின்றி கொடுப்பனவுகளானது முதிர்ச்சித் திகதியினைத் தொடர்ந்து உடனடியாக தொடர்ந்து வருகின்ற அலுவல் நாளன்று மேற்கொள்ளப்படும்.

திறைசேரி முறிகளைப் பொறுத்தவரையில், முதிர்ச்சித் திகதி விடுமுறை நாளன்று வருமாயின், கொடுப்பனவுத் தொகையில் எந்தவிதமான சீராக்கங்களையும் மேற்கொள்ளாமல் முதிர்ச்சித் திகதிக்கு உடனடியாக அடுத்த நாளன்று கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

### 7.4 வாடிக்கையாளருக்கு முதிர்ச்சிப் பெறுகைகளை வழங்குவதற்கான கடமை

வாடிக்கையாளரின் சார்பாக முதிர்ச்சிப் பெறுகைகள் பெறப்பட்டதும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் அத்தகைய முதிர்ச்சிப் பெறுகைகளை வாடிக்கையாளர்களுக்கு அல்லது எழுதப்பட்ட ஏற்புடைத்தான சட்டங்களின் நியதிகளிலும் இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்கவும் வேறு எவரேனும் உரித்துடைய ஆளுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க நேரக்கட்டமைப்பொன்றிற்குள் கொடுப்பனவு களைச் செய்தல் வேண்டும்.

### 7.5 வாடிக்கையாளருக்கு முதிர்ச்சிப் பெறுகைகளை வழங்க முடியாமல் போதல்

இத்தொகுதியின் விதி 7.4 இற்கிணங்க முதிர்ச்சிப் பெறுகைகளைக் கொடுப்பனவு செய்வதற்கு பங்கேற் பாளரினால் அவரின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் இயலாமல் போகுமிடத்து, அத்தகைய பகிர்ந்தளிக்கப்படாத நிதியினை, இது தொடர்பில் மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரை களுக்கமைவாக, குறிப்பிட்ட நேரக் கட்டமைப்பொன்றிற்குள் இலங்கை மத்திய வங்கிக்கு (அரச பிணையங்கள் கோரப்படாத கணக்கில் வரவு வைப்பதற்காக) அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அத்தகைய அனுப்பல் தொடர்பான கொடுப்பனவு அறிவுறுத்தல் திருப்பி அனுப்பப்படுவதற்கான காரணத்தினையும் மூல பிணைய முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவின் விபரங்களையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 8. வட்டி

### 8.1 வட்டிக் கொடுப்பனவுச் செயன்முறை

வட்டிக் கொடுப்பனவுகள் தொடருக்காகக் குறித்துரைக்கப்பட்ட வட்டிக் கொடுப்பனவுத் திகதிகளில் செலுத்தப்படுகின்றன.

பத்திரங்களற்ற பிணையத்தின் சொந்தக்காரருக்கு மாத்திரம் வட்டிக் கொடுப்பனவுகள் பங்கேற்பாளர்களூடாக மேற்கொள்ளப்படுகின்றன. உரிய திகதியன்று, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள ஒவ்வொரு பங்கேற்பாளரினதும் தீர்ப்பனவுக் கணக்கிற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களைப் பொறுத்த வரையில், இத்தனிக் கொடுப்பனவு, இச்சொந்தப் பிணையங்கள் மீதும் அதேபோன்று இதன் வாடிக்கையாளர் பிணையங்கள் மீதும் செலுத்தத்தக்க அனைத்து வட்டிக் கொடுப்பனவு களையும் உள்ளடக்கியிருக்கும்.

உலாவி இடைமுகம் குறிப்பிட்ட தனியொரு கொடுப்பனவின் ஒவ்வொரு தனிப்பட்ட வட்டிக் கொடுப்பனவு களினதும் விபரமான தகவல்களைத் தருகிறது. தனிப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் தொடர்பான அறிக்கை யினையும் உலாவி இடைமுகத்தினூடாக உருவாக்கிக் கொள்ளமுடியும்.

### 8.2 வட்டிக் கொடுப்பனவு விடுமுறை நாளன்று வருதல்

திறைசேரி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுத் திகதி விடுமுறை நாளன்று வருமாயின், கொடுப்பனவுத் தொகையில் சீராக்கங்களெதுவும் செய்யப்படாமலேயே வட்டிக் கொடுப்பனவுத் திகதியை உடனடுத்து வரும் வியாபார நாளன்று கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

**8.3 பதிவுசெய்யப்பட்ட சொத்துரிமைக்கமைய வட்டிக் கொடுப்பனவுகள்**

லங்காசெகுயர் முறைமையானது, வட்டிக் கொடுப்பனவுத் திகதிக்கு முன்னைய வியாபார நாளன்று இறுதியில் முறைமையில் பதிவுசெய்யப்பட்டுள்ளவாறு பிணையத்தின் சொத்துரிமைக்கிணங்க பங்கேற்பாளர்களுக்கு வட்டிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்.

பிணையங்கள் வர்த்தகப்படுத்தப்பட்டு, தீர்ப்பனவு செய்யப்பட்ட போதும் அது லங்காசெகுயர் முறைமைக்கு இன்னமும் மாற்றல் செய்யப்படாத சந்தர்ப்பத்தில், பங்கேற்பாளர்கள் வட்டிக் கொடுப்பனவுகள் சரியான நன்மைபெறுநருக்குச் செலுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். பிணையங்கள் வட்டியுடன் விற்பனை செய்யப்பட்டிருக்கும் (அதாவது வர்த்தக விலைகள் இனிவரும் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கியிருக்கும்) பொழுது வட்டி, பிணையத்தின் புதிய சொந்தக்காரருக்கு வழங்கப்படுதல் வேண்டும். பெரும்பாலான வர்த்தகங்கள் வட்டி திகதிகளுக்கு சற்று முன்னதாக இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றமையானது வட்டிக் கொடுப்பனவுகளையும் சேர்த்து விலையிடலைத் தோற்றுவிக்கிறது.

வட்டிக் கொடுப்பனவொன்றின் சரியான நன்மைபெறுநர் பற்றி பங்கேற்பாளருச் சந்தேகம் இருக்குமாயின், குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் முழுமையான விளக்க விபரங்களுடன், இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகளுக்கிணங்க கொடுப்பனவுகளை (அரச பிணையங்கள் கோரப்படாத கணக்குகளில் வரவு வைப்பதற்காக) இலங்கை மத்திய வங்கிக்கு திருப்பியனுப்புதல் வேண்டும்.

**8.4 வாடிக்கையாளர் சொந்தக்காரருக்கு வட்டிக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான கடமை**

வாடிக்கையாளர் அல்லது உரித்துடைய எவரேனும் ஆளின் சார்பில் வட்டிக் கொடுப்பனவுகள் பெறப்பட்டதும் ஏதேனும் எழுதப்பட்ட ஏற்புடைத்தான சட்டங்களின் கீழ் பங்கேற்பாளர்கள் வட்டியை அத்தகைய வாடிக்கையாளருக்கு அல்லது உரித்துடைய அத்தகைய ஆளுக்கு, இது தொடர்பில் மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகளுக்கமைய அனுப்பி வைத்தல் வேண்டும்.

**8.5 வாடிக்கையாளர்களுக்கு வட்டிக் கொடுப்பனவுகளை வழங்க இயலாமல் போதல்**

பங்கேற்பாளரொருவர் வாடிக்கையாளருக்கு அல்லது அதற்கு உரித்தான ஆளுக்குச் சேரவேண்டிய வட்டிக் கொடுப்பனவினை வழங்க முடியாமலிருக்கும் போது, அது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகளுக்கமைய குறிப்பிட்ட நேரக் கட்டமைப்பொன்றிற்குள் (அரச பிணையங்கள் கோரப்படாத கணக்கு) இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அத்தகைய அனுப்பல் தொடர்பான கொடுப்பனவு அறிவுறுத்தல் திருப்பி அனுப்புவதற்கான காரணங்களைத் தெளிவாகக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் மூல வட்டிக் கொடுப்பனவு விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**9. வாடிக்கையாளர் கூற்றுக்கள்**

**9.1 வாடிக்கையாளர் விபரங்களைப் பதிவுசெய்தல்**

வாடிக்கையாளர் விபரங்கள் கீழே காட்டப்பட்டவாறு 3 வகைகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

| **1. சொந்தக்காரரின் விபரங்கள்** | | |
|---|---|---|
| ***துறை*** | ***துறையின் நீளம்*** | ***உள்ளடக்கம்*** |
| சொந்தக்காரர் குறியீடு | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கம், கம்பனி பதிவு இலக்கம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் வேறு அடையாள ஆவணங்களின் இலக்கம் |
| மாற்றுக் குறியீடு | 10 எழுத்துக்கள் | உடமைப் பங்கேற்பாளரின் உள்ளக வாடிக்கையாளர் தொடர்பு இலக்கம் |
| மாற்றுக் குறியீடு 2 | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரை அடையாளம் காண்பது தொடர்பில் வேறு ஏதேனும் தகவல்கள் |
| சொந்தக்காரர் வகை | | இணைப்பு ‘‘உ’’ இல் தரப்பட்டுள்ள வகைப்படுத்தலின்படி நன்மை பெறும் சொந்தக்காரரின் வகை |
| **2. முக்கியமான தொடர்பு விபரங்கள்** | | |
| ***துறை*** | ***துறையின் நீளம்*** | ***உள்ளடக்கம்*** |
| பெயர் | 100 எழுத்துக்கள் | வாடிக்கையாளர் பெயர் |
| முகவரி | ஒவ்வொன்றும் 35 எழுத்துக்களைக் கொண்ட 3 நிரைகள் | வாடிக்கையாளர் அஞ்சல் முகவரி |
| தொலைபேசி இல. | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் தொலைபேசி இலக்கம் |
| செல்லிடத் தொலைபேசி இல. | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் செல்லிடத் தொலைபேசி இலக்கம் |
| தொலைநகல் இல. | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் தொலைபேசி இலக்கம் |
| மின்னஞ்சல் முகவரி | 50 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் மின்னஞ்சல் முகவரி |
| அசையும் தீர்ப்பனவினைக் கவனிக்கின்ற முறை | வி.கி. | தேர்வுகளிலிருந்து தெரிவு செய்தல் ‘‘குறுஞ்செய்தி’’, ‘‘மின்னஞ்சல்’’, ‘‘குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல்’’, ‘‘ஒன்றுமில்லை’’ |
| பிறந்த திகதி | திதி/மாமா/ஆஆஆஆ | திகதிப் படிவம் |
| **3. மாற்றுத் தொடர்பு விபரங்கள்** | | |
| ***துறை*** | ***துறையின் நீளம்*** | ***உள்ளடக்கம்*** |
| பெயர் | 100 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் பெயர் |
| முகவரி | ஒவ்வொன்றும் 35 எழுத்துக்களைக் கொண்ட 3 நிரைகள் | வாடிக்கையாளர் மாற்று அஞ்சல் முகவரி |
| மின்னஞ்சல் முகவரி | 50 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் மின்னஞ்சல் முகவரி |

தனிப்பட்ட ஒருவரைப் பொறுத்தவரையில், முதனிலை பயன்பெறும் சொந்தக்காரர் குறியீடாகத் தேசிய அடையாள அட்டை இலக்கம் காணப்படுகின்ற வேளையில் கம்பனியினைப் பொறுத்தவரையில் கம்பனி பதிவு இலக்கம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதேனும் அடையாள ஆவணங்கள் காணப்படுகின்றன. அதற்குப் புறம்பாக, முதலீட்டாளரின் பெயர், தேசிய அடையாள அட்டை அல்லது கம்பனி பதிவு இலக்கத்தில் காணப்படுவது போன்று அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதேனும் அடையாள ஆவணங்களிலுள்ளது போன்று இருத்தல் வேண்டும். வணிகர் நேரடிப் பங்கேற் பாளர்கள், **இணைப்பு இ** இல் தரப்பட்டுள்ள பட்டியலுக்கமைவாக முதலீட்டாளர்களை வகைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பங்கேற்பாளர்களினால் பெயர், அஞ்சல் முகவரி, செல்லிடத் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பனவற்றின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட தகவல்களை கூற்றுக்களை அத்தகைய பங்கேற்பாளர்களின் வாடிக்கையாளர்களுக்கு அஞ்சலில் அனுப்புவதற்கும் குறுஞ்செய்திகள் அத்துடன் அல்லது மின்னஞ்சல் எச்சரிக்கைகளை அனுப்புவதற்கும் இலங்கை மத்திய வங்கி பயன்படுத்துகின்றது. ஆகவே, பெயர், முகவரி, செல்லிடத் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பனவற்றை உள்ளடக்கிய தற்போதையதும் முழுமையானதுமான வாடிக்கையாளர் தகவல்கள் வாடிக்கையாளர்களுக்கு உரிய காலத்தில் கூற்றுக்களை வழங்கவும் அவர்களுக்கு குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் எச்சரிக்கைகளை வழங்குவதற்கு வசதியளிக்கின்றன. பங்கேற்பாளரொருவர், அத்தகைய பங்கேற்பாளரின் கீழுள்ள ஒவ்வொரு வாடிக்கையாளரும் (மத்திய வைப்பக முறைமையிலுள்ள கணக்கு உடமையாளர்) அத்தகைய பங்கேற்பாளருக்கு பெயர், முகவரி, செல்லிடத் தொலை பேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி விபரங்கள் என்பன தொடர்பில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்களை உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர்களினால் அறிவிக்கப்பட்டவாறு மத்திய வைப்பக முறைமையிலுள்ள அத்தகைய விபரங்களைப் பங்கேற்பாளர்கள் உடனடியாகத் திருத்திக் கொள்வது அவரது பொறுப்பாகும்.

பங்கேற்பாளர்கள், மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை என்பதனையும் அவை எல்லா நேரங்களிலும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

### 9.2 உடமைகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான வாடிக்கையாளர் கூற்று

இத்தொகுதியின் விதி 10.2 இற்கு உட்பட்டு, பிணையங்களின் உடமைகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் கூற்று லங்காசெகுயர் முறைமையிலுள்ள தொடர்பான பிணையங்கள் கணக்கிற்காகப் பதிவுசெய்யப்படுகின்றன. இது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது உடமைகளையும் கொடுக்கல்வாங்கல்களையும் உறுதிப்படுத்துகின்றது. உடமைகளின் கூற்று அரையாண்டு அடிப்படையில் வழங்கப்படுவதுடன் கொடுக்கல்வாங்கல்களின் கூற்று மாதாந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது. இக்கூற்றானது தொடர்பான வணிகர் நேரடி பங்கேற்பாளரினால் வழங்கப்பட்ட ஆரம்ப உறுதிப்படுத்தல்களுக்குப் புறம்பாக, இரண்டாவது உறுதிப்படுத்தலாகக் கருதப்படுகிறது.

பங்கேற்பாளர்களைப் பொறுத்தவரையில், சுவிப்ற் அல்லது உலாவி இடைமுகத்தினூடாக அவர்கள் லங்காசெகுயர் முறைமையிலிருந்து விபரங்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வாடிக்கையாளர்களும் பங்கேற்பாளர்களும் தொடர்பான வணிகர் நேரடி பங்கேற்பாளர்களூடாக இலங்கை மத்திய வங்கியிலிருந்து பயன்படுத்துநர் அடையாள அட்டையினையும் கடவுச்சொல்லினையும் பெற்றுக்கொள்வதன் மூலம் லங்காசெகுயர் வலையமைப்பு வசதியினூடாக அவர்களது பிணையங்கள் உடமைகளின் விபரங்களைப் பார்வை யிட்டுக் கொள்ளலாம்.

### 9.3 வட்டி மற்றும் முதிர்ச்சிக் கொடுப்பனவுகளின் வாடிக்கையாளர் கூற்று

வட்டி மற்றும் முதிர்ச்சிக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்து வாடிக்கையாளர்களுக்கு வட்டி மற்றும் முதிர்ச்சிக் கொடுப்பனவு தொடர்பான கூற்றொன்று நேரடியாக அனுப்பி வைக்கப்படுகிறது. இது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களிடமிருந்து அவர்களுக்குச் சேரவேண்டிய வட்டி மற்றும் கொடுப்பனவு தொடர்பான விபரங்களை வழங்குகிறது. இக்கூற்று, தொடர்பாக வணிகர் நேரடி பங்கேற்பாளரினால் வழங்கப்பட்ட முதலாவது உறுதிப்படுத்தலுக்குப் புறம்பாக வழங்கப்படும் இரண்டாவது உறுதிப்படுத்தலாகக் கருதப்படுகிறது.

பங்கேற்பாளர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் சுவிப்ற் அல்லது உலாவி இடைமுகத்தினூடாக லங்கா செகுயரிலிருந்து நேரடியாக அத்தகைய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வாடிக்கையாளர்களும் பங்கேற்பாளர்களும் தொடர்பான வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களூடாக இலங்கை மத்திய வங்கியிலிருந்து பயன்படுத்துநர் அடையாள அட்டையினையும் கடவுச்சொல்லினையும் பெற்றுக்கொள்வதன் மூலம் லங்காசெகுயர் வலையமைப்பு வசதியினூடாக அவர்களது பிணையங்கள் உடமைகளின் விபரங்களை பார்வை யிட்டுக் கொள்ளலாம்.

### 9.4 பிணையங்களின் கொடுக்கல்வாங்கல் தொடர்பான குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் எச்சரிக்கைகள்

மேலே 9.2ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட மாதாந்தக் கொடுக்கல்வாங்கல் கூற்றுக்களுக்குப் புறம்பாக, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுடன் பேணப்படும் வாடிக்கையாளர் கணக்குகளிலுள்ள பிணையங்களின் ஒவ்வொரு நகர்வுகளையும் தொடர்ந்து வாடிக்கையாளர்களுக்கு லங்காசெகுயர் முறைமையினால் குறுஞ்செய்தி அல்லது அத்துடன் மின்னஞ்சலொன்று அனுப்பப்படுகிறது. இது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது கணக்கில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்கள் பற்றி அதேநேர அடிப்படையில் உடனடியாக தெரியப்படுத்துகிறது. இக்குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் எச்சரிக்கை தொடர்பான வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களினால் வழங்கப்பட்ட முதலாவது உறுதிப் படுத்தலுக்குப் புறம்பாக வழங்கப்படும் இரண்டாவது உறுதிப்படுத்தலாகக் கருதப்படுகிறது.

### 9.5 தவறான முகவரிப் பதிவேடுகள்

வாடிக்கையாளர்களின் கூற்றுக்கள் விநியோகிக்கப்படாமல் இலங்கை மத்திய வங்கிக்கு திரும்பியிருப்பின் அல்லது தவறான மின்னஞ்சல் முகவரியின் காரணமாக மின்னஞ்சல் எச்சரிக்கை இலங்கை மத்திய வங்கிக்கு திரும்பியிருப்பின் மத்திய வங்கி வாடிக்கையாளரின் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் விபரங்களைத் திருத்திக்

கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளும். பங்கேற்பாளர் அத்தகைய வாடிக்கையாளர் தொடர்பில் லங்காசெகுயர் முறை மையில் வைத்திருக்கப்படும் அஞ்சல் முகவரி/ மின்னஞ்சல் முகவரியினை உடனடியாகத் திருத்திக் கொள்ளுவார். பங்கேற்பாளர் புதிய அஞ்சல் முகவரி/ மின்னஞ்சல் முகவரி தொடர்பான விபரங்களை இரண்டு மாத காலத்திற்குள் வழங்க முடியாமல் இருப்பின் அஞ்சல் முகவரி/ மின்னஞ்சலில் முகவரிகள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக ''வாடிக்கையாளர் இருப்பிடத்தினை அடையாளம் காணமுடியவில்லை'' என பதிலீடு செய்து கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர் இருப்பிடத்தினைக் கண்டறிவதற்காக வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வாடிக்கையாளர்களின் நலன்களின் அடிப்படையிலானதாக இருத்தல் வேண்டும்.

**10. பிணை வைத்தல்**

**10.1 பிணைகளைப் பதிவுசெய்தல்**

பிணைகளைப் பதிவுசெய்வதற்காக முறைமையில் தனியான கணக்கு வகையொன்று கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இக்கணக்கு வகையின் கொடுக்கல்வாங்கல்களை மீள்நிலைப்படுத்துவதன் மூலம் மாத்திரமே இற்றைப்படுத்திக் கொள்ளமுடியும். இக்கணக்கு வகை நிறுவப்பட்டதும் அதிலிருந்து பங்கேற்பாளர்கள் விற்கவோ வாங்கவோ முடியாது.

இலங்கை மத்திய வங்கி, அதன் தற்றுணிபின் அடிப்படையில், குறிப்பிட்ட வகைப் பிணையங்களை பிணை வைக்க முடியாது எனக் குறித்துரைக்கலாம் என்பதுடன் லங்காசெகுயர் முறைமை தேவையினைப் பொறுத்து அத்தகைய கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தும்.

பத்திரங்களற்ற திறைசேரி முறிகள்/ உண்டியல்களை, 2004ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் (கொடுக்கல்வாங்கல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2004ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் (கொடுக்கல்வாங்கல்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க பிணை வைக்க முடியும்.

பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறியொன்றினைப் பிணை வைத்தல் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்/ முறிகளை பிணையளிக்கப்பட்டவருக்கு வழங்குவதன் மூலம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

கீழேயுள்ள பந்திக்குட்பட்டு, பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்/ முறியின் விநியோகத்தினை, பிணை யளிப்பவராகவோ அல்லது பிணை பெறுபவராகவோ இல்லாத வணிகர் நேரடிப் பங்கேற்பாளரினால் பேணப்படும் பிணைப்படுத்தல் கணக்கிற்கு மாற்றல் செய்வதன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமெனக் கருதப்படுதல் வேண்டும். இக்கணக்கில் பிணையளித்தவர் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்/ முறிகளின் சொந்தக்காரர் என பதியப்படல் வேண்டும்.

மேலேயுள்ள பந்தியில் எது எவ்வாறிருப்பினும் கூட, ஈட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 89) நியதிகளில் ஒப்புதலளிக் கப்பட்ட கொடுகடன் முகவரொருவர் பிணையளிக்கப்பட்டவராக இருக்குமிடத்து பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்/ முறியின் பிணையினைக் கீழே (i) அல்லது (ii) இல் உள்ளவாறு உருவாக்க முடியுமென்பதுடன் பிணையளிக்கப்பட்டவர் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்/ முறியின் சொந்தக்காரராக பதிவுசெய்யப்படுதலும் வேண்டும்.

(i) பிணையளிக்கப்பட்டவர் நேரடிப் பங்கேற்பாளராக இருக்குமிடத்து பிணைக்குட்பட்டதாக இருக்கும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்/ முறியினை பிணையளிக்கப்பட்டவரினால் பேணப்படவிருக்கும் பிணை யளிக்கப்பட்ட கணக்கிற்கு மாற்றல் செய்வதன் மூலம்; அல்லது

(ii) பிணையளிக்கப்பட்டவர் நேரடிப் பங்கேற்பாளராக இல்லாதவிடத்து பிணைக்குட்பட்டதாக இருக்கும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்/ முறியினை வணிகர் நேரடிப் பங்கேற்பாளரினால் பேணப்படவிருக்கும் பிணையளிக்கப்பட்ட கணக்கிற்கு மாற்றல் செய்வதன் மூலம்.

பிணையளிக்கப்பட்ட கணக்கினைப் பேணுகின்ற பங்கேற்பாளரினால் பேணப்படுகின்ற முறைமையில் தனியான தொரு சொந்தக்காரர் பதிவேடொன்று உருவாக்கப்படுதல் வேண்டும். பிணைகள் பற்றிய தகவல்கள் சொந்தக் காரரின் பெயர் மற்றும் முகவரி பதிவுசெய்யப்படுவதற்கு வழமையாகப் பயன்படுத்தப்படும் துறையில் பதிவு செய்யப்படுகிறது.

| துறை | துறையின் நீளம் | உள்ளடக்கம் |
|---|---|---|
| சொந்தக்காரர் | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கம், கம்பனி பதிவு இலக்கம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக் கப்பட்ட ஏதேனும் வேறு ஆவணங்களின் அடையாள இலக்கம் |
| பெயர் முகவரி | வரிசை 1 | பிணை வழங்கியவரின் பெயர் (அதாவது சொந்தக்காரர்) |
| பெயர் முகவரி | வரிசை 2 | பிணை பெற்றவரின் பெயர் |
| பெயர் முகவரி | வரிசை 2 | விடுவிக்க எண்ணியுள்ள திகதி (திதிமாமாஆஆ) |
| பெயர் முகவரி | வரிசை 3 | பிணையின் நிலை, உ-ம்: பிணக்கு அல்லது கோரலுக்குட் பட்டிருப்பின் இத்தொடர் பயன்படுத்தப்படுதல் வேண்டும், உ-ம்: ''செலுத்தத் தவறியவை'' |
| மாற்று சொந்தக் காரரின் குறியீடு | 20 எழுத்துக்கள் | உடமைப் பங்கேற்பாளரின் பன்னாட்டு வாடிக்கையாளர் தொடர்பு இலக்கம் |

| 1. சொந்தக்காரரின் விபரங்கள் | | |
|---|---|---|
| *துறை* | *துறையின் நீளம்* | *உள்ளடக்கம்* |
| சொந்தக்காரர் குறியீடு | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கம், கம்பனி பதிவு இலக்கம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல ளிக்கப்பட்ட ஏதேனும் வேறு ஆவணங்களின் அடையாள இலக்கம் |
| மாற்றுக் குறியீடு | 10 எழுத்துக்கள் | உடமைப் பங்கேற்பாளரின் பன்னாட்டு வாடிக்கையாளர் தொடர்பு இலக்கம் |
| மாற்றுக் குறியீடு 2 | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் அடையாளம் தொடர்பில் வேறு ஏதேனும் தகவல்கள் |
| சொந்தக்காரர் வகை | | இணைப்பு இ இல் தரப்பட்டுள்ள வகைப்படுத்தலின்படி நன்மை பெறும் சொந்தக்காரரின் வகை |

| 2. முக்கியமான தொடர்பு விபரங்கள் | | |
|---|---|---|
| *துறை* | *துறையின் நீளம்* | *உள்ளடக்கம்* |
| பெயர் | 100 எழுத்துக்கள் | வாடிக்கையாளர் பெயர் |
| முகவரி | ஒவ்வொன்றும் 35 எழுத்துக்களைக் கொண்ட 3 நிரைகள் | வாடிக்கையாளர் அஞ்சல் முகவரி |
| தொலைபேசி இல. | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் தொலைபேசி இலக்கம் |
| செல்லிடத் தொலைபேசி இல. | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் செல்லிடத் தொலைபேசி இலக்கம் |
| தொலைநகல் இல. | 20 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் தொலைபேசி இலக்கம் |
| மின்னஞ்சல் முகவரி | 50 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் மின்னஞ்சல் முகவரி |
| அசையும் தீர்ப்பனவினைக் கவனிக்கின்ற முறை | வி.கி. | தேர்வுகளிலிருந்து தெரிவு செய்தல் ''குறுஞ்செய்தி'', ''மின்னஞ்சல்'', ''குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல்'', ''ஒன்றுமில்லை'' |
| பிறந்த திகதி | திதி/மாமா/ஆஆஆஆ | திகதிப் படிவம் |

| 3. தொடர்பு கொள்வதற்கான மாற்று விபரங்கள் | | |
|---|---|---|
| *துறை* | *துறையின் நீளம்* | *உள்ளடக்கம்* |
| பெயர் | 100 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் பெயர் |
| முகவரி | ஒவ்வொன்றும் 35 எழுத் துக்களைக் கொண்ட 3 நிரைகள் | வாடிக்கையாளர் மாற்று அஞ்சல் முகவரி |
| மின்னஞ்சல் முகவரி | 50 எழுத்துக்கள் | வாடிக்கையாளரின் மின்னஞ்சல் முகவரி |

பிணை வைக்கப்பட்ட பிணையங்களின் வட்டியும் முதிர்ச்சிக் கொடுப்பனவும் பங்கேற்பாளரின் பிணை வைக்கப் பட்ட கணக்குகளுக்குக் கிடைக்கச் செய்யப்படுகின்றன. பங்கேற்பாளர் இம்முறைமைகளின் விதிகளுக்கிணங்க சொந்தக்காரர்களுக்குப் பகிர்ந்தளிப்பார்.

**10.2 பிணைகளின் கூற்றுக்களும் உறுதிப்படுத்தலும்**

பிணைகளின் தகவல்கள் வழமையாக அஞ்சற்படுத்தல் விபரங்களுக்காக ஒதுக்கப்படும் துறைகளைப் பயன்படுத்தி லங்காசெகுயர் முறைமையில் பதிவுசெய்யப்படுகின்றன. இதன் விளைவாக, பிணையிடப்பட்ட கணக்கினை வைத்திருக்கும் பங்கேற்பாளருக்கு கூற்றுக்கள் வழங்கப்படுகின்றன. கூற்றுக்களைப் பெறுகின்ற தரப்பினர் எவரோ அவர் பிணையத்தரப்பினர்களுக்கு அல்லது வட்டிக் கொடுப்பனவுகளைப் பொறுத்தவரையில் தொடர்பான பிணையங்களின் சொந்தக்காரர்களுக்குக் கூற்றுக்களை வழங்குவதற்கும் பொறுப்புடையவராவார்.

**10.3 பிணைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பங்கேற்பாளர்களின் கடப்பாடு**

தொடர்பான ஒழுங்குவிதிகளுக்கிணங்க, பிணைகளை நடைமுறைப்படுத்தவும் விடுவிக்கவும் பங்கேற்பாளர்கள் பொறுப்புடையவராவர்.

**11. ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி**

**11.1 ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் தொழிற்பாடுகள்**

ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் தொழிற்பாடுகள் தொகுதி 2இன் விதி 7இல் விபரிக்கப்பட்டுள்ளது. லங்காசெகுயர் முறைமை வசதிகள் பங்கேற்பாளர்களின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கணக்குகளில் அதாவது, மீள்நிலைப்படுத்தல் அறிவுறுத்தல்களைப் பயன்படுத்துவதனூடாகப் பிணை யங்களை நிலைப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கெதிரான பிணையுறுதி யாக பிணை வழங்கப்படவுள்ள அனைத்துப் பிணையங்களும் பங்கேற்பாளரின் சொந்தக் கணக்கிலிருந்து ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படல் (மீள்நிலைப்படுத்தல்) வேண்டும்.

**11.2 தகைமையுடைய பிணையங்கள்**

பங்கேற்பாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்த அல்லது வாடிக்கையாளர்களுடன் மீள்கொள் வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களை அல்லது பங்கேற்பாளர்களுக்குச் சொந்தமாயிராத வேறு ஏதேனும் பிணையங்களை மத்திய வங்கியுடனான ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது.

**11.3 விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

மேலேயுள்ள பிரிவு 11.2 இனை மீறுவது, பின்வரும் விதத்தில் மத்திய வங்கிக்கு பங்கேற்பாளர்கள் கொடுப்பனவு களைச் செய்வதற்குப் பொறுப்புடையதாக்கும்.

(அ) கடன்பட்ட தொகை ரூ.1,000 மில்லியன் வரையிலானதாக இருக்குமிடத்து நாளொன்றிற்கு 2 சதவீதமாக இருக்கும்.
(ஆ) கடன்பட்ட தொகை ரூ.1,000 மில்லியனுக்கு மேற்பட்டதாக இருக்குமிடத்து நாளொன்றிற்கு 2.5 சதவீதமாக இருக்கும்.

**11.4 பங்கேற்பாளர்கள் ஒரு நாளுக்குள்ளேயான மீள்கொள்வனவு உருவாக்கத்தினை முகாமைப்படுத்தல்**

பங்கேற்பாளரொருவர் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டு ரீதியான தலையீடு இல்லாமல் அவராகவே ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவினை முன்னெடுக்க முடியும். ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி திரும்பல்களை பங்கேற்பாளர் தானாகவே பிணையிட்ட பிணையமொன்றின் மொத்த அளவிற்கான அல்லது பிணையிட்ட பிணையத்தின் அளவின் ஒரு பகுதிக்கு அல்லது பிணையிட்ட அனைத்துப் பிணை யங்களின் மொத்த அளவிற்கும் ஒரே தடவையில் மேற்கொள்ள முடியும். இப்பங்கேற்பாளர் வியாபார நாளன்று மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.45 மணி வரை தகைமையுடைய பங்கேற்பாளர்களுக்கு இப்பங்கேற்பாளர் முகாமைப்படுத்தப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவு உருவாக்க வசதி கிடைக்கத்தக்கதாக இருக்கும். இலங்கை மத்திய வங்கி இறுதி ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவு திரும்பலை ஒவ்வொரு வியாபார நாளன்றும் பி.ப. 4.15 மணிக்கு அனைத்துப் பங்கேற் பாளர்களினாலும் பிணையிடப்பட்ட அனைத்துப் பிணையங்களுக்குமான ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவினை ஆரம்பிக்கும்.

**11.4.1 ஒரு நாளுக்குள்ளேயான மீள்கொள்வனவு உருவாக்கத்திற்கான நேர நீடிப்பு**

பங்கேற்பாளர்கள் அவர்களது அனைத்து ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவு உருவாக்கங்களையும் தொழிற்பாட்டு அட்டவணையிலுள்ளவாறான நேரகாலத்திற்குள் நிறைவு செய்தல் வேண்டும். ஒரு நாளுக்கள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவு உருவாக்கத்திற்கான வெட்டுநேரத்தினை நீடிப்பதற்கான பங்கேற்பாளர்களின் கோரிக்கை ஒவ்வொரு விடயங்களாகப் பரிசீலனையில் கொள்ளப்படும்.

ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொள்வனவு உருவாக்கத்தின் வெட்டுநேரத்தினை விரிவாக்குவதற்கான தேவை காணப்படுமிடத்து பங்கேற்பாளர் கீழே தரப்பட்டுள்ள படிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(அ) உதவிப்பீடத்துடன் அழைப்புக் கோரிக்கையினை குறித்தல்; அத்துடன்

(ஆ) கோரிக்கைக்கு ஆதரவளிக்கின்ற நியாயமான விபரங்களுடன், தொடர்பான வியாபார நாளன்று பி.ப. 3.30 மணிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையினை விடுத்தல் வேண்டும்.

இலங்கை மத்திய வங்கி, நெருக்கடியான சூழ்நிலைகளில் மாத்திரம் நேரத்தினை நீடிப்பதற்கான கோரிக்கையை ஏற்றுக்கொள்வதனைப் பொதுவான கோட்பாடாகக் கொண்டிருக்கிறது.

## தொகுதி 4

## தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம்

### பொருளடக்கம்

| | | | |
|---|---|---|---|
| **1** | | **தொழிற்பாட்டுக் கலண்டர் மற்றும் அட்டவணை ……** | **64A** |
| | 1.1 | லங்காசெட்டில் தொழிற்படுகின்ற நாள் …… | 64A |
| | 1.2 | நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை …… | 64A |
| | 1.3 | லங்காசெட்டில் தொழிற்பாட்டுத் தொடர்கள் மற்றும் மணித்தியாலங்களுக்கு அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்கள் …… | 64A |
| | 1.4 | முன்கூட்டியே அறிவிக்கப்படாத விசேட வங்கி விடுமுறைகளுக்கான ஏற்பாடுகள் …… | 64A |
| **2** | | **தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் பின்னூட்டல் நியமங்கள் ……** | **64A** |
| | 2.1 | லங்காசெட்டில் தொழிற்பாடுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான பங்கேற்பாளரின் பொறுப்பு …… | 64A |
| | 2.2 | உண்மையான அல்லது ஐயத்திற்குரிய பாதுகாப்பு மீறல்கள் …… | 65A |
| | 2.3 | மோசடி நடவடிக்கைகள் …… | 65A |
| | 2.4 | சுவிப்ற் வின் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் …… | 65A |
| | 2.5 | லங்காசெகுயர் முறைமைக்கான வங்கி அடையாளப்படுத்துநர் குறியீட்டு முகவரி …… | 65A |
| | 2.6 | தொடர்பு முகாமைத்துவப் பிரயோகம் …… | 65A |
| | 2.7 | லங்காசெட்டில் உலாவி இடைமுகப் பாதுகாப்பு …… | 65A |
| | 2.8 | உலாவி இடைமுகப் பயன்படுத்துநர் அணுகும்தன்மை கட்டுப்பாடுகளைப் பேணல் …… | 66A |
| | 2.9 | ஒருமைப்பாடு மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மை …… | 66A |
| | 2.10 | லங்காசெட்டில் வசதிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் அல்லது பகிர்ந்து கொள்ளுதல் …… | 66A |
| **3** | | **எதிர்பாராத நிகழ்வுகள் ……** | **66A** |
| | 3.1 | எதிர்பாராத நிகழ்வொன்றின் வரைவிலக்கணம் …… | 66A |
| | 3.2 | இலங்கை மத்திய வங்கி அனர்த்த மீட்பு வசதிகள் …… | 67A |
| | 3.3 | தனிப்பட்ட பங்கேற்பாளர் நிகழ்வு …… | 67A |
| | 3.3.1 | முறைமைச் செயலிழப்பிற்கான ஆலோசனைகள் …… | 67A |
| | 3.3.2 | ஏனைய பங்கேற்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல் …… | 67A |
| | 3.3.3 | உள்முகக் கொடுக்கல்வாங்கல்களைத் தொடர்ந்தும் செயன்முறைப்படுத்தல் …… | 67A |
| | 3.3.4 | கணனியை அடிப்படையாகக் கொண்ட தளநிகழ்வு இணைப்பினை மீளநிறுவுதல் …… | 67A |
| | 3.3.5 | கையினால் செய்யப்படும் நிதிய மாற்றல்கள் …… | 67A |
| | 3.3.6 | கையினால் செய்யப்படும் பிணையங்களின் மாற்றல்கள் …… | 68A |
| | 3.4 | சுவிப்ற் நிகழ்வுகள் …… | 68A |
| | 3.5 | லங்காசெட்டில் கணனியை அடிப்படையாகக் கொண்ட தளநிகழ்வு …… | 68A |
| | 3.6 | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை பிரயோக நிகழ்வு …… | 69A |
| | 3.7 | எதிர்பாராத நிகழ்வுகளைப் பதிவுசெய்தல் …… | 69A |
| | 3.8 | ஏனைய எதிர்பாராத நிகழ்வுகள் …… | 69A |
| | 3.9 | எதிர்பாராத ஏற்பாடுகளைப் பரீட்சித்தல் …… | 69A |
| | 3.10 | தொடர்பு மையங்கள் …… | 70A |
| | 3.11 | நிருவாகச் செய்திகள் …… | 70A |
| | 3.12 | பங்கேற்பாளரை அல்லது கணக்கினை இடைநிறுத்துதல் …… | 70A |
| | 3.13 | தவணை தவறிய பங்கேற்பாளர் நிலை …… | 70A |

| | | | |
|---|---|---|---|
| **4** | **முறைமை நிருவாகம் மற்றும் பயன்படுத்துநர் உதவி** | | **70A** |
| | 4.1 | சுவிப்ற் பயன்படுத்துநர் உதவி | 70A |
| | 4.2 | லங்காசெட்டில் உதவிக்கருமபீடம் | 70A |
| **5** | **பங்கேற்பாளர்களிடையேயான பிணக்குகள்** | | **70A** |
| **6** | **முறைமை மாற்றங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை மாற்றுதல்** | | **71A** |
| | 6.1 | முறைமைக்கான நிறுவுகைகள், மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்கள் | 71A |
| | 6.2 | லங்காசெட்டில் முறைமை மாற்றங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை மாற்றுதல் | 71A |
| | 6.3 | சுவிப்ற் நியமங்களின் மாற்றங்கள் | 72A |
| **7** | **கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள்** | | **72A** |

## 1. தொழிற்பாட்டுக் கலண்டர் மற்றும் அட்டவணை

### 1.1 லங்காசெட்டில் தொழிற்படுகின்ற நாள்

லங்காசெட்டில் முறைமையானது இலங்கை மத்திய வங்கியினால் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு வியாபார நாளன்றும் தொழிற்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் தொடங்குவதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கி ஆண்டின் விடுமுறை நாட்களை முறைமைக்கு அறிமுகப்படுத்தி விடுவதன் காரணமாகப் பங்கேற்பாளர்கள் அதற்கிணங்கத் தொழிற்படுகின்ற நாட்களை பார்க்கக்கூடியவர்களாக இருக்கின்றனர். லங்காசெட்டில் முறைமை தொழிற்படுகின்ற வேளைகளிலெல்லாம் பங்கேற்பாளர்கள் லங்காசெட்டில் முறைமையுடன் அறிவுறுத்தல்களையும் லங்காசெட்டிலுடன் தொடர்பான ஏனைய செய்திகளையும் பரிமாற்றிக் கொள்ளமுடியும்.

### 1.2 நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை

இலங்கை மத்திய வங்கி, ஒவ்வொரு தொழிற்படுகின்ற நாளன்றும் தீர்மானிக்கப்பட்ட அட்டவணையின் அடிப்படையில் லங்காசெட்டில் முறைமையினைத் தொழிற்படுத்துகின்றது. லங்காசெட்டில் முறைமையின் ஒவ்வொரு வியாபார நாட்களுக்குள்ளும் தனித்தனியான தொடர்கள் காணப்படுவதுடன் இத்தொடர்களின் போது வேறுபட்ட கொடுக்கல்வாங்கல்களும் செயன்முறைகளும் பிரயோகிக்கப்படுகின்றன. லங்காசெட்டில் நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் சுற்றோட்டப்படுத்தப்படுகிறது.

நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணைக்கான மாற்றங்கள் பங்கேற்பாளர்களுக்குச் சுற்றறிக்கையூடாக அறிவிக்கப்படுவதுடன் முறைமையின் விதிகளும் அதற்கேற்றவாறு இலங்கை மத்திய வங்கியினால் திருத்தப்படும். சாதாரண சூழ்நிலைகளின் போது, பங்கேற்பாளர்களுக்கு அத்தகைய மாற்றங்களுக்குக் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னதாக அறிவித்தல் வழங்கப்படும்.

### 1.3 லங்காசெட்டில் தொழிற்பாட்டுத் தொடர்கள் மற்றும் மணித்தியாலங்களுக்கு அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்கள்

எதிர்பாராத அவசர நிலைமைகளைக் கையாள்வதற்காக காலத்திற்குக் காலம் தொழிற்பாட்டு அட்டவணைக்கு அவ்வப்போதான சீராக்கங்கள் தேவைப்படலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கி அதன் ஏக தற்றுணிபின்படி தொழிற்பாட்டு நேரங்களையும் தொடர்களையும் நீடித்துக்கொள்ளும் அல்லது குறைத்துக் கொள்ளும். தேவையானவிடத்து அவ்வப்போதைய மாற்றங்கள் பற்றி பங்கேற்பாளர்களுக்கு இலங்கை மத்திய வங்கி ஆலோசனைகளை வழங்கும்.

பங்கேற்பாளர்கள் ஒவ்வொரு வியாபார நாளுக்குமான அவர்களது கொடுக்கல்வாங்கல்கள் அனைத்தும் தொழிற்பாட்டு அட்டவணையில் தரப்பட்டுள்ள நேரத்திற்குள் முடிவடைந்துவிட்டமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும். தொழிற்பாட்டு நாளொன்றினை அல்லது தொடரொன்றினை நீடிப்பதற்கான பங்கேற்பாளரின் கோரிக்கைகள் ஒவ்வொரு விடயமாகப் பரிசீலிக்கப்படும். முறைமையின் தொழிற்பாட்டு நேரத்தினை நீடிப்பதற்கான அவசியமேதுமிருக்குமாயின் பங்கேற்பாளர்கள் கீழே தரப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்:

அ. உதவிக்கருமபீடத்தில் கோரிக்கையொன்றினை பதிவிடல்; அத்துடன்

ஆ. எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை கோரிக்கைக்கு ஆதரவளிக்கின்ற நியாயமான விபரங்களுடன் தொடர்பான வியாபார நாளன்று பி.ப. 4.00 மணிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பங்கேற்பாளர்கள் நீடிப்பினைப் பெற்றுக்கொள்வதன் மீது தங்கியிருக்கக்கூடாது. பொதுவான நெறிமுறையாக இலங்கை மத்திய வங்கி, நெருக்கடியான சூழ்நிலைகளில் மாத்திரம் நீடிப்பதற்கான கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளும்.

### 1.4 முன்கூட்டியே அறிவிக்கப்படாத விசேட வங்கி விடுமுறைகளுக்கான ஏற்பாடுகள்

அரசாங்கத்தினால் திடீரென விசேட வங்கி விடுமுறையொன்று பிரகடனப்படுத்தப்படும் சந்தர்ப்பமொன்றில் லங்காசெட்டில் முறைமை திறக்கப்படமாட்டாது. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், பிரகடனப்படுத்தப்பட்ட வங்கி விடுமுறையினை அடுத்துவரும் வியாபார நாளன்று முறைமையானது இரண்டு நாட்களுக்குமாக அதாவது காலை அமர்வு முன்னைய வியாபார நாளுக்கானதாகவும் (பிரகடனப்படுத்தப்பட்ட விடுமுறைக் கொடுக்கல் வாங்கல்களுக்காக) பிற்பகல் அமர்வு உண்மையான வியாபார நாளுக்கானதாகவும் (பிரகடனப்படுத்தப்பட்ட விடுமுறைக்குப் பின்னர் அடுத்த வியாபார நாளுக்கானது) இருக்கும்.

## 2. தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் பின்னூட்டல் நியமங்கள்

### 2.1 லங்காசெட்டில் தொழிற்பாடுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான பங்கேற்பாளரின் பொறுப்பு

சுவிப்ற் மற்றும் லங்காசெட்டில் முறைமை இரண்டும் இடைப்போக்கிலுள்ள தரவுகள், கொடுப்பனவுச் செய்திகளைப் பாதுகாப்பதற்கும் கட்டுப்பாட்டு அணுகும் தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கும் வசதிகளை வழங்குகின்றது. பங்கேற்பாளர்கள் அவர்களது சொந்த நிறுவனங்களுக்குள்ளேயான கொடுக்கல்வாங்கல்களின் தரவு மற்றும் பயன்படுத்துநர் அணுகுமுறை என்பனவற்றின் ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாவர்.

**2.2 உண்மையான அல்லது ஐயத்திற்குரிய பாதுகாப்பு மீறல்கள்**

ஏதேனும் உண்மையான அல்லது ஐயத்திற்குரிய பாதுகாப்பு மீறல்கள் இருப்பின் இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்.

**2.3 மோசடி நடவடிக்கைகள்**

அ. பங்கேற்பாளர்கள், லங்காசெட்டில் முறைமையுடன் தொடர்பான மோசடியான நடவடிக்கைகளுக்கெதிராக அவர்களின் சொந்த முறைமைகள் பொருத்தமான பாதுகாப்பினை வழங்குவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ஆ. முறைமையுடன் தொடர்பான அனைத்து உண்மையான அல்லது ஐயத்திற்குரிய மோசடி நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

ஏதேனும் உண்மையான அல்லது ஐயத்திற்குரிய மோசடியின் மூலத்தினை புலனாய்வு செய்வதற்கும் அடை யாளம் காண்பதற்கும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது எவரேனும் பங்கேற்பாளர்களினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு ஒவ்வொரு பங்கேற்பாளரும் நியாயமான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும்.

**2.4 சுவிப்ற் வின் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள்**

சுவிப்ற் வின் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் சுவிப்ற் வின் கொப்பி சேர்விஸ் விபரணத்திலும் சுவிப்ற் பயன்படுத்துநர் கையேட்டின் வின் பாதுகாப்பு வழிகாட்டலிலும் விபரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி எல்கேபி மூடிய பயன்படுத்துநர் குழுமத்திற்கான தொடர்பு முறை முகாமைத்துவப் பிரயோகத்தினைப் பயன்படுத்துவதில்லை. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது சுவிப்ற் வின் வை-கொப்பி செய்திகளைப் பெறுவதற்கும் அனுப்புவதற்குமாக அதன் சொந்த வங்கி அடையாளப்படுத்துநர் குறியீட்டினை வைத்திருக்கிறது. இந்த வங்கி அடையாளப்படுத்துநர் குறியீடு வேறு எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படமாட்டாது. இலங்கை மத்திய வங்கிக்கும் அதிலிருந்துமான வழமையான கொடுப்பனவுகள் இலங்கை மத்திய வங்கியின் சொந்த வங்கி அடையாளப்படுத்துநர் குறியீட்டினூடாக (CBCELKLX) பரிமாற்றப்படுகின்றன. எனினும், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை வங்கி அடையாளப்படுத்துநர் குறியீட்டு முகவரி, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையுடனான இருபுடை முதன்மைப் பரிவர்த்தனைகளுக்காகப் பங்கேற்பாளர்களினால் பயன்படுத்தப்படல் வேண்டும்.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை வங்கி அடையாளப்படுத்துநர் குறியீட்டு முகவரி CBCELKLA ஆகும்.

**2.5 லங்காசெகுயர் முறைமைக்கான வங்கி அடையாளப்படுத்துநர் குறியீட்டு முகவரி**

லங்காசெகுயர் முறைமை மற்றும் பங்கேற்பாளர்களுக்குமிடையிலான செய்திகளைப் பரிமாற்றிக் கொள்வதற் காகத் தனியான வங்கி அடையாளப்படுத்துநர் குறியீட்டு முகவரியொன்று பேணப்படுகிறது.

லங்காசெகுயர் முறைமையின் வங்கி அடையாளப்படுத்துநர் குறியீடு என்பது CBCELKLA ஆகும்.

**2.6 தொடர்பு முகாமைத்துவப் பிரயோகம்**

தொடர்பு முகாமைத்துவப் பிரயோகத்தின் கீழ், பங்கேற்பாளர்கள், லங்காசெகுயர் முறைமை வங்கி அடை யாளப்படுத்துநர் குறியீட்டுடன் சட்டபூர்வமான அதிகாரம் வழங்கலை ஒரு தடவை மாத்திரம் பரிமாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். புதிய பயன்படுத்துநர் "பெற்றுக் கொள்வதற்கான அதிகாரமளித்தல்" இற்கான கோரிக்கையினை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கோரிக்கை கிடைக்கப் பெற்றதும் இலங்கை மத்திய வங்கி "பெற்றுக் கொள்வதற்கான அதிகாரத்தினை" வழங்கும். இது வழங்குநருக்கு "அனுப்புவதற்கான அதிகாரம்" வசதியை இயலச்செய்யும். பெறப்பட்ட அதிகார மளித்தல்கள், எவரேனும் ஒரு தரப்பினர் அத்தகைய அதிகார வழங்கலை மீளப்பெறும் வரை அல்லது அதனை நீக்கிவிடும் வரை அது செயற்பாட்டிலிருக்கும்.

**2.7 லங்காசெட்டில் உலாவி இடைமுகப் பாதுகாப்பு**

இலங்கை மத்திய வங்கி வலையமைப்பு பரந்த பிரதேச வலையமைப்பூடாக லங்காசெட்டில் முறைமையினை அணுகுவதற்காக பங்கேற்பாளர்கள் பணியிட உலாவி இடைமுகங்களைப் பயன்படுத்துகின்றனர். வலை யமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள உலாவி இடைமுகங்கள் லங்காசெட்டில் முறைமையின் விசாரணை மற்றும் காத்திருப்பு முகாமைத்துவம் என்பனவற்றிற்கு உதவியளிக்கின்றன.

லங்காசெட்டில் முறைமையானது பங்கேற்பாளர்களின் நிறுவனங்களிலுள்ள பொருத்தமான அதிகாரிகளினால் கட்டுப்படுத்தப்படக்கூடிய பயன்படுத்துநர் – அடையாள, வழிகள் கடவுச்சொல் மற்றும் தொழிற்பாட்டு வரையறைகளுடன் அணுகத்தக்க பாதுகாப்பினை வழங்குகிறது. அவர்களது நிறுவனங்களுக்குள் பொருத்தமான

பயன்படுத்துநர் அணுகுவழிகள் மற்றும் கடவுச்சொல் பாதுகாப்பு என்பனவற்றை நிறுவுவதும் நடைமுறைக் கிடுவதும் ஒவ்வொரு பங்கேற்பாளரினதும் பொறுப்பாகும்.

### 2.8 உலாவி இடைமுகப் பயன்படுத்துநர் அணுகும்தன்மை கட்டுப்பாடுகளைப் பேணல்

இலங்கை மத்திய வங்கி, பங்கேற்பாளர்கள் நிறுவனங்களுக்குள் பயன்படுத்துநருக்கான பயன்படுத்துநர் அணுகுவழி உரிமைகளை குறித்தொதுக்கின்றது. இலங்கை மத்திய வங்கியினால் நிறுவப்பட்டுள்ள தனியான பயன்படுத்துநர் தோற்றப்பாடு, ஒவ்வொரு பயன்படுத்துநராலும் அணுகப்படக்கூடிய முறைமையின் தொழிற்பாடுகளை வரையறுக்குகின்றது. பயன்படுத்துநர் அணுகும் உரிமைகளை உருவாக்குவதற்கான, நீக்குவதற்கான அல்லது மாற்றியமைப்பதற்கான விண்ணப்பங்கள் எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

பயன்படுத்துநரால் உலாவி இடைமுகம் மோசடியாக அல்லது தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதென சந்தேகம் எழும் சந்தர்ப்பத்தில், லங்காசெட்டில் உதவிக்கருமபீடத்திற்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பிரச்சனைக்குரிய பயன்படுத்துநர் உரிமையினை இரத்துச் செய்வதற்கான ஒழுங்கு களையும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 2.9 ஒருமைப்பாடு மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மை

பங்கேற்பாளர்கள் அவர்களது சொந்த உள்ளக லங்காசெட்டில் செயன்முறைப்படுத்தல் முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் ஒருமைப்பாட்டினையும் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு பொறுப் புடையவர்களாவர். பங்கேற்பாளர்கள் மற்றைய விடயங்களுடன் பின்வருவனவற்றையும் பேணுதல் வேண்டும்:

- பின்னூட்டல் மற்றும் தரவு நகலாக்கம்
- அவசர திட்டங்கள்
- பௌதீக ரீதியான இடப் பாதுகாப்பு
- முறைமையின் செயலிழக்கும் நேரம், பிரச்சனையினைக் கண்காணித்தல் மற்றும் தீர்வு நடைமுறைகள்
- முறைமை இயலாற்றல்; அத்துடன்
- மோசடித் தடுப்பு நடவடிக்கைகள்

லங்காசெட்டில் முறைமை தொடர்பில் அவர்களது தொழிற்பாடுகளின் ஒருமைப்பாடு மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு உள்ளக முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் போதுமானதாக உள்ளனவா என்பதனைத் தீர்மானிக்கும் நோக்குடன் பங்கேற்பாளரின் பணிமனைகளில் பரிசோதனையொன்றினை எந்த நேரத்திலும் நடத்துவதற்கு மத்திய வங்கி உரித்துடையதாகும். பங்கேற்பாளர்கள் அவர்களது பிரதானமான மற்றும் இரண்டாவது அமைவிடங்கள் தற்பொழுது அமைந்துள்ள இடங்களை மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

### 2.10 லங்காசெட்டில் வசதிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் அல்லது பகிர்ந்து கொள்ளுதல்

இலங்கை மத்திய வங்கி முன் சம்மதம் இல்லாமல் பங்கேற்பாளர்கள் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல், பகிர்ந்து கொள்ளுதல் அல்லது வேறு வகையில் அவர்களது லங்காசெட்டில் வசதிகளை அணுகு வதற்கு அல்லது தொழிற்படுத்துவதற்கு மூன்றாந்தரப்பினரை அனுமதிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளக் கூடாது.

## 3. எதிர்பாராத நிகழ்வுகள்

### 3.1 எதிர்பாராத நிகழ்வொன்றின் வரைவிலக்கணம்

எதிர்பாராத நிகழ்வு என்பது லங்காசெட்டில் முறைமையின் வழமையான தொழிற்பாடுகளை தடங்கலுறச் செய்கின்ற அல்லது தடங்கலுறச் செய்வதற்கான சாத்தியங்களைக் கொண்ட ஏதேனும் நிகழ்வுகள். ஆறு முக்கிய வகைகளைக் கொண்ட சாத்தியமான எதிர்பாரா நிகழ்வுகள் எதிர்பார்க்கப்படுகின்றன:

(i) தனிப்பட்ட பங்கேற்பாளர் நிகழ்வு
(ii) சுவிப்ற் நிகழ்வு
(iii) லங்காசெட்டில் கணனி அடிப்படையாகக் கொண்ட முனைக்கோடி நிகழ்வு
(iv) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை பிரயோக நிகழ்வு
(v) லங்காசெகுயர் முறைமை பிரயோக நிகழ்வு
(vi) இயற்கை அனர்த்தம் உள்ளிட்ட ஏனைய எதிர்பாரா நிகழ்வுகள்

ஒவ்வொரு வகை நிகழ்வும் பின்வரும் பிரிவுகளில் ஆராயப்படுகின்றன.

விசாரணை, காத்திருக்கும் முகாமைத்துவம் அல்லது பெறுமதியற்ற செய்திப் பரிவர்த்தனை நோக்கங்களுக்காக லங்காசெட்டில் உலாவி இடைமுக வசதியைப் பயன்படுத்தி மத்திய முறைமையினை அணுகுவதற்கு இயலாமல் இருப்பது எதிர்பாரா நிகழ்வொன்றில் உள்ளடக்கப்படமாட்டாது.

### 3.2 இலங்கை மத்திய வங்கியின் அனர்த்த மீட்பு வசதிகள்

இலங்கை மத்திய வங்கி, லங்காசெட்டில் முறைமைக்கும் அதன் சுவிப்ற் இணைப்புக்களுக்குமாக முழுமையான பின்னூட்டல் வசதிகளைப் பேணி வருகின்றது. பிரதான அமைவிடத்தில் திருத்தப்பட முடியாத பிழைகள் ஏற்படும் சந்தர்ப்பமொன்றில், இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளர்களுக்கான ஆலோசனைகளின் கீழ், லங்காசெட்டில் தொழிற்பாடுகளை அனர்த்த மீட்பு அமைவிடத்திற்கு நகர்த்தும்.

இலங்கை மத்திய வங்கியின் அனர்த்த மீட்பு அமைவிடத்திற்கு லங்காசெட்டில் தொழிற்பாடுகளை நகர்த்துவது அவசியமானது என நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில், எடுக்கப்பட வேண்டிய ஏதேனும் நடவடிக்கைகள் பற்றி பங்கேற்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். இது அனர்த்த மீட்பு அமைவிடத்திற்கு மாறிச் செல்வது பங்கேற்பாளர்களுக்குப் பெருமளவிற்கு வெளிப்படைத்தன்மையுடையதாக இருக்க வேண்டுமென்ற எண்ணமேயாகும். பங்கேற்பாளர்கள் அவர்களது உலாவி இடைமுகம் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அனர்த்த மீட்பு அமைவிடத்திற்கான சேவையகத்திலிருந்து புதிய புகுபதிகை அமர்வினை உருவாக்குதல் வேண்டும்.

### 3.3 தனிப்பட்ட பங்கேற்பாளர் நிகழ்வு

#### 3.3.1 முறைமைச் செயலிழப்பிற்கான ஆலோசனைகள்

கொடுப்பனவு செயன்முறைப்படுத்தல் மற்றும் ஏனைய லங்காசெட்டிலுடன் தொடர்பான செய்தி அனுப்பல்களைத் தடை செய்யும் எவையேறும் தொழில்நுட்பம் அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சனைகளைப் பங்கேற்பாளரொருவர் கொண்டிருக்குமிடத்து, அப்பிரச்சனை தெரியவந்ததிலிருந்து 15 நிமிடங்களுக்குள் இலங்கை மத்திய வங்கிக்கு அதனை அறிவித்தல் வேண்டும்.

பங்கேற்பாளர்கள் அவர்களது தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பாட்டு ஒழுங்குகளில் செய்யும் ஏதேனும் மாற்றங்களை இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

#### 3.3.2 ஏனைய பங்கேற்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்

முறைமையின் ஒட்டுமொத்த தொழிற்பாட்டினை நீண்ட காலத்திற்கு அல்லது அதிகளவிற்குத் தாமதப் படுத்தக்கூடிய விதத்தில் அல்லது தடங்கலை ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்களைக் கொண்டிருக்கு மிடத்து இலங்கை மத்திய வங்கி அதன் தற்றுணிபின் அடிப்படையில் ஏனைய பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கும். உ-ம்: நாள் இறுதியில் வெட்டு நேரத்தினை மூடுதல்.

ஏனைய ஒவ்வொரு பங்கேற்பாளரும் முடங்கிப் போன பங்கேற்பாளரின் சார்பில் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் அனுப்ப வேண்டுமா என்பது பற்றி அவற்றின் சொந்தத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

#### 3.3.3 உள்முகக் கொடுக்கல்வாங்கல்களைத் தொடர்ந்தும் செயன்முறைப்படுத்தல்

பங்கேற்பாளரின் சுவிப்ற் கணனியை அடிப்படையாகக் கொண்ட தள இடைமுகத்தில் செயலிழப்பு ஏற்படும் சந்தர்ப்பமொன்றில், லங்காசெட்டில் முறைமை ஏற்கனவே வைத்திருக்கப்படும் ஏதேனும் MT096 அறிவுறுத்தல்களை அல்லது அதன் பின்னர் பங்கேற்பாளர்களின் சார்பில் செய்யப்பட்ட சுவிப்ற் தீர்ப்பனவுக் கொடுப்பனவு தொடர்ந்தும் செயன்முறைப்படுத்தும் என்பதுடன் மற்றைய செய்திகள் சுவிப்ற்றுடனான தொடர்பூட்டல்களின் சுவிப்ற் நிலுவையிலுள்ள மீள்நிறுவுகைகளில் ஒன்றுசேர்க்கப்படும்.

#### 3.3.4 கணனியை அடிப்படையாகக் கொண்ட தளநிகழ்வு இணைப்பினை மீளநிறுவுதல்

பங்கேற்பாளர்கள் அவர்களது சுவிப்ற் கணனியை அடிப்படையாகக் கொண்ட தள இணைப்பினை மீளநிறுவுவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

#### 3.3.5 கையினால் செய்யப்படும் நிதிய மாற்றல்கள்

பங்கேற்பாளரொருவர் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் ஏதேனும் அவசரமான கொடுப்பன வொன்றினைச் செய்யவிரும்புமிடத்து, இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பங்களுடன் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், பங்கேற்பாளரின் சார்பில் கொடுப்பனவொன்றினைச் செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளருக்கு, பங்கேற்பாளர் கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும். அத்தகைய எழுத்து மூலமான கோரிக்கை, குறிப்பிட்ட வியாபார நடவடிக்கைக்கான குறித்துரைக்கப்பட்ட வெட்டுநேரத்திற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்னதாக அல்லது லங்காசெட்டில் முறைமையின் வியாபாரம் மூடப்படும் நேரத்திற்கு முன்னதாகப் பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினை வந்தடைதல் வேண்டும்.

இலங்கை மத்திய வங்கி அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கான அல்லது அத்தகைய கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக லங்காசெட்டில் முறைமையினைத் திறந்து வைப்பதற்கான பொறுப்புக்கள் எதனையும் ஏற்றுக்கொள்ளாது.

**3.3.6 கையினால் செய்யப்படும் பிணையங்களின் மாற்றல்கள்**

லங்காசெகுயர் முறைமையில் பங்கேற்பாளரொருவர் ஏதேனும் முக்கியமான பிணைய மாற்றலைச் செய்வதற்குக் கேட்டுக் கொள்ளுமிடத்து, **இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட படிவமொன்றில்** எழுத்து மூலமாக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களக் கண்காணிப்பாளருக்குப் பங்கேற்பாளரொருவர் கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும். அத்தகைய பிணையங்கள் தொடர்பிலான அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் கட்டுப்பாடற்ற விநியோகமாக அல்லது கட்டுப்பாடற்ற பெறுகை வகையாக இருத்தல் வேண்டுமென்பதுடன் இவை பிணையங்களின் நகர்வுடன் மாத்திரம் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள இணைத்தரப்புப் பங்கேற்பாளர்கள் பிணையங்களை மாற்றல் செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் கண்காணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும். ஏதாவதொரு காரணத்தினால் முறைமை பழுதடைந்த பங்கேற்பாளர், அத்தகைய இணைத்தரப்புப் பங்கேற்பாளர்/ பங்கேற்பாளர்களை இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பிணையங்களை மாற்றல் செய்வதற்கான கோரிக்கையினை கண்காணிப்பாளர், பொதுப்படுகடனிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

கையினால் செய்யப்படும் மாற்றல்கள் தொடர்பிலான அத்தகைய எழுத்து மூலமான அத்தகைய கோரிக்கைகளைக் கண்காணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்களம் லங்காசெட்டில் முறைமையின் வியாபாரம் மூடப்படும் நேரத்திற்கு 45 நிமிடங்கள் முன்னதாகப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் ஏதேனும் அத்தகைய கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

இலங்கை மத்திய வங்கி அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கோ அல்லது அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் விதத்தில் லங்காசெட்டில் முறைமையினைத் திறந்து வைத்திருப்பதற்கோ பொறுப்புடையதாகமாட்டாது.

**3.4 சுவிப்ற் நிகழ்வுகள்**

சுவிப்ற் நீண்ட காலம் தொழிற்படாதிருக்கும் சந்தர்ப்பமொன்றில், இலங்கை மத்திய வங்கி, ஆலோசனை மேற்கொண்டு பங்கேற்பாளர்களின் தொடர்பு முகவரிகளுக்கு அறிவிக்கும். பங்கேற்பாளர்கள் நிகழ்வின் நிலை தொடர்பிலான உரைச் செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களின் உலாவி இடைமுகங்கள் நுழையும் விதத்தில் திறந்து வைத்திருத்தல் வேண்டும்.

வியாபார நாளின் எஞ்சிய பகுதிக்கு தொடர்பூட்டல்களைத் திருத்தியமைக்க முடியாத நிலையில் சுவிப்ற் காணப்படுகின்றது என சுவிப்ற் மற்றும் பங்கேற்பாளர்களுடனான ஆலோசனைகளைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கி கருதுகின்ற சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கி எஞ்சிய நாளுக்காகப் பிரயோகிக்கப்பட வேண்டிய நடைமுறைகளை அறிவிக்கும்.

சுவிப்ற்றினை நீண்ட காலத்திற்கு திருத்திக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில், பங்கேற்பாளர்கள் மாற்று பரிவர்த்தனைக் கொடுப்பனவு முறைமைகளை அதாவது கையினால் செய்யப்படும் நிதிய மாற்றல்கள், கையினால் செய்யப்படும் பிணைய மாற்றல்கள், வங்கிக் காசோலை, இருபுடை பரிவர்த்தனைகள் போன்ற வற்றைப் பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன், தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்தலும் வேண்டும். இலங்கை மத்திய வங்கி பிரயோகிக்கப்பட வேண்டிய மாற்று ஏற்பாடுகள் பற்றி பங்கேற்பாளர்களுக்கு ஆலோ சனைகளை வழங்கும்.

**3.5 லங்காசெட்டில் கணனியை அடிப்படையாகக் கொண்ட தளநிகழ்வு**

பிரதான மற்றும் அனர்த்த மீட்பு அமைவிடம் ஆகிய இரண்டு இடங்களிலுமுள்ள லங்காசெட்டில் சுவிப்ற் இடைமுகங்களில் நீண்ட காலத் தொழிற்படாத்தன்மை காணப்படும் சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கி ஆலோசனைகளை மேற்கொண்டு பங்கேற்பாளர்களின் தொடர்புகளுக்கு அறிவிக்கும். பங்கேற்பாளர்கள் நிகழ்வின் நிலை தொடர்பான உரைச் செய்திகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் அவர்களது உலாவி இடைமுகங்களில் நுழையும் விதத்தில் திறந்து வைத்திருத்தல் வேண்டும்.

வியாபார நாளின் எஞ்சிய பகுதிக்கு தொடர்பூட்டல்களைத் திருத்தியமைக்க முடியாத நிலையில் சுவிப்ற் காணப்படுகின்றது என இலங்கை மத்திய வங்கி கருதுகின்ற சந்தர்ப்பத்தில், சுவிப்ற் மற்றும் பங்கேற்பாளர்களுடனான ஆலோசனைகளைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கி எஞ்சிய நாளுக்காகப் பிரயோகிக்கப்பட வேண்டிய நடைமுறைகளை அறிவிக்கும்.

லங்காசெட்டில் கணனியை அடிப்படையாகக் கொண்ட தளத்தினை நீண்ட காலத்திற்கு திருத்திக் கொள்ளமுடியாத சந்தர்ப்பத்தில், பங்கேற்பாளர்கள் மாற்று பரிவர்த்தனைக் கொடுப்பனவு முறைமைகளை அதாவது கையினால் செய்யப்படும் நிதிய மாற்றல்கள், கையினால் செய்யப்படும் பிணைய மாற்றல்கள், வங்கிக் காசோலை, இருபுடை பரிவர்த்தனைகள் போன்றவற்றைப் பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்தலும் வேண்டும். இலங்கை மத்திய வங்கி பிரயோகிக்கப்பட வேண்டிய மாற்று ஏற்பாடுகள் பற்றி பங்கேற்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கும்.

### 3.6 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை பிரயோக நிகழ்வு

லங்காசெட்டில் முறைமையானது பங்கேற்பாளர் கணக்குகளுக்கு கொடுக்கல்வாங்கல்களைச் செயன்முறைப்படுத்த முடியாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பிரயோகம் நிகழ்கிறது. செயற்படாத பழுதடையும் தன்மை சுவிப்ற் இடைமுகத்திலும் பார்க்க அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பிரயோகத்திலேயே ஏற்படும் கணனியை அடிப்படையாகக் கொண்ட தளம் மற்றும் லங்காசெட்டில் பிரயோகம் இரண்டும் தொடர்புபடுகின்ற முறைமை நிகழ்வு இம்முறைமை விதிகளுக்கிணங்க கையாளப்படும்.

முதன்மை மற்றும் அனர்த்த மீட்பு அமைவிடம் ஆகிய இரண்டு இடங்களிலுமுள்ள அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் திருத்த முடியாத நீண்ட கால பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளர்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டு அதனை அறிவிக்கும்.

எஞ்சிய தொழிற்பாட்டு நாளுக்கான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைத் தொழிற்பாடுகளை மீண்டும் தொழிற்படுத்த முடியாது என இலங்கை மத்திய வங்கி கருதுமிடத்து, இலங்கை மத்திய வங்கி அதிகாரபூர்வமான தொலைபேசி அழைப்பொன்றின் மூலம் (வின் கொப்பி சேர்விஸ் விபரணத்தின் சி.2.3 மற்றும் பி8 இன்படி) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் மூடிய பயன்படுத்துநர் குழும தொழிற்பாட்டினை ''மூடப்பட்டுள்ளது'' முறைக்குத் திருத்திக் கொள்ளுமாறு சுவிப்றினைக் கேட்டுக் கொள்கின்ற அவசர கோரிக்கை யொன்றினை சுவிப்றுக்குச் சமர்ப்பிக்கும். இது அவசர அழைப்பின் உறுதிப்படுத்தலிலிருந்து 45 நிமிடங்கள் வரை எடுக்கலாம். ''மூடப்பட்டுள்ளது'' முறைக்கு மாற்றல் செய்யப்பட்டதும் சுவிப்ற், பங்கேற்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேலதிகக் கொடுப்பனவு அறிவுறுத்தல்களை MT019 நிறுத்தல் அறிவித்தலுடன் நிறுத்தும்.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் நீண்ட காலத்திற்குத் திருத்தப்படமுடியாத பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில், பங்கேற்பாளர்கள் கொடுப்பனவு பரிவர்த்தனைகளின் மாற்று ஏற்பாடுகளை அதாவது வங்கிக் காசோலைகள், இருபுடை பரிவர்த்தனைகள் போன்றவற்றினைப் பயன்படுத்தலாம் என்பதுடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்தலும் வேண்டும்.

### 3.7 எதிர்பாராத நிகழ்வுகளைப் பதிவு செய்தல்

ஒவ்வொரு பங்கேற்பாளரும் அனைத்து எதிர்பாராத சம்பவங்கள் மற்றும் முறைமைகள் தொடர்பான பிரச்சனை களுக்காக எழுத்து மூலமான பதிவேடொன்றினைப் பேணுதல் வேண்டும். இப்பதிவுப் பிரச்சனை இடம்பெற்ற திகதி, நேரம், அதன் தன்மை அதனைத் திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் திருத்தியமைக் கப்பட்ட நேரம் போன்ற விபரங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கி இப்பதிவேடு களை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்யும் பிரதிகள் லங்காசெட்டில் உதவிக்கருமபீட மேற்பார்வை யாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

### 3.8 ஏனைய எதிர்பாராத நிகழ்வுகள்

தோன்றக்கூடிய மற்றைய எதிர்பாராத நிகழ்வுகளை விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் ஆராய்தல் வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளில், இலங்கை மத்திய வங்கி, பின்வருவன உட்பட அது அவசியமானது எனக் கருதுகின்ற அத்தகைய வழிமுறைகளை மேற்கொள்ளும்.

- லங்காசெட்டிலின் தொழிற்படுகின்ற நாட்களை நீடித்தல் அல்லது குறைத்தல்
- முறைமையின் தொழிற்பாடுகளை இடைநிறுத்தல்; அத்துடன்
- இம்முறைமை விதிகளின் கீழ் முறைமையின் தொழிற்பாட்டு நடைமுறைகளை இடைநிறுத்துதல்.

தொழிற்பாடுகளை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளர்களுடனான தொடர்புகளைத் தொடர்ந்தும் வைத்திருக்க முயற்சிக்குமென்பதுடன் அறிவுறுத்தல்களை வழங்கும்.

குறைந்தபட்ச தாமதத்துடன் தொழிற்பாடுகளை மீளத்தொடங்குவதற்கு அவசியமான அத்தகைய அவசரகால வழிமுறைகளை இலங்கை மத்திய வங்கி நிறைவேற்றும். இவ்வழிமுறைகளை நிறைவேற்றுவதில் பங்கேற்பாளர்கள் இலங்கை மத்திய வங்கியுடன் ஒத்துழைத்தல் வேண்டும்.

### 3.9 எதிர்பாராத ஏற்பாடுகளைப் பரீட்சித்தல்

இலங்கை மத்திய வங்கி அதன் சொந்த எதிர்பாராத ஏற்பாடுகளைக் காலாந்தர அடிப்படையில் பரீட்சிக்கும். அனைத்துப் பங்கேற்பாளர்களும் இச்செயன்முறைக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் பங்கேற்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பங்கேற்பாளர்கள் அவர்களது சொந்த எதிர்பாராத ஏற்பாடுகளின் பரீட்சிப்புக்களை நடத்துவதற்காக அவர்களது சொந்தக் காப்பு அமைவிடங்களையும் முறைமைகளையும் தேவையான விதத்தில் இலங்கை மத்திய வங்கியுடன் ஒழுங்குசெய்தல் வேண்டும். குறைந்தபட்சமொன்றாக, முறைமையில் தொழிற்படுத்துவதற்கான பங்கேற்பாளரின் இயலுமையினைப் பாதிக்கக்கூடிய ஏதேனும் பரீட்சிப்பு பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

அவர்களது காப்பு வசதிகளையும் எதிர்பாராத ஏற்பாடுகளையும் பரீட்சிக்குமாறு இலங்கை மத்திய வங்கி தனிப்பட்ட பங்கேற்பாளர்களைக் கோரலாம்.

### 3.10 தொடர்பு மையங்கள்

செயன்முறைப்படுத்தல் தொடர்பான பிரச்சனைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் விசாரணைகள் அல்லது தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான பதிலிறுப்புக்களுக்காக முதலாவது தொடர்பு மையமொன்றினை ஒவ்வொரு பங்கேற்பாளரும் பிரேரித்தல் வேண்டும். முதலாவது தொடர்பு மையம் கிடைக்காத சந்தர்ப்பத்தில் செயற்படுவதற்காக இரண்டாவது தொடர்பு மையமொன்றினை ஒவ்வொரு பங்கேற்பாளரும் பிரேரித்தல் வேண்டும். இது பற்றி மத்திய வங்கிக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். தொடர்பு மையம் தொடர்பான விபரங் களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அது பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு பங்கேற்பாளர்கள் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

### 3.11 நிருவாகச் செய்திகள்

இலங்கை மத்திய வங்கியினால் அனுப்பப்பட்ட நிருவாகச் செய்திகளைப் பங்கேற்பாளர்கள் உடனடியாகக் கவனித்தல் வேண்டும். அத்தகைய செய்திகளைப் பெறுவதற்கும் அது தொடர்பிலான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பங்கேற்பாளர்கள் தவறுவதன் காரணமாக தோன்றுகின்ற எந்தவொரு விதமான இழப்பிற்கும் இலங்கை மத்திய வங்கி பொறுப்புடையதாகமாட்டாது.

### 3.12 பங்கேற்பாளரை அல்லது கணக்கினை இடைநிறுத்துதல்

இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளரை அல்லது பங்கேற்பாளரின் கணக்கினை முறைமை அந்தஸ்திலிருந்தும் இடைநிறுத்துவதற்கான தற்றுணிபினைக் கொண்டிருக்கிறது. இதனைப் பல்வேறு சூழ்நிலைகளின் போதும் பயன்படுத்த முடியும். எனினும், உடனடி நடவடிக்கை தேவைப்படும் எதிர்பாராத சூழ்நிலையிலேயே உடைமையாகப் பயன்படுத்தப்படுகிறது. தற்காலிக இடைநிறுத்தல் எதிர்பாராத நிகழ்வுகளின் காரணமாக தோன்றக்கூடிய ஏதேனும் திரவத்தன்மைப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு மத்திய வங்கியை அனுமதிக் கிறது. எதிர்பாராத சூழ்நிலைகளுக்குத் தீர்வு காணப்பட்டதும் இடைநிறுத்தல்கள் உடனடியாக அகற்றப்படும்.

### 3.13 தவணை தவறிய பங்கேற்பாளர் நிலை

இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளரொருவருக்குத் தவணை தவறியவர் என்ற நிலையொன்றினை வழங்கலாம். இது பங்கேற்பாளரிடமிருந்தான மற்றும் அவருக்கான அனைத்துக் கொடுப்பனவுகளையும் நிறுத்திவிடும். பங்கேற்பாளருக்கு தவணை தவறியவர் என்ற நிலை வழங்கப்படும் வேளையில் முறைமை யிலுள்ள பங்கேற்பாளருக்கான அல்லது அவரிடமிருந்தான ஏற்கனவே முறைமையிலுள்ள தீர்ப்பனவு செய்யப்படாத கொடுக்கல்வாங்கல்களும் உடனடியாக நிராகரிக்கப்படும். பொறுப்பாணை உடன்படிக்கையில் விபரிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளின் போது, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ லங்காசெகுயர் வசதிகளை திரும்பப் பெற்றுக்கொள்ளல் நிகழக்கூடும்.

## 4. முறைமை நிருவாகம் மற்றும் பயன்படுத்துநர் உதவி

### 4.1 சுவிப்ற் பயன்படுத்துநர் உதவி

பங்கேற்பாளர்கள் சுவிப்ற்றுடன் தொடர்பான பிரச்சனைகளை அனுபவிக்கையில், சுவிப்ற் பயன்படுத்துநர் கைநூலிற்கிணங்க அவர்களது வழமையான சுவிப்ற் வாடிக்கையாளர் உதவி நிலைய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### 4.2 லங்காசெட்டில் உதவிக்கருமபீடம்

இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளர்கள் லங்காசெட்டில் முறைமையினைப் பயனப்படுத்தவும் அவர்கள் எதிர்நோக்கும் சேவை இடர்ப்பாடுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்குமாக லங்காசெட்டில் உதவிப்பீடத்தினை நிறுவிப் பேணி வருகின்றது. உதவிக்கருமபீடம் லங்காசெட்டில் தொழிற்படுகின்ற நாள் முழுவதும் கிடைக்கத் தக்கதாக இருக்கும். உதவிக்கருமபீடத்தினைத் தொடர்பு கொள்ளும் விபரங்கள் இற்றைப்படுத்தப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் பங்கேற்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## 5. பங்கேற்பாளர்களுக்கிடையேயான பிணக்குகள்

முறைமையில் ஏதேனும் கொடுக்கல்வாங்கலை சட்ட ரீதியானதாக, செல்லுபடியானதாக அல்லது நடைமுறைப்படுத்து வதற்கு அல்லது அத்தகைய கொடுக்கல்வாங்கலை ஒப்பந்த ரீதியாக செல்லுபடியற்றதாக அல்லது செல்லுபடி யற்றதாகக்கூடியது என்பதனைத் தீர்மானிக்கின்ற விதத்தில் மத்திய வங்கி எந்தவொரு கடமையினையும் கொண்டிருக்காது. பிணக்குகளைத் தவிர்ப்பதற்கு, அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் சட்ட ரீதியாக செல்லுபடி யானவை என்பதனையும் நடைமுறைப்படுத்தத்தக்கவை என்பதனையும் பங்கேற்பாளர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் சட்ட ரீதியானவை, செல்லுபடியானவை மற்றும் நடைமுறைப் படுத்தத்தக்கவை எனக் கருதுவதற்கான உரித்தினை மத்திய வங்கி கொண்டிருக்கும்.

ஏதேனும் தவறுகள், விடுகைகள், தவறுகை/ பிழைகள், மோசடி, திருட்டு அல்லது முறைமையினை அல்லது சுவிப்ற்றினை பிழையாகப் பயன்படுத்தல் போன்ற காரணங்களினால் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை நிராகரிப்பதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கு எந்தவொரு பங்கேற்பாளருக்குமான எந்தவொரு கடமையையும் இலங்கை மத்திய வங்கி கொண்டிருக்காது.

பங்கேற்பாளர்களிடையேயான அல்லது பங்கேற்பாளர்களுக்கும் அவர்களது வாடிக்கையாளர்களுக்குமிடையேயான ஏதேனும் பிணக்குகளின் ஏதேனும் கோரல்களினைத் தீர்மானிப்பதற்கான அல்லது ஏதேனும் கோரல்களை உறுதி செய்வதற்கு முறைமையின் தொழிற்பாடுகளைச் சீராக்குவதற்கான எந்தவொரு கடமையினையும் இலங்கை மத்திய வங்கி கொண்டிருக்காது.

முறைமையின் பங்கேற்பாளர்களிடையே ஏதேனும் பிணக்கு அல்லது வேறுபாடு தோன்றுகின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய பிணக்குகளின் அல்லது வேறுபாடுகளுக்குரிய தரப்பினர்கள் பரஸ்பர கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் அல்லது மத்தியஸ்தம் ஊடாக அத்தகைய பிணக்கினை அல்லது வேறுபாட்டினை சுமூகபூர்வமாகத் தீர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும். இவ்விடயம் சுமூகமாகத் தீர்க்கப்பட முடியாதிருப்பின், இதனை நடுவத் தீர்ப்பகமாக அல்லது நீதிமன்றத்தின் வழக்கூடாகத் தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய நடுவத்தீர்ப்பகத்தின் தீர்மானம் தரப்பினர்களைப் பணிப்பதாக இருத்தல் வேண்டும்.

சந்தேகத்தினைத் தவிர்ப்பதற்காக, பங்கேற்பாளரின் ஒழுங்குமுறைப்படுத்துநர் அல்லது மேற்பார்வை செய்பவர் என்ற இலங்கை மத்திய வங்கியின் இயலாற்றலின் அடிப்படையில் எந்தவொரு சட்டத்தின் கீழும் இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்படக்கூடிய ஏதேனும் நடவடிக்கை அல்லது எடுக்கப்படக்கூடிய அர்த்தத்திலிருந்து தோன்றுகின்ற பிணக்கொன்றுக்கு இவ்வேற்பாடு பிரயோகிக்கப்படலாகாது.

## 6. முறைமை மாற்றங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை மாற்றுதல்

### 6.1 முறைமைக்கான நிறுவுகைகள், மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்கள்

பின்வரும் நோக்கங்களுக்காக இலங்கை மத்திய வங்கி அவசியமானது எனக் கருதுகின்றவிடத்து, விடயத்தினைப் பொறுத்து, விதிக்கத்தக்க கட்டணங்களைச் சீராக்குவதனூடாகப் அத்தகைய மாற்றங்களை அல்லது மேம்பாடுகளுக்காக ஏற்பட்ட செலவினைப் பங்கேற்பாளரிடமிருந்து அல்லது பங்கேற்பாளர் களிடமிருந்து இலங்கை மத்திய வங்கி மீண்டும் ஈடு செய்துகொள்ளும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அது ஸ்தாபிதங்கள், மாற்றங்கள் அல்லது முறைமைக்கான முன்னேற்றங்களை நடைமுறைப்படுத்தும்:

(அ) வடிவமைக்கப்பட்ட விதத்தில் முறைமையானது தொடர்ந்தும் செயலாற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு; அல்லது

(ஆ) பங்கேற்பாளர்களின் நியாயமான மேலதிகத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு; அல்லது

(இ) நேரடித் தொழிற்பாடுகளின் ஆரம்பத் திகதியன்று முறைமையின் தொழிற்பாட்டு மட்டத்திலிருந்து முறைமையின் தொழிற்பாட்டுத்தன்மையினை மாற்றுவதற்கு.

முறைமையானது அதன் வடிவமைப்பதற்கிணங்க தொடர்ந்தும் செயலாற்றுகின்றமையினை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி ஸ்தாபிதம் தேவையானது என்ற கருத்தினைக் கொண்டிருக்குமிடத்து பங்கேற்பாளர்களுடன் ஆலோசிப்பதற்காக நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளும். எனினும், ஸ்தாபிதம் அவசியமாகத் தேவைப்படுவதாகவும் அவ்வாறான ஸ்தாபிதத்தினை நடைமுறைப்படுத்துவதில் தாமதமும் அது எவரேனும் பங்கேற்பாளருக்கு பெரும் வசதியீனங்களையும் ஏற்படுத்துமெனக் கருதப்படுமிடத்து அது பங்கேற்பாளர்களுடன் ஆலோசிக்க வேண்டுமென்ற கடப்பாட்டினை மத்திய வங்கிக்கு ஏற்படுத்தாது.

### 6.2 லங்காசெட்டில் முறைமை மாற்றங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை மாற்றுதல்

பின்வரும் வழிகாட்டல்களுக்கு அமைவாக திட்டமிடப்பட்ட லங்காசெட்டில் மாற்றங்களை மத்திய வங்கி கட்டுப்படுத்தும்:

- திட்டமிடப்பட்ட முறைமை மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கி பங்கேற்பாளர்களுக்கு ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கும்
- பொருத்தமானவிடத்து, முறைமை விதிகளுக்கும் ஏனைய முறைமை ஆவணப்படுத்தல்களுக்கும் இணைக்கப்படுகின்ற திருத்தங்கள் வெளியிடப்படும்
- உற்பத்தி சூழ்நிலையொன்றின் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னதாக எந்தவொரு திருத்தமும் பரீட்சிக்கப் படும். அத்தகைய பரீட்சிப்புக்களை நடத்தும் பொழுது இலங்கை மத்திய வங்கிக்கு பங்கேற்பாளர்கள் உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படக்கூடும்.

### 6.3 சுவிப்ற் நியமங்களின் மாற்றங்கள்

இலங்கை மத்திய வங்கி, இனிவரும் சுவிப்ற் பிரயோகங்கள் மற்றும் நியமங்கள் தொடர்பான சுவிப்ற்றின் முன்னேற்றகரமான தகவல்களை மீளாய்வு செய்யும். இலங்கை மத்திய வங்கி இனிவரும் மாற்றங்கள் லங்காசெட்டிலின் தொழிற்பாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்துமா என்பது பற்றித் தீர்மானிக்கும். இலங்கை மத்திய வங்கி இம்மாற்றங்கள் பற்றி பங்கேற்பாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கும் என்பதுடன் பங்கேற்பாளர்களினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆலோசனை வழங்கும். பங்கேற்பாளர்கள் லங்காசெட்டில் முறைமையின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் சுவிப்ற்றின் ஏதேனும் மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

## 7. கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள்

இலங்கை மத்திய வங்கி, கட்டணங்களையும் விதிப்புக்களையும் கணிப்பதுடன் பொறுப்பாணை உடன்படிக்கைக் கிணங்க பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்கில் இக்கட்டணங்களை விதிக்கிறது. இலங்கை மத்திய வங்கி லங்காசெட்டில் முறைமைக்கு ஏற்புடைத்தான கட்டணங்களையும் விதிப்புக்களையும் அதன் ஏக தற்றுணிபின் அடிப்படையில் மாற்றுவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கிறது. திருத்தப்பட்ட கட்டணங்களும் விதிப்புக்களும் அத்தகைய திருத்தங்கள் நடைமுறைக்குவரும் திகதிக்குக் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்னதாக பங்கேற் பாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

விதிப்புக்கள் ஒவ்வொரு கலண்டர் மாதத்தின் இறுதியிலும் கணிக்கப்படுவதுடன் அடுத்துவரும் மாதத்தின் மூன்றாவது வேலை நாளன்று பங்கேற்பாளரின் தீர்ப்பனவுக் கணக்குகளில் பற்று வைக்கப்படும்.

தொடர்பான தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைப்பதற்கு முன்னதாக லங்காசெட்டில் முறைமையின் விதிப்புக்கள் தொடர்பான விபரங்களைத் தருகின்ற விபரப்பட்டியலொன்று பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும்.

## இணைப்புக்கள்

### பொருளடக்கம்


| | |
|---|---|
| **இணைப்பு அ** | |
| பங்கேற்பாளர்களை நியமித்தல் | **73A** |
| **இணைப்பு ஆ** | |
| இடைநிறுத்தல் அறிவித்தல்கள் | **75A** |
| **இணைப்பு இ** | |
| முதலீட்டாளர் வகைப்படுத்தல் - நன்மைபெறும் உரிமையாளர் வகைகள் | **76A** |
| **இணைப்பு ஈ** | |
| பங்கேற்பாளர் வங்கி அடையாளப்படுத்துனர் குறியீடுகள் | **77A** |


**இணைப்பு அ**

**பங்கேற்பாளர்களை நியமித்தல்**

**உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் 8(1)ஆம் பிரிவு மற்றும் பதிவுசெய்யப்பட்ட இருப்புக்கள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 21இ(2)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய லங்காசெட்டில் முறைமையில் நேரடிப் பங்கேற்பாளர்களாக மற்றும் வணிகர்கள் நேரடிப் பங்கேற்பாளர்களாக உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை நியமித்தல்**

1. **தெரிவுசெய்வதற்கான பிரமாணம்:**

(அ) நேரடிப் பங்கேற்பாளர்களாக மற்றும் வணிகர்கள் நேரடிப் பங்கேற்பாளர்களாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளைத் தெரிவுசெய்வதற்கான பிரமாணம்:

(i) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியின் நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மை

விண்ணப்பிக்கும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கியுடன் தொடர்புடைய பின்வரும் விகிதங்களின் இரண்டு ஆண்டு சராசரிகளைப் பயன்படுத்துவதன் மூலம் இது அளவிடப்படுவதுடன் உரிமம் பெற்ற சிறப் பியல்பு வாய்ந்த வங்கித்துறை சராசரியானது ஒப்பீட்டிற்கான அடித்தள அளவுக்குறியீடாகக் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

- ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம்/ இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்
- மொத்தச் செயற்படாக் கடன் விகிதம்
- தேறிய செயற்படாக் கடன் விகிதம்
- நியதிச் சட்ட திரவச் சொத்து விகிதம்
- பங்குரிமை மீதான இலாபம்
- சொத்துகள் மீதான இலாபம்
- அலுவலர் செலவு விகிதம் (ஆளணிச் செலவுகள்/ தொழிற்படுத்தல் செலவுகள்)
- தேறிய வருமான விகிதத்திற்கான தொழிற்படுத்தல் செலவு (வினைத்திறன் விகிதம்)

(ii) உள்நாட்டு தரப்படுத்தல் அந்தஸ்து

விண்ணப்பிக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கியானது ஏற்றுக்கொள்ளத்தக்க தரப்படுத்தல் முகவராண்மையொன்றிடமிருந்து தரப்படுத்தல் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் (பிச் றேட்டிங் லிமிடெட், லங்கா றேட்டிங் ஏஜென்சி அல்லது ஏதேனும் பன்னாட்டு தரப்படுத்தல் முகவராண்மை).

(iii) இலங்கை மத்திய வங்கி திருப்தியடையும் மட்டமொன்றில் உள்ளக தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு கிடைக்கப்பெறும் தன்மை.

(iv) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு/ பத்திரங்களற்ற தீர்ப்பனவு முறைமை பங்கேற்பு மற்றும் வியாபார உபாயத்திற்காக அடுத்த ஐந்து ஆண்டுகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் தடங்கலற்ற வியாபாரத் திட்டம் கிடைக்கப்பெறும் தன்மை.

(v) தேசிய கொடுப்பனவு முறைமையுடன் இணைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் தேவைப் படுத்தலுடன் இணங்கும் விதத்தில் தகவல் தொழில்நுட்ப தொடர்பூட்டல் உட்கட்டமைப்பினை நிறுவுவதற்கான உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியின் இயலுமை. பின்வருவன குறைந்த பட்சத் தேவைப்படுத்தல்களாகும்:

- சுவிப்ற் தொடர்புகை
- இலங்கை மத்திய வங்கி பரந்த பிரதேச வலையமைப்புத் தொடர்புகை
- தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான அறிவினையும் அனுபவத்தினையும் கொண்டிருத்தல்

(ஆ) நேரடிப் பங்கேற்பாளர்களாக அல்லது வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களாக நியமிப்பதற்கு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் தகைமையினைக் கணிப்பிடுவதற்கு மேற்குறித்த பிரமாணத்தின் மீது இலங்கை மத்திய வங்கியினால் உருவாக்கப்பட்ட புள்ளி மதிப்பெண் அட்டை முறை பயன்படுத்தப்படுகின்றது.

(இ) நேரடிப் பங்கேற்பாளர்களாக அல்லது வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களாகத் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிளைத் தெரிவுசெய்வதில் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முகாமைத்துவத் தரம் மற்றும் அதன் சாதனைப் பதிவேடு என்பவற்றை இலங்கை மத்திய வங்கி மேலே குறிப்பிடப்பட்ட பிரமாணங்களுக்கு மேலதிகமாகப் பரிசீலனையில் கொள்ளும்.

(ஈ) உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றினை நேரடிப் பங்கேற்பாளராக அல்லது வணிகர் நேரடிப் பங்கேற்பாளராக நியமிப்பதற்கு எப்போதாவது அது அவசியமெனக் கருதக்கூடிய ஏதேனும் வேறு அவசியமான/ தொடர்புடைய காரணிகளை பரிசீலனையில் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி தற்றுணிபினைக் கொண்டுள்ளது.

(உ) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவொன்று நேரடிப் பங்கேற்பாளராக அல்லது வணிகர் நேரடிப் பங்கேற்பாளராக உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியின் தகைமையினை மதிப்பீடு செய்யும்.

**2. நியதிகளும் நிபந்தனைகளும்**

தெரிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், இதன் கீழ் எடுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை என்பவற்றில் நேரடிப் பங்கேற்பாளர்களாக/ வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களாகத் கருதப்படும்.

(அ) தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியானது பதிவுசெய்யப்பட்ட இருப்புக்கள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம், உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம், நாணய விதிச் சட்டம் மற்றும் லங்காசெட்டில் முறைமை விதிகள் என்பனவற்றின் கீழ் நேரடிப் பங்கேற்பாளர்கள்/ வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு ஏற்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு பிணையங்கள் தீர்ப்பனவுக் கணக்கு மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கொன்று வழங்கப்படும்.

(ஆ) காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கு இலங்கை மத்திய வங்கியின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி வழங்கப்படும்.

(இ) உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம், பதிவுசெய்யப்பட்ட இருப்புக்கள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம், நாணய விதிச் சட்டம் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம் என்பனவற்றின் நியதிகளுக்கமைய தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை என்பனவற்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி ஏக அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.

**இணைப்பு ஆ**

**இடைநிறுத்தல் அறிவித்தல்கள்**

**அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் இடைநிறுத்தப்பட்ட கொடுப்பனவு செய்திகளுக்கான (MT097) இடை நிறுத்தல் அறிவித்தல் குறியீடுகள்**

| நிலைமைக் குறியீடுகள் | விபரம் |
|---|---|
| LA070 | உறுதிப்படுத்தத் தவறியமையின் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது |
| LA071 | சமர்ப்பிக்கின்ற அல்லது பெறுகின்ற அங்கத்தவர் அறியப்படாமையினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது |
| LA072 | பதிவின் மீது அல்லது காத்திருத்தலின் போது இடைநிறுத்தப்பட்டு ‘மூடப்பட்டுள்ளது’, ‘நிராகரிக்கப் படுகின்றது’ அல்லது ‘முடிவடைந்துள்ளது’ ஆக கொடுப்பனவு வகை நிலைப்படுத்தப்பட்டுள்ள மைக்கான தீர்ப்பனவு நிலைமை (அதாவது இவ்வகைக் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதனை அல்லது செயன்முறைப்படுத்துவதனை மத்திய கணக்கீட்டு முறைமை நிறுத்தியுள்ளது) |
| LA073 | செல்லுபடியற்ற பெறுமதி திகதியின் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது |
| LA074 | இவ்வகைக் கொடுப்பனவுகளுக்காக கொடுப்பனவுப் பதிவு அனுமதிக்கப்படாமையினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. |
| LA075 | பயன்படுத்தப்படவில்லை. |
| LA076 | பங்கேற்கும் நிறுவனம் தவணை தவறுதலில் இடம்பெற்றுள்ளதினால் நிறுத்தப்பட்டுள்ளது. |
| LA077 | இரட்டைக் கொடுப்பனவு |
| LA078 | செல்லுபடியற்ற கொடுப்பனவு |
| LA079 | இரத்துச் செய்யப்பட்டுள்ளது |
| LA080 | மத்திய கணக்கீட்டு முறைமையில் பிழை |
| LA081 | செல்லுபடியற்ற வடிவம் |
| LA082 | நிதியங்கள் போதாமை (நிதியங்கள் போதாதுள்ளவிடத்து கொடுப்பனவுகள் காத்திருப்பதற்கு அனுமதிக்காத விதத்தில் சமர்ப்பிப்பவர் வகை மாற்றியமைக்கப்பட்டுள்ளது). |
| LA083 | கொடுப்பனவுச் செய்தி வகைக்காக குறைந்தபட்சம் அனுமதிக்கப்பட்ட தொகையினை விட குறைந்த தொகை |
| LA084 | தகைமையற்ற பற்றுக் கணக்கு |
| LA085 | தகைமையற்ற வரவுக் கணக்கு |
| LA086 | பணம் தூயதாக்கலுக்கெதிரான தூய்மையாக்கி மூலம் நிராகரிக்கப்பட்டது |

**இணைப்பு இ**

**முதலீட்டாளர் வகைப்படுத்தல் - நன்மைபெறும் சொந்தக்காரர் வகைகள்**

| நன்மைபெறும் சொந்தக்காரர் வகை | நன்மைபெறும் சொந்தக்காரர் வகையின் விபரம் |
|---|---|
| S | தனி |
| C | கூட்டு |
| 2 | இணைந்த (2) |
| 3 | இணைந்த (3) |
| 4 | வெளிநாட்டுத் தூதரகங்கள் |
| 0 | மத்திய வங்கி |
| 1 | ஊழியர் சேம நிதியம் |
| 5 | ஊழியர் நம்பிக்கை நிதியம் |
| 6 | நிதிக் கம்பனிகள் |
| 7 | படையினர் |
| 8 | அரசாங்க அதிகாரசபை |
| 9 | அரசாங்கச் சபை |
| A | அரசாங்கக் கூட்டுத்தாபனம் |
| B | அரசாங்கத் திணைக்களம் |
| D | அரசாங்க நிதியம் |
| E | அரசாங்க ஓய்வூதிய நிதியம் |
| F | பணிக்கொடை நிதியம் |
| G | தனிப்பட்டவர் |
| H | காப்புறுதிக் கம்பனி |
| I | குத்தகைக் கம்பனி |
| J | உரிமம்பெற்ற வர்த்தக வங்கி |
| K | உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி |
| L | சந்தை இடைத்தரகர் |
| M | அமைச்சு |
| N | பணத்தரகுக் கம்பனி |
| O | பரஸ்பர நிதியம் |
| P | ஏனையவை |
| Q | முதனிலை வணிகர் |
| R | தனிப்பட்ட நிதியம் |
| T | தனியார் சேம நிதியம் |
| U | பொதுச் சேவை சேம நிதியம் |
| V | சேமிப்பு நிறுவனம் |
| W | பங்குத் தரகுக் கம்பனி |
| X | நம்பிக்கைக் கூறு |
| Y | தனியார் நிறுவனங்கள் |
| Z | சங்கம்/ கழகம்/ அமைப்பு |

**இணைப்பு ஈ**

**பங்கேற்பாளர் வங்கி அடையாளப்படுத்துநர் குறியீடுகள்**

| | பங்கேற்பாளர் | வங்கி அடையாளப்படுத்துநர் குறியீடு |
|---|---|---|
| 1 | அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட் | HNBSLKLX |
| 2 | அமானா பாங்க் லிமிடெட் | AMNALKLX |
| 3 | இலங்கை வங்கி | BCEYLKLX |
| 4 | சீன வங்கி | BKCHLKLX |
| 5 | கப்பிட்டல் அலையின்ஸ் லிமிடெட் | CALDLKLX |
| 6 | கார்கில்ஸ் பாங்க் லிமிடெட் | CGRBLKLX |
| 7 | இலங்கை மத்திய வங்கி | CBCELKLX |
| 8 | மத்திய வைப்பக முறைமை லிமிடெட் | CDSPLKLC |
| 9 | சிற்றிபாங்க் என். ஏ | CITILKLX |
| 10 | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | CCEYLKLX |
| 11 | டொயிஷ் பாங்க் ஏஜி | DEUTLKLX |
| 12 | டிஎவ்சிசி வர்த்தன பாங்க் பிஎல்சி | DFCCLKLX |
| 13 | ஊழியர் சேம நிதியம் | CBCELKLXEPF |
| 14 | என்றஸ்ட் செக்குற்றிட்டீஸ் லிமிடெட் | CSSLLKLX |
| 15 | பெஸ்ட் கப்பிட்டல் ரெஷறீஸ் லிமிடெட் | FCTLLKLX |
| 16 | ஹபீப் பாங்க் லிமிடெட் | HABBLKLC |
| 17 | ஹட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி | HBLILKLX |
| 18 | கொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேஷன் | HSBCLKLX |
| 19 | இந்தியன் பாங்க் | IDIBLKLC |
| 20 | இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் | IOBALKLC |
| 21 | எம்சிபீ பாங்க் லிமிடெட் | MUCBLKLC |
| 22 | நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி | NDBSLKLX |
| 23 | நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி | NTBCLKLX |
| 24 | நற்வெலத் செக்குறிட்டீஸ் லிமிடெட் | NWSLLKLX |
| 25 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட் | NSBFLKLX |
| 26 | பான் ஏசியா பாங்கிக் கோப்பரேஷன் பிஎல்சி | PABSLKLX |
| 27 | பீப்பிள்ஸ் பாங்க் | PSBKLKLX |
| 28 | பேர்ப்பெஜுவல் ரெசறீஸ் லிமிடெட் | PPTLLKLX |
| 29 | பப்ளிக் பாங்க் பேர்காட் | PBBELKLX |
| 30 | சம்பத் பாங்க் பிஎல்சி | BSAMLKLX |
| 31 | செலான் பாங்க் பிஎல்சி ஸ்ரன | SEYBLKLX |
| 32 | ஸ்ரான்டட் சார்டட் பாங்க் பிஎல்சி | SCBLLKLX |
| 33 | ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா | SBINLKLX |
| 34 | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி | UBCLLKLC |
| 35 | வெல்த்ரறஸ்ட் செக்குட்டீஸ் லிமிடெட் | WTEYLKLX |

02 - 264